இன்னும்
(விசுவாசங்கொண்டோரே!)
உங்களில் ஒரு கூட்டத்தார்
(மனிதர்களை)
நன்மையின்பால்
அழைக்கின்றவர்களாகவும்,
நல்லதைக்கொண்டு (மக்களை)
ஏவுகின்றவர்களாகவும்,
தீய செயல்களிலிருந்து (அவர்கள்)
விலக்குகின்றவர்களாகவும்
இருக்கட்டும்;
அவர்கள்தாம் வெற்றிபெற்றோர்.

மேலும், தங்களிடம்
தெளிவான சான்றுகள்
வந்த பின்னரும்
தங்களுக்குள்
பிரிவை உண்டாக்கிக்கொண்டு,
(கருத்து)
வேறுபட்டுப் போனார்களே
அத்தகையோரைப்போல் நீங்களும்
ஆகிவிட வேண்டாம்;
அத்தகையோருக்கு
மகத்தான வேதனை உண்டு.
(அல்குர்ஆன் 3:104,105)

அபூ தாலிப்

நரகவாதியா?

அப்துல் ரஸாக்

இலக்கு 01

அபூதாலிப்

நரகவாதியா?

ஆய்வுத்தொகுப்பு–01

அப்துல் ரஸாக்

வெளியீடு

இலங்கை அஹ்லுல்பைத் நிலையம்
இல: 410, காலி வீதி

கொழும்பு–03

Title: Abuthalib Narahawadhiya?
Author: Abdul Razzak
Publisher: Sri Lanka Ahlul Baith Centre,
410, Galle Road, Colombo 03.
First Edition: 20.01.2008
Pages: 140
Copyright: Author
Printer : Com Print System, HL 1/2, Dias Place, Colombo 12.
Price: 195/=

முஹம்மத் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களில் வாழ்ந்து மறைந்த உண்மையாளர்களின் பண்பியலை சிதைக்கின்ற விதமாக ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்களது குடும்பத்தினரின் கடும் பகைவர்களினால் உருவாக்கப்பட்டு, அவர்களின் சந்ததியினரால் வாழையடி வாழையாக மிகக் கவனமாக காவி வரப்பட்டு இன்றுவரை தனது கருத்துக்களின் செல்வாக்கில் சிறிதும் வீரியம் குன்றாது பேணப்பட்டு வருகின்ற நச்சுக் கருத்துக்களின் சுயரூபத்தை தோலுரித்துக் காட்டும் ஆய்வுத் தொகுப்பு.

முகவுரை

மகத்துவமும் மேன்மையுமுள்ள அல்லாஹுத் தஆலாவுக்கே அனைத்துப் புகழும் உரித்தாகட்டும்.

யா அல்லாஹ்! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரது குடும்பத்தவர்கள் மீதும் ஸலவாத்தும், ஸலாமும் பொழிவாயாக!

எந்த ஒரு முழு நிறைவான காரியத்திற்கும், அதனுடைய வெற்றிக்கும் பலரது முயற்சி தேவைப்படுகின்றது.

இந்த ஆய்வுத் தொகுப்பும் அதில் இருந்து வேறுபட்டதில்லை. இதனடிப்படையில் - இந்த ஆய்வுத் தொகுப்பின் உருவாக்கத்திற்கு மூன்று குழுவினரின் பங்களிப்புக்கள் மிக இன்றியமையாததாக இருந்து வந்தன.

முதலாவது குழு அபூதாலிப் அவர்களைப் பற்றிய விளக்கங்களையும் அவர் பற்றிய உண்மைகளையும் எனக்கு புரியவைத்தவர்கள்.

அதில் குறிப்பாக எனது இலக்கை சரியான திக்கில் திசை திருப்பிய எனது கௌரவத்திற்குரிய ஆசான் கௌஸ் சேர் அவர்களை நான் மிக நன்றியுடன் நினைவு கூர கடைமைப்பட்டுள்ளேன்.

கௌஸ் சேர் அவர்களுடன் அவருடைய குடும்பத்தினரும் எனது குடும்பத்தினரும் நன்றியுடன் மீள நினைத்துப் பார்க்க உரித்துடையவர்கள். ஏனெனில், எனது இந்த ஆய்வுத் தொகுப்பில் பல மாதங்கள் நான் கௌஸ் சேர் அவர்களுடன் அவருடைய வீட்டில் இரவு எட்டு மணியிலிருந்து நள்ளிரவு வரை வாதப் பிரதிவாதங்களில் காலத்தைக் கடத்த வேண்டிய நிலைக்கு ஆளாகியிருந்தோம்.

அவ்வாறான அனைத்து சமயங்களிலும் சகிப்புத்தன்மையுடன் இந்த சங்கடங்களை சகித்துக் கொண்டு உதவி செய்த அவருடைய குடும்பத்தினரும், எனது இந்த முயற்சிக்கு உறுதுணையாய் இருந்த எனது குடும்பத்தவர்களும் இந்த ஆய்வுத் தொகுப்பின் பிரதான பங்காளிகளாவர்.

இலங்கையில் உள்ள மிகப் பிரபலமான தலைமைத்துவ உலமா ஒருவரை இங்கு நன்றியுடன் நினைவு கூர கடமைப்பட்டுள்ளோம்.

அபூதாலிப் அவர்கள் பற்றிய அவரது பகிரங்க சொற்பொழிவொன்றே எனது இந்த ஆய்வுத் தொகுப்புக்கு களம் அமைத்துக் கொடுத்தது. தவிர, அவரது இரண்டாவது பகிரங்க சொற்பொழிவில் எனது கருத்தை ஏற்றுக்கொண்ட அவரது பிடிவாதமில்லாத உயரிய செய்கை எம்மை இந்த பணியில் உற்சாகமாக ஈடுபட துணை செய்தது.

இந்த ஆய்வுத் தொகுப்புக்கு மிக உற்சாகமாக, மிக பக்க பலமாக, தனது நேரத்தைத் தாராளமாகத் தந்து எல்லா வகையிலும் ஒத்துழைத்து அழகான முறையில் அச்சிட்டுத் தந்த நண்பர் நிஸார்தீனையும் அவரது அலுவலக உதவியாளர்களையும் நன்றியுடன் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

இது தவிர, இந்த ஆய்வுத் தொகுப்புக்கு கருத்துக்களையும், ஆதாரங்களையும் தந்து உதவிய உலமாக்களையும் மிகவும் நன்றியுடன் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

இந்த ஆய்வுத் தொகுப்பிற்கு அவசியமான அனைத்து செய்திகளையும், சம்பவங்களையும், ஆதாரங்களையும் என்னால் இயலுமானவரை சிறப்பாக கையாள்வதற்கு முயற்சித்துள்ளேன்.

என்றாலும், இதனை இன்னும் சிறப்பாக அமைப்பதற்கு உங்களால் உதவ முடிந்தால், என்னால் அடுத்து வரும் பதிப்புக்களை மேலானதாக, சிறப்பானதாக வெளிக்கொணர முடியும் என்று எண்ணுகின்றேன்.

ஆதலால் உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் எனது அடுத்த பதிப்பில் இன்ஷா அல்லாஹ் இடம் உண்டு.

எனவே, யாரெல்லாம் இந்த ஆக்கத்திற்கு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எனது நன்றிகள்

வஸ்ஸலாம்.

அப்துல் றஸாக்
முஹர்ரம் 10 1429
20.01.2008

முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள்; நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவரை புறக்கணிக்காதீர்கள்
(அத்தியாயம் 8 வசனம் 20)

(மனப்பூர்வமாகச்) செவியேற்காமல் இருந்து கொண்டே, "நாங்கள் செவியுற்றோம்" என்று (நாவால் மட்டும்) சொல்கின்றவர்கள் போன்று நீங்கள் ஆகிவிடாதீர்கள்.
(அத்தியாயம்: 8 வசனம்: 21)

நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் உயிர்ப்பிராணிகளில் மிக்க கேவலமானவர்கள் (உண்மையை) அறிந்து கொள்ளாச் செவிடர்களும், ஊமைகளும்தாம்.
(அத்தியாயம்: 8 வசனம் 22)

பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலானோரை நீர் பின்பற்றுவீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள்.

(அல் குர்ஆன் 6:116)

ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் இறைவனை ஏற்றுக் கொண்ட முஃமினாக இருந்தார்களா? அல்லது இறை நிராகரிப்பாளராக இருந்தார்களா? என்ற விடயம் இந்த ஆய்வுரை மூலம் முற்றுப் பெறுகின்ற விடயம் அல்ல.

ஏனெனில், முடிவுகாண முடியாத பல கருத்து வேறுபாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கின்ற புனித மார்க்கம் தான் எமது இஸ்லாம் மார்க்கம். ஏதாவது ஒரு விடயத்திற்கு ஒரு முடிவு அல்லது முற்றுப்புள்ளி வைத்த அடுத்த நிமிடம் அந்த விடயம் முடிந்து விடுகின்ற நிலைமையில், முற்றுப் பெறுவதற்கு முடியாத நிலைமையில், கருத்து வேற்றுமைகளில் சிந்தனைக்கும் ஆய்வுகளுக்கும் களம் அமைத்திருக்கும் இஸ்லாம், அந்தக் கருத்து வேற்றுமைகளின் கருத்துக்களில் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையே உள்ள வித்தியாசங்களை சிந்தித்து உணர்வதற்கு வழி செய்து வைத்திருக்கிறது.

கருத்து வேற்றுமைகளில் உள்ள ஏதாவது ஒரு விடயம் அறிஞர்களுக்கு முன்னால் வரும் பொழுது, அதனை எதிர் கொள்கின்ற அறிஞர்கள் மூன்று விதமான பிரிவுகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ பிரிந்து விடுகிறார்கள்.

ஒரு கருத்தினை உண்மையை உணர்ந்து அதனை ஏற்றுக் கொள்கின்ற நிலைமையில் ஒரு பிரிவினரும், அதே கருத்தை மறுக்கின்ற நிலைமைக்கு இன்னுமொரு பிரிவினரும் அதே கருத்தினை பிடிவாதமாக மறுக்கின்ற நிலைமைக்கு இன்னொரு பிரிவினரும், இவை இரண்டும் இல்லாத நடு நிலைமையில் மூன்றாவது பிரிவினரும் பிரிந்துவிடுவது இயல்பு.

இந்நிலையில், இதில் எந்தப் பிரிவினரின் ஆளுமை இந்த சமூகத்தில் செல்வாக்குச் செலுத்துகிறதோ, அவர்களின் கருத்தியலின் பிரதி பிம்பமாக இந்த சமூகம் மாறிவிடுவதே யதார்த்தம்.

கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கு இத்தகைய கருத்துப்பிரிவினரின் பின்புலமாக இருந்து செயற்பட்டமையால் அரசியல் அதிகாரத்தில் யாரெல்லாம் இருந்தார்களோ அவர்களின் விருப்பத்திற்கேற்ப, அவர்கள் ஆதரிக்கின்ற பிரிவினரின் கருத்துக்களே இந்த சமூகத்தில் தனது ஆளுமையை செலுத்தியும், அக்கருத்தில் இந்த சமூகத்தினரை கண்மூடித்தனமாக நம்ப வைத்து தமது இலக்குகளை அதன் மூலம் அடைந்து கொள்வதற்குரிய உத்தியாக இந்த நம்பிக்கையை அவர்கள் பயன்படுத்தியும் வந்தனர்.

அறிவியல் துறை எப்பொழுது எமது சமூத்தில் தனது செல்வாக்கை செலுத்தத்துவங்கியதோ அன்றிலிருந்து எமது சமூகத்தின் சிந்தனைப் போக்கு மாற்றம் கண்டு உண்மைகளைத் தேடி அறிந்து அதற்கு ஆதரவு நல்குவது என்ற நிலைமையின் விளைவுதான் இந்த ஆய்வு.

உலக முடிவு நாள்வரை இந்நிலைமை தொடரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இந்த யதார்த்தத்தில் உண்மைகளை நாம் அறிந்த விடயங்களை சிந்தனையைத் தூண்டும் வழி வகைகளில் மக்கள் முன் சமர்ப்பிப்பது எமது கடமையாகிறது.

இப்பொழுது ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் இறை நிராகரிப்பாளர் என்று இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை தடம் பிரள வைத்த புகாரி ஹதீஸ் கிரந்தத்தில் உள்ள ஹதீஸ்களையும் அவைகள் எவ்வளவு தூரம் உண்மைக்கு முரணாக தோற்றம் பெறுகின்றன என்பதையும் எமது சிந்தனைக்கு எடுத்து கவனிப்போம்.

புகாரி கிரந்தம் 5ம் பாகம் 222ம் ஹதீஸ்
தலைப்பு :-
ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் கதை

அல்-அப்பாஸ் பின் அப்துல் முத்தலிப் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் அவர் எமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களிடம் "உங்களை பாதுகாக்கின்ற விடயத்தில் தனது சமூகத்தாரை பகைத்துக் கொண்ட, உங்கள் சார்பாக தனது கூட்டத்தினருடன் கோபமாக நடந்து கொண்ட உங்களது பெரிய தந்தை (அபூதாலிப்)அவர்களுக்காக அல்லாஹ்விடம் மன்றாடு வீர் களா?" என்று கேட்டேன். அதற்கு முஹம்மது (ஸல்) அவர்கள் "நரகத்தினுடைய ஆழம் குறைந்த பகுதியில் அவர் இருப்பார். நான் இல்லாத நிலைமையில் அவர் நரகத்தின் ஆழமான பகுதியில் இருந்திருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கும்." என்று கூறியதாக பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

எங்களது தூய ஈமானுக்கு அல்லது நம்பிக்கைக்கு பங்கம் கற்பிக்கும் முகமாக மிக நுணுக்கமாக புனையப்பட்டிருக்கும் இந்த ஹதீஸை மேலோட்டமாக கவனிக்கும் அனைவரும், புஹாரி ஹதீஸ் கிரந்தத்தில் இது பதியப்பட்டிருக்கும் ஒரே காரணத்தினால் இதில் எதுவித சந்தேகமும் இல்லை என்கிற அதீத தன்னம்பிக்கைக்கு ஆட்பட்டு தம்மை அறியாமலேயே இதனைப் பற்றி சற்று ஆழமாக ஆராய்வதற்கு தயங்கி பொய்மைக்கு துணைபோகின்ற பாவத்தை தம்மை அறியாமல் செய்து விடுவதுதான் பரிதாபம்.

நீதிக்கும், உண்மைக்கும் புறம்பான இந்த ஹதீஸை சற்று கவனமாகப்பார்த்தால் உங்களால் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்ற முரண்பாடுகளை மிக இலகுவாக உணர்ந்து கொள்ள முடியும்.

1. அரபு மொழியில் உள்ள மூலப் பதிவில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களுடைய பெயர் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

2. மொழி பெயர்ப்பில் அடைமொழி சேர்க்கைக்குள் மட்டுமே ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் பெயர் பலவந்தமாக இணைக்கப்பட்டு இந்த ஹதீஸ் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களைப் பற்றி பிரலாபிப்பது போன்றதொரு மாயை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

3. அபூதாலிப் (ரழி) அவர்களின் பெயர் அடைப்புக்குறிக்குள் பலவந்தமாக இணைக்கப்பட்டு கருத்து வடிவம் கொடுக்கப்பட்ட அநீதமான செயற்பாடு ஒன்றே இது அவர்பற்றிய அறிவிப்பு இல்லை என்பதற்கு உறுதியான ஆதாரமாக இருக்கிறது என்பதை கருத்திற்கொள்ளவும்.

4. “நரகத்தின் ஆழமான பகுதி” என்கிற பகுதி முகைரா இப்னு ஸுஃபா என்கிற ரஸூல் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தினருடன் கடும் பகை கொண்டிருந்த, அக்காலத்தில் வெளிப்படையாகவே நன்னடத்தையில்லாதவர் என்று கணிக்கப்பட்ட ஒருவரினால் மொழியப்பட்டிருப்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

5. அப்துல் மலிக் இப்னு உமைர், அப்துல் அஸீஸ் ரவார்தி, ஸுஃபியான் அல் தவ்ரி ஆகியோர் இந்த ஹதீஸ் அறிவிப்பில் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். இவர்களால் கூறப்படுகின்ற அல்லது இவர்கள் தொடர்பு படுகின்ற அனைத்து ஹதீஸ் அறிவிப்புக்களும் மிகப் பலவீனமானது என்று இஸ்லாமிய அறிஞர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பொழுது இந்த இரண்டாம் ஹதீஸை கொஞ்சம் கவனியுங்கள்.

புஹாரி முஸ்லிம் :- 5ம் பாகம் 223ம் ஹதீஸ்
தலைப்பு :-
முந்திய ஹதீஸின் தலைப்பின் தொடராக வருவதுபோல் இது வடிவமைக்கப் பட்டிருக்கிறது.

அல் முஸையப் அறிவிக்கிறார்கள்: அபூதாலிப் உடைய மரணப்படுக்கையின் போது பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் அபூதாலிப்பிடம் வந்தார்கள். அந்நேரம் அபூதாலிப்பின் அருகே அபூ ஜஹ்ல் அமர்ந்திருந்தான்.

பெருமானார் அவர்கள் அபூதாலிப்பை நோக்கி சொன்னார்கள் “எனது பெரிய தந்தையே வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத்தவிர யாருமில்லை என்கிற கலிமாவை சொல்லுங்கள். இந்த வார்த்தையானது அல்லாஹ்வின் முன்னிலையில் உங்களுக்காக என்னை வாதாடுவதற்கு அனுமதிக்கும்” என்றார்கள்.

அப்பொழுது அவர் அருகே இருந்த அபூஜஹ்லும், அப்துல்லா பின் உமையா ஆகியோர் இருவரும் “யா அபூதாலிப்! நீங்கள் எமது முன்னோரின் மார்க்கமான அப்துல் முத்தலிப் உடைய மார்க்கத்தை விட்டும் விலகி விடவா போகிறீர்கள்?” என்று தொடர்ச்சியாக தமது வேண்டுகோளை அவர் முன் வைத்தவர்களாக இருந்தார்கள்.

இறுதியாக ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் தனது இறுதி மரண சாசனமாக (மரணிப்பதற்கு முன்னால்) “நான் அப்துல் முத்தலிபின் மார்க்கத்திலேயே இருக்கிறேன்” என்று கூறிய நிலையில் மரணித்தார்கள்.

அப்பொழுது பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் “நான் தடுக்கப்படும் வரை உங்களுக்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கோரிக் கொண்டிருப்பேன்” என்றார்கள்.

உடனே கீழ்வரும் குர்ஆன் வசனங்கள் பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஹஸரத் அபூதாலிப்பை விளித்து அருளப்பட்டன.

"முஷ்ரிக்குகள் (இணைவைப்பாளர்கள்) தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாதிகள் என்று தெளிவாக்கப்பட்ட பின் அவர்களுக்காக மன்னிப்பு கோருவது நபிக்கும், ஈமான் கொண்டவர்க்கும் தகுதியானதல்ல."

(அல் குர்ஆன் 9:113)

அத்துடன் கூடவே அடுத்த வசனமும் அருளப்பட்டது.

"(நபியே) நீர் நேசிப்பவர்களை (யெல்லாம்) நிச்சயமாக நேர்வழியில் செலுத்திவிட உம்மால் முடியாது; ஆனால், அல்லாஹ் தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகின்றான். மேலும் நேர்வழி பெற்றவர்களை அவன் நன்கறிகிறான்."

(அல் குர்ஆன் 28:56)

புஹாரி கிரந்தத்தில் பதிவாகியிருக்கும் இந்த ஹதீஸும் உண்மைக்கு முரணாக புனையப்பட்டு புஹாரி கிரந்தத்தில் பதிய வைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் எமது தாழ்மையான அபிப்பிராயமாகும்.

ஏதோ ஒரு வகையில் இது எமது மார்க்க அறிஞர்களின் கண்களில் மண்ணை தூவி விட்டு, புகாரி கிரந்தத்தில் மிக நுணுக்கமாக பதிக்கப்பட்டு எமது சமூகத்தவர்களிடையே பகிரப் பட்டிருக்கிறது என்பதுதான் எனது கருத்து.

இனி இந்த முரண்பாடுகளை கொஞ்சம் கவனியுங்கள்.

ஹதீஸ் - முரண்பாடு ஒன்று

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு அல்குர்ஆன் ஆயத்துக்களும் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் மரணத்தின் பொழுது எமது முஹம்மது (ஸல்) அவர்களை எச்சரித்தும், ஆறுதல் படுத்தியும் அருளப்பட்டது போல உருக் கொடுக்கப்பட்டு இந்த ஹதீஸின் உண்மை நிலைமைக்கும், ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் இறை நிராகரிப்பை உறுதி செய்வது போலவும் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது இங்கு நன்கு புலனாகும்.

ஆனால் இதயத்துடிப்பை ஒரு கணம் நிறுத்தி, எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கும் உண்மை யாதெனில் இந்த இரண்டு

அல்குர்ஆன் வசனங்களும் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களது மரணத்தின் பொழுது அருளப்படாததும் அது எவ்வகையிலும் அவர்களை விளித்து அருளப்படாமலும் இருந்ததுதான்.

ஸூறா கஸஸ் 28 வது அத்தியாயத்தின் 56வது வசனம் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் மரணிப்பதற்கு சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னரும், தூறா பராஅத் 9 வது அத்தியாயத்தின் 113 வது வசனம் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் மரணித்து சுமார் 12 வருடங்களுக்குப் பிறகும் ஹிஜ்ரி 9ம் ஆண்டு துல்கஅதா மாதம் அல்லது அதனையொட்டிய காலத்தில் இறக்கியருளப் பட்டதாக வலுவான ஆதாரங்கள் வரலாற்றில் அப்பட்டமாக பதிந்து வைக்கப்பட்டிருக்க, இந்த புனையப்பட்ட போலிகள் எமது சில அறிஞர்களின் கண்களுக்குத் தட்டுப்படாமல் போன விடயம் மிகப் புதிரானது.

நபிகளாரின் குடும்பத்தின் முன்னோர்களைப் பற்றி தவறாக அர்த்தம் கற்பிக்கின்ற முறையில் இவ்வாறு புனையப்படுகின்ற போலிகளின் நிஜசொரூபம் எமது அறிஞர்களின் கண்களை விட்டும் தப்பி விடுவதற்கு மிக முக்கிய காரணம் எமக்குக் கிட்டும் கருத்துக்களில் நாம் எம்மையறியாமல் அதீத நம்பிக்கை கொள்வதுதான்.

எதையும் ஆராய்ந்து பார்க்குமாறு அல்லாஹ்வும் அவனது அல்குர்ஆனும் எம்மை ஆர்வமூட்டினாலும், எமது ஆசிரியர்களிலும், அவர்கள் எழுதிய புத்தகங்களிலும் நாங்கள் வைக்கும் மரியாதை, நம்பிக்கைகள் என்பவற்றை நன்குணர்ந்த ஷைத்தானிய சக்திகள் அவைகளில் ஊடுருவி, எமது நம்பிக்கைகளைக் கொண்டே எமது தூய நம்பிக்கைக்கு (ஈமானுக்கு அல்லது அகீதாவுக்கு) சாவு மணி அடித்திருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

இந்த மார்க்க அறிஞர்களை குற்றம் சொல்வதில் பலனில்லை. ஏனெனில், அவர்களது ஆசிரியர்கள் கூறிய கருத்துக்களில்

முழுநம்பிக்கை வைத்து அதனையே இவர்கள் பகிரங்கப்படுத்துகிறார்கள்.

இவர்களது ஆசிரியர்களை குற்றம் சொல்வதில் பலனில்லை. ஏனெனில், அவர்கள் அவர்களது காலத்து அறிவுக்கு ஏற்ப, தாம் கற்ற உண்மைகளை அவர்களது சீடர்களுக்கு இறை திருப்தியை எதிர்பார்த்து வழங்கிவிட்டு மறைந்து விட்டார்கள்.

உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கு வழிகள் இல்லாத நிலைமைகளில் இந்த நிகழ்வுகளில் எதுவித தவறும் காணமுடியாது.

ஆனால், உண்மைகள் உணரப்படுவதற்கு ஆயிரமாயிரம் வழிவகைகள் தோற்றம் பெற்றதன் பின்னர் உண்மை எது? பொய் எது? என்று பிரித்தறியக் கூடிய காலங்களில் இவ்வகையான தவறான நிகழ்வுகள் உண்மைகளை வெளிக் கொணரக் கூடிய விளைவுகளை உருவாக்கிவிடுவதே விதி.

நிஜங்கள் இப்படி இருந்தாலும், இதில் வருந்தக் கூடிய வேடிக்கை யாதெனில், இந்தத்தவறான கருத்துக்களை வெளியிடுகின்ற அல்லது இந்தத்தவறான கருத்துக்களின் அடிப்படையில் பிரசங்கங்கள் நிகழ்த்துகின்ற இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள் அனைவரும் உண்மையான இறையச்சம் உடையவர்களாக இருப்பதும், இவர்களது உரைகளில் அல்லது கருத்துக்களின் மூலம் நிஜமாக இறைவனின் திருப்தியை ஆதரவு வைத்து இந்த விடயங்களை இவர்கள் முஸ்லிம் சமூகத்தின் முன்னிலையில் வைக்க, இதன் காரணமாக கிளர்ந்தெழுகின்ற உண்மையான கருத்துக்களின் எழுச்சிகளை உண்மைக்கு எதிரான நிகழ்வுகள் என கணித்து, அவற்றை ஓரம் கட்டி அந்த எழுச்சிகளுக்கு எதிராக “அல்லாஹ்வின் பெயரில்” இவர்களும் வரிந்து கட்டிக் கொண்டு கிளர்ந்து விடுவதும் தான்.

இங்கு தான் ஷைத்தானின் அற்புதமான சூட்சுமம் விளையாடத் துவங்குகிறது. அல்லாஹ்வுக்காக வேண்டி, அல்லாஹ்வின் பெயரால், உண்மையும் பொய்யும், ஹக்கும் பாத்திலும் மோதத் துவங்குகின்றன.

இங்கே இரு பிரிவுகளும் முஸ்லிம்களே. இரண்டு பிரிவுகளும் ஆதரவு வைப்பது அல்லாஹ்வின் திருப்தி ஒன்றையே, ஆனால், இரண்டு பிரிவுகளில் ஒன்று சத்தியத்திலும் மற்றது தம்மை அறியாமல் அசத்தியத்திலும் அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வுக்காக எதிரெதிராக களமிறங்கியிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் எமது கருத்துக்களைப் பற்றிய கவனம், எமது சிந்தனைகளைப் பற்றிய சரியான தெளிவு, எமது பேச்சுக்களைப் பற்றிய எச்சரிக்கைகள் அனைத்தும் உண்மைகளாகவும், சத்தியமானதாகவும் இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

தமது ஆசிரியர்களின் கருத்துக்களில் கொள்ளும் அதீத பற்றுமிக்க நம்பிக்கையும், விடயங்களை சரியாக ஆராய்வதற்கு சரியான நேரங்கள் கிடைக்காமையும் எமது நல்ல உலமாக்களை வெறும் கருத்துக் காவிகளாக மாற்றி விடுகிறது. இதுவே இன்றய இந்த கருத்துக் குழப்பங்களுக்கு முதல் படியாகும்.

ஹதீஸ் - முரண்பாடு இரண்டு

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்புகளின் படி இன்னுமொரு வரலாற்றுப் பதிவுக்கு முரணான விடயம் ஒன்று நடைபெற்றுள்ளதை உங்களது கவனத்திற்கு கொண்டுவரலாம்.

நுபுவ்வத்தின் ஆறாம், ஏழாம் வருடங்களில் சில அற்புத நிகழ்வுகள் இஸ்லாமிய சரித்திரத்தில் நடந்தேறியுள்ளன. அன்றைய காலப்பிரிவில் தான் முஸ்லிம்களில் ஒரு பகுதியினர் ஹஸரத் உஸ்மான் (ரழி) அவர்களின் தலைமையில் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் சென்றனர். அதில் ரஸூல் (ஸல்) அவர்களின் மகளும் உஸ்மான் (ரழி) அவர்களின் அன்பு மனைவியுமான அன்னை ருக்கையாவும் இணைந்திருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

நபி இப்ராஹிம் (அலை) அவர்களுடைய குடும்பத்தினருக்குப் பின்னர் ஹிஜ்ரத் சென்ற முதல் குழுவினர் என்கிற பெருமை இவர்களைச் சாரும்.

இந்த முதலாவது ஹிஜ்ரத் நடைபெற்ற வருடத்தில் ஒருநாள் ரமழான் மாத இரவில் முஹம்மது (ஸல்) அவர்கள் க.்.பாவுக்கு வந்தார்கள். அங்கே குறைஷிக் காபிர்களின் பெருங் கூட்டம் ஒன்று கூடியிருந்த நிலைமையில் ரஸுல் (ஸல்) அவர்கள், அக்கூட்டத்தினர் முன் திடீரென தோன்றி சூறா அந்நஜ்மை ஓதத்துவங்கினார்கள்.

திடீரென அல்லாஹ்வின் அருள் வாக்கியங்களை நபி (ஸல்) அவர்களின் கணீரென்ற குரலில் ஒலிக்கக் கேட்ட பொழுது, அனைத்து குறைஷிக் காபிர்களும் அந்த ஒலி நயத்துக்கு, அதன் உண்மையான வசீகரத்துக்குக் கட்டுப்பட்டு திக்பிரமைபிடித்து திகைத்து திணறி நின்றார்கள்.

உள்ளத்தை கிடுகிடுக்க வைக்கும் தொனியிலான அந்த அல்குர்ஆனிய வசனங்கள் கடும் எச்சரிக்கையுடனும், நபி (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தின் உண்மையுடனும் குறைஷிகளின் செவிப்பறைகளில் விழ அதன் இறுதி வசனம் "ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு ஸுஜுது செய்யுங்கள் அவனையே வணங்குங்கள்" என்று இவர்களைப் பணிக்க, ரஸுல் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து இதனைக் கேட்ட அனைத்து குறைஷிகளும் தம்மையறியாமலே ஸுஜுதில் விழுந்தனர்.

இந்த அற்புத செய்தி அபிஸீனியாவிற்கு காற்றினுங் கடுகி சென்றடைய, அங்கே இருந்த கிறிஸ்தவ பாதிரிகளில் சுமார் இருபது பேர்களை கொண்ட ஒரு தூதுக் குழு உடனே றஸுல் (ஸல்) அவர்களைக் கண்டு அவரது தூதுத்துவத்தின் உண்மையை அறிய மக்கா வந்து சேர்ந்தனர்.

ரஸுல் (ஸல்) அவர்களை அவர்களுடைய விருந்தினர்களாக இருந்த அந்த தூதுக் குழுவினர் உண்மையை விசாரித்துணர்ந்து உடனே இஸ்லாத்தை ஏற்றனர்.

இந்த சமயம்தான் இந்தத் தூதுவர்களை விளித்து, ஸுறா கஸஸ் 51ம் ஆயத்தில் இருந்து 55ம் ஆயத் வரை இறக்கி அருளப்பட்டு அந்த கிறிஸ்தவ பாதிரிகளுக்கு நன்மாராயம் கூறியும், தொலை தூரத்தில் உள்ளவர்களால் உணரப்படக் கூடிய உண்மைகளை, குறைஷிகளால், குறைஷிகளிலே ஒருவராக உள்ள நபி (ஸல்)

அவர்களின் தூதுவத்தின் மகிமையைப் பற்றி உணர்ந்து கொள்ள முடியாத அலட்சியத் தன்மைகளை விளக்கி அவர்களை நாணமுறச் செய்யக் கூடியதாக இறக்கி அருளப்பட்டன.

இந்த குர்ஆனிய வசனங்களின் வெளிப்பாட்டால் நாணமும் கோபமும் கொண்ட அபூலஹப் - இந்தப்பாதிரிகள் இருந்த இடம் நோக்கி வந்து இவர்களை தாறுமாறாக தூற்றத் தொடங்கினான்.

தனது கௌரவத்துக்குரிய விருந்தினர்களை அகௌரவப்படுத்தும் தனது பெரிய தந்தையின் அநாகரிக செய்கையால் எமது பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் வேதனைப்பட்டார்கள்.

அபூலஹப்பை எதிர்த்து அவரால் எதுவும் செய்ய இயலாத நிலைமையில் அவர்களை ஆறுதல் படுத்தும் வகையில் அல்லாஹுத்தாஆலா ஸுறா கஸஸ் இன் 56ம் ஆயத்தை அருளினான்.

"(நபியே) நீர் நேசிப்பவர்களை (யெல்லாம்) நிச்சயமாக நேர் வழியில் செலுத்திவிட உம்மால் முடியாது. ஆனால், அல்லாஹ் தான் நாடியவர்களை நேர் வழியில் செலுத்துகின்றான். மேலும் நேர்வழி பெற்றவர்களை அவன் நன்கறிகிறான்."

(அல் குர்ஆன் 28:56)

(இந்த வசனம்தான் அபூதாலிப் (ரழி) அவர்கள் மரணித்த சமயம் எமது ரஸுல் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்டது என்று அல் முஸையாப், அல் முகைரா ஆகியோர் குறிப்பிடுவதாக குறிப்பிடப்பட்டுள்ளதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவும்.)

ஆபூலஹப்பின் இந்த அடாவடித்தனமான செய்கையினால் உந்தப்பட்ட அபூஜஹ்ல் உடனே க.்.பத்துல்லாவிற்கு வந்து அல்லாஹ்வின் மீது ஆணையிட்டவனாக, அடுத்த நாள் காலை முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனை வணங்கி ஸுஜுதில் இருக்கும் பொழுது அவரின் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டு அவர்களை கொன்று விடப் போவதாக பகிரங்கமாக அறிவித்து அவன் கூறிய படியே கல்லைத் தூக்கி தலையில் அடிக்க முனைந்த சமயம் அந்தப் பெரிய பாராங்கல் அவனுடைய கைகளில் ஒட்டி

அவனால் அவன் சொன்ன பிரகாரம் செய்யமுடியாமல் ஏனையோரின் நகைப்பிற்கு ஆளான கதை மிகமிக பிரசித்தமானது.

அவனது இந்தப் பகிரங்க செய்கைக்கு பிறகுதான், ரஸுல் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த பெரும் தலைவர் அபூதாலிப் (ரழி) அவர்கள் உடனே தமது குடும்பத்தினரையும், பனுஹாஸிம் கிளையினரையும், இஸ்லாத்தை ஏற்றிருந்த ஸஹாபாப் பெருமக்களையும் க.்.பதுல்லாவிற்கு அழைத்து, குறைஷிக் கா.்.பிர்களின் தலைவன் அபூஜஹ்ல், உமையாக்களின் தலைவர் அபூ ஸுபியான் ஆகியோரது கூட்டுச் சேர்க்கைகளுக்கும், அவர்களது கூட்டு எதிர்ப்புக்களை எதிர் கொள்வதற்கும் தயாராக இருக்கக் கூடிய நிலையில் ஒரு கூட்டு ஒப்பந்தத்தை தனது ஆதரவாளர்கள் மத்தியில் செய்தார்கள்.

இந்த குழுவினரில் முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை ஏற்றிருக்காத கா.்.பிர்களில் அநேகர் அபூதாலிப் (ரழி) அவர்களிடமும் முஹம்மது (ஸல்) அவர்களின்பால் கொண்டிருந்த அபிமானத்துக்காவும் க.்.பாவில் ஒன்றுபட்டனர் என்பதால் இந்த உடன்படிக்கை சரித்திரத்தில் விஷேடமாக பதியப்பட்டிருக்கிறது.

இங்கே முஹம்மது (ஸல்) அவர்களின் ஆதரவாளர்கள் குழு அபூதாலிப் (ரழி) அவர்களின் தலைமையிலும், அவர்களின் எதிர்ப்பாளர்களின் குழு, அபூஜஹ்ல், அபூஸுபியான் ஆகியோரின் தலைமையிலும் இரு வேறுபட்டு கடும் பகையுடன் ஒருவரை ஒருவர் நேரில் கண்டால் வெட்டிக் கொலை செய்து கொள்வது என்கிற தீவிரத்தில் இருந்தார்கள் என்பதே வரலாறு.

தவிர, அபூஜஹ்ல் முஹம்மது (ஸல்) அவர்களின் தலையில் கல்லைப் போட்டு கொல்ல முயற்சித்தது பிரபலமாகி இருந்த காரணத்தினால் அபூதாலிப் (ரழி) அவர்களும் அவருடைய சகோதரர் ஹம்ஸா (ரழி) ஆகியோர் அபூஜஹ்லை நேரில் கண்டால் அவனை கொன்றுவிடுவதாக சூளுரைத்து அவனையும் அவனது ஆதரவாளராக இருந்த அபூஸுபியான் இருவரையும் தேடிக் கொண்டிருந்தனர் என்ற விடயமும் வரலாற்றில் பதியப்பட்டுள்ள இன்னுமொரு பிரசித்தமான பதிவாகும்.

இது தவிர அபூஜஹ்ல் உடைய கையில் கருங்கல் ஒட்டிய கதை பரவலாக பேசப்பட்டதால், சாதாரண மக்கள் பெருமானார் (ஸல்) மீது வைத்திருந்த மதிப்பும் நம்பிக்கையும் இன்னும் கூடியது. இதன் விளைவாக அபூஜஹ்ல், அபூஸுபியான் கூட்டத்தினர் மீது அவர்கள் வைத்திருந்த ஆதரவை விலக்கி ஒரு பகுதியினர் அபூதாலிப் (ரழி) அவர்களது கூட்டத்தினருக்கு ஆதரவாகவும் ஏனையோர் யாரையும் சாராது நடுநிலமையிலும் இருக்கத் தலைப்பட்டனர்.

இந்த சூழ்நிலைமையின் படு பயங்கரத்தை உணர்ந்த அபூஜஹ்ல், அபூஸுபியான் ஆகியோர் இதனை எதிர் கொள்ள இன்னுமொரு சூழ்ச்சி செய்தனர்.

மக்காவில், க.்.பதுல்லாவில் தமக்கிருந்த செல்வாக்குகளை இழந்த நிலைமையில் இந்த இரண்டு குறைஷிக் காபிர்களின் தலைவர்களும் தம்முடன் எஞ்சியிருந்த சில ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு க.்.பத்துல்லாவை விட்டும் மிகத் தொலைவில் உள்ள கினானா கிளையினர் வசித்து வந்த முஹஸ்ஸப் என்கிற பள்ளத்தாக்கில் இரகசியமாக ஒன்று கூடி சில தீர்மானங்களை வகுத்தனர்.

அங்கே முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில், தமது பணப்பலத்தையும், மக்காவிற்கு வெளியேயுள்ள தமது வியாபார தொடர்புகளையும் உபயோகித்து அங்கே எடுத்த தீர்மானங்களை ஒரு ஒப்பந்தமாக, உடன்படிக்கையாக அபூ தாலிப் (ரழி) அவர்களுக்கு எதிராக எழுதி அதனை இரகசியமாக க.்.பாவில் தொங்க விட்டு விட்டனர்.

க.்.பாவில் தொங்கவிடப்படுகின்ற அனைத்து அறிவுறுத்தல்களுக்கும், உடன்படிக்கைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும் கௌரவமளிப்பது அன்றய அரபுகளின் மரபாக இருந்தது.

புனித அல்குர்ஆனின் வசனங்கள் அருளப்பட்டதன் பின்னர், அல்குர்ஆனிய வசனங்களுடனும் அதன் ஆளுமையுடனும் தாக்குப்பிடிக்க முடியாமல் போனதன் பின்னர்தான் க.்.பத்துல்லாவில் தொங்கவிடப்பட்டிருந்த அனைத்து அறிவுறுத்தல்களும், அனைத்து

சட்டதிட்டங்களும் அதனை எழுதியவர்களாளேயே அல்லது அதனை வகுத்தவர்களாளேயே கழற்றி எறியப்பட்டு கஃ. பத்துல்லாஹ்வில் மனிதர்கள், அல்லது சமூகத்தலைவர்களால் நிர்மாணிக்கப்படும் செய்திகள், சட்டங்கள், தீர்மானங்கள் தொங்கவிடப்படும் மரபு வழிமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட செய்கை இன்னுமொரு வரலாற்று அத்தாட்சியாகும்.

இதன் அடிப்படையில், இந்த ஒப்பந்தத்திற்கு மரியாதை கொடுக்கும் நிமித்தம் அபூதாலிப் கணவாயில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் தமது ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு, அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தீர்மானங்களுக்கு மதிப்பு அளித்து மூன்று வருடங்கள் காஃபிர்களால் மிகக் கடுமையாக கடைபிடிக்கப்பட்ட பொருளாதார தடைக்கு ஆளானார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த அவல நிகழ்வுகளாகும்.

இங்கே ஒரு முக்கிய விடயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

அபூதாலிப் (ரழி) அவர்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக பகிரங்கமாக கஃபாவில் ஒன்றுகூடி தனது ஆதரவாளர்களிடையே ஒப்பந்தம் செய்தார்கள்.

அங்கே செய்யப்பட்டிருந்த ஒப்பந்தம் எழுத்துரு கொடுக்கப்பட்டு புனித கஃபாவில் தொங்க விடப்பட்டிருந்தால், குறைஷிகள் கொண்டு வந்த பொருளாதார தடைக்கு வாய்ப்பிருந்திருக்க வழியில்லை.

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக, பெருமானார் (ஸல்) அவர்களுக்கு உதவுவது என்று தீர்மானிக்கப்பட்ட அனைத்து ஒப்பந்தங்களும் அல்லது கூட்டுத் தீர்மானங்கள் யாவும் என்றுமே எழுத்துரு கொடுத்து அதன் மூலம் மக்களை கட்டுப்படுத்துவதாக இருந்திருக்கவில்லை என்பதே நிஜம்.

அவை அனைத்தும் உள்ளம் சம்மந்தப்பட்டதாக, உளப்பூர்வமாக உள்ளங்கள் இணைந்த செய்கைகளாக இருந்து, அல்லாஹ்வுடனான தொடர்புகளாக அங்கீகரிக்கப்பட்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அபூதாலிப் (ரழி) அவர்கள் தனது தலைமையில் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக இருப்பது என்று தீர்மானித்த விடயம், கஃபாவில் நடைபெற்ற நாம் உரையாடிக் கொண்டிருக்கும் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு ஆதரவான இந்த உடன்படிக்கை, முதலாவது அகபா, இரண்டாவது அகபா உடன்படிக்கைகள், ஹுதைபிய்யாவுக்கு முன்னர் ஹஸரத் உதுமான் (ரழி) அவர்கள் சம்பந்தப்பட்டதாக நடைபெற்ற இன்னுமொரு உடன்படிக்கையென இவைகளை கோடிட்டுக் கொண்டு செல்லமுடியும்.

இத்தகைய உடன்படிக்கைகள் யாவும் தலைவரின் கையில் தனது கையை அழுத்திப் பிடிப்பதன் மூலம் தான் தனது உறுதியை உளப்பூர்வமாக வெளிப்படுத்தி சுயமாக தன்னை இந்த உடன்பாட்டுக்குள் கொண்டுவரும் தூய உளப்பூர்வமான செயற்பாடுகளாக இருந்ததே தவிர, யாரும் யாரையும் கட்டுப்படுத்தி அத்தகைய செயற்பாட்டுக்குள் பலவந்தமாக திணிக்கும் செயல் முறையாக இருக்கவில்லை என்பதே வரலாறு எமக்கு உணர்த்தும் செய்தியாக இருக்கிறது.

ஆனால், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எதிராக, மிகமிக இரகசியமாக கஃபாவை விட்டும் மிகமிகத் தொலைவிலுள்ள 'முஹஸ்ஸப்' பள்ளத்தாக்கில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம் கஃ. பத்துல்லாஹ்வில் தொங்க விடப்பட்ட ஒரே காரணத்தால் அது சட்டரீதியானதாக கருதப்பட்டது.

புனித கஃ.பத்துல்லாஹ்வுக்கு கொடுத்த மரியாதையின் நிமித்தமே இதனை அபூதாலிப் (ரழி) அவர்கள் ஏற்றுக் கொண்டு இந்த அநீதமான உடன்படிக்கைக்கு உடன்பட்டார்.

இதில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களினதும், அவர்களது கூட்டத்தினரினதும் பெருந்தன்மையும், அபூஜஹ்லுடையதும், அபூஸுபியானுடையதும் நயவஞ்சகத் தனமும் தெட்டத் தெளிவாக புலனாகிறதல்லவா?

இந்தப்பள்ளத்தாக்கில் தினமும் இரவில் நடைபெற்ற, மக்களால் மறக்கப்பட்டிருக்கும் இன்னுமொரு வியப்பளிக்கும் விடயத்தை இங்கு நினைவு கூர்வது உசிதம் என்று கருதுகின்றேன். இந்த காஃ. பிர்களின் நயவஞ்சக சூழ்ச்சிகளைப் பற்றி ஹஸரத் அபூதாலிப்

(ரழி) அவர்களுக்கு பெரும் அச்சம் இருந்து வந்தது.

அபூதாலிப் (ரழி) எப்போதும் தனது விரிப்பிலேயே முஹம்மது (ஸல்) அவர்களை தூங்கச் செய்வார்கள். ஆனால் அவரோ அனைவரும் தூங்கும் வரை கண்விழித்திருப்பார்.

அனைவரும் உறங்கியதன் பின்னர், தனது பிள்ளைகள், அல்லது சகோதரர்கள், அல்லது தனது சிறிய பெரிய தந்தையின் பிள்ளைகள் ஆகியோரில் யாரையாவது ஒருவரை நபியவர்களைப் படுக்கவைத்த விரிப்பில் அதாவது தனது விரிப்பில் மாற்றி உறங்க வைத்து விட்டு முஹம்மது (ஸல்) அவர்களை வேறு விரிப்பில் படுக்க வைத்து விடுவார்கள்.

மக்கள் தூங்குவதற்கு முன் கொலைகாரர் யாராவது முஹம்மது (ஸல்) அவர்களை கண்காணித்திருந்தால், அவர்களை திசை திருப்புவதற்காகவே இவ்வாறு செய்வார்கள்.

இவ்வாறான நெஞ்சை நெகிழ வைக்கும் சம்பவங்கள் நிறைந்த இந்த பொருளாதார தடையால் இவர்கள் அனைவரும் இலை, குழை மற்றும் காய்ந்த தோல்களைக் கூட உண்பதற்கு நிர்பந்திக்கப்பட்ட நிலைமைகள் நாமனைவரும் அறிந்த உண்மைகள்.

இரவில் சரியாக தூக்கமின்மை, தேவையான உணவு, தண்ணீர் கிடைக்காமை போன்ற அசௌகரியங்களின் விளைவால் பொருளாதார தடை இரத்து செய்யப்பட்ட வருடமே ஹஸரத் அபூதாலிப் (ரழி) கடும் நோய்வாய்ப்பட்டார்கள்.

இந்த நோயே அவர்களை மரணிக்கும் அளவுக்கு தாக்கியது என்பது வரலாற்று உண்மை.

இந்நிலைமையில் இவர்களது கடும் பகைவன் அபூஜஹ்ல் இவருடைய அருகில் இருந்ததாகவும், இந்த இடத்துக்கு வேறு எங்கோ இருந்து வந்த ரஸூல் (ஸல்) அவர்கள் புனித இஸ்லாம் மார்க்கத்தை, ஏற்றுக் கொள்ளுமாறு அபூதாலிபை வேண்டி நின்றார்கள் என்பது எந்த வகையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமாகத் தெரிகிறது?

அபூஜஹ்லை கண்ட இடத்தில் கொல்வதாக சூளுரைத்திருந்த நிலையில் அபூதாலிப் (ரழி) இருந்திருக்க, அவருடைய மரணப்படுக்கை அருகே அபூஜஹ்ல் இருந்திருப்பான் என்பதை புத்தியுள்ள எந்த மனிதனும் ஏற்றுக் கொள்வானா?

அபூதாலிப் (ரழி) மரணத்துக்குக் காரணமாக கடுமையான நோய் இருந்தாலும், இந்நோய் அவர்களைப் பீடிப்பதற்கு பெரும் காரணமாக அவர்கள் அனுபவித்த பொருளாதாரத் தடையும் அந்தத் தடையால் விளைந்த அயர்வுகளுமே காரணம் என்பதை வரலாற்றுப் பதிவுகள் எமக்குத் துல்லியமாக தெளிவுபடுத்துகின்ற அதே சமயம் அந்தப் பொருளாதாரத் தடையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு மிக முக்கிய காரண கர்த்தாக்களாக அபூஜஹ்ல், அபூஸுபியான், அபூஉமையாஆகியோர் இருந்தனர் என்பதையும் குறிப்பிடுவதற்கு மறக்கவில்லை என்பதை கவனிக்கவும்.

இந்த வகையில் அபூதாலிப் (ரழி) சுகயீனத்திற்கும் கஷ்டத்திற்கும் அவர்பட்ட இன்னலுக்கும் காரணமானவர்களாக இருந்த அபூஜஹ்ல், அபூஸுபியான், அபூ உமையா ஆகியோர் இஸ்லாத்தில் மிகப் பெரும் வீரர்களான ஹஸரத் உமர் (ரழி), ஹஸரத் ஹம்ஸா (ரழி) அபூதாலிப் (ரழி) அவர்களது புதல்வர் ஹஸரத் அலி (ரழி) ஆகியோர் ஹஸரத் அபூதாலிப் அவர்களை அவர்களது இறுதி நேரத்தில் சுற்றி புடை சூழ இருந்திருக்க முஸ்லிம்களினதும் இஸ்லாத்தினதும் கடும் பகைவனான அபூஜஹ்ல் அபூதாலிப் அவர்களின் வீடு வந்து அவரின் பக்கத்தில் உட்கார்ந்து உபதேசம் செய்தான் என்பதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

சரி அவன்தான் மதியீனனாக வந்து பெரியவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களது படுக்கையின் அருகே இருந்தாலும், அவனை அப்படியே விட்டு வைக்க ஹஸரத் ஹம்ஸா (ரழி) ஹஸரத் உமர் (ரழி) ஹஸரத் அலி (ரழி) ஆகியோர் வெறும் கோழைகளாய் பார்த்துக்கொண்டுதான் இருந்திருப்பார்களா?

இவர்களது வீரத்துக்கு முன்னால் இவர்களில் ஒருவரையாவது எதிர் கொள்ளக் கூடிய துணிவில் அபூஜஹ்ல் இருந்திருப்பானா?

எவ்வளவு நாசூக்காக முஸ்லிம் வீரப் புத்திரர்களின் வீரத்தை இழிவு படுத்தியும், நயவஞ்சக கோழைகளை சிங்கத்தின் குகையிலேயே அமர்ந்து இருந்தார்கள் என்பதுபோல் பெரும்

வீரர்களாக காட்ட முயற்சித்திருக்கும் சூட்சுமந்திரம் இந்த ஹதீஸை நுணுக்கமாக கவனிக்கும் பொழுது புரிகிறதல்லவா?

முஹம்மது (ஸல்) அவர்கள், ஹஸரத் அபூபக்கர் (ரழி), ஹஸரத் உமர் (ரழி), ஹஸரத் ஹம்ஸா (ரழி), ஹஸரத் அலி (ரழி) ஆகிய பெரும் வீரமிக்க இஸ்லாத்துக்காக தனது இன்னுயிரையே துச்சமென மதித்த ஸஹாபாப் பெருமக்களுடன் அபூதாலிப் (ரழி) அவர்களுடைய முத்தலிப் குடும்பத்தினரும், பனூஹாஷிம்களும், ஏனைய ஆதரவாளர்களும் புடை சூழ இருந்த மரணத்தருவாயில், அந்த அல்லோல கல்லோலமான சமயம் அபூசுபியான் அபூ உமையா போன்ற பெரும் கா∴பிர்களுக்கு அங்கு கிஞ்சித்தும் இடமில்லை என்பதை நீங்கள் இப்பொழுது விளங்கி இருப்பீர்கள் என்று நினைக்கிறோம்.

அபூஜஹ்ல், அபூஸுபியான் ஆகியோர் அபூலஹப் அபூஸுபியானுடைய தங்கையை மணமுடித்த வகையிலும் அபூஜஹ்லுடைய தங்கை ஹிந்தாவை மணமுடித்த நிலையில் அபூஸுபியானும் ஒன்றுடன் ஒன்றாக முஹம்மது (ஸல்) அவர்களின் கடும் பகைவர்களாக இருக்க, இதில் யாரும் அபூதாலிப் (ரழி) அவர்களின் ஆதரவாளர்கள் இல்லை என்பதே அன்றைய வரலாறு எமக்கு உணர்த்தும் உறுதியான உண்மைகளாகும்.

ஹதீஸ் - முரண்பாடு மூன்று

இந்த ஹதீஸில் அபூ ஜஹ்ல் கூறியதாக கூறப்படும் அப்துல் முத்தலிப் உடைய மார்க்கம் எது என்று இங்கே ஒரு கேள்வி வருகிறது. இனி அதைப்பற்றி கொஞ்சம் கவனிப்போம்.

“ஆதமையும், நூஹையும், இப்றாஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியினரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரைவிட மேலாகத் தேர்ந்தெடுத்தான்.”

(அல் குர்ஆன் 3: 33)

“(என்) இறைவனே! தொழுகையை நிலைநிறுத்துவோராக என்னையும், என்னுடைய சந்ததியிலுள்ளோரையும் ஆக்குவாயாக!

எங்கள் இறைவனே! என்னுடைய பிரார்த்தனையையும் ஏற்றுக் கொள்வாயாக!” (அல் குர்ஆன் 14: 40)

“நினைவு கூறுங்கள்! ‘என் இறைவனே! இந்த ஊரை (மக்காவை சமாதானமுள்ளதாய்) அச்சந்தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்னையும் என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக’ என்று இப்ராஹீம் கூறியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூரும்)”

(அல்குர்ஆன்14 : 35)

“அல்லாஹ் என்னை கலப்பற்ற முதுகெழும்புகளிலிருந்து பரிசுத்த கர்ப்பறைகளுக்கு மிக அழகிய வடிவில் தெரிந்து தேர்ந்து எடுத்து நீங்காது தடையின்றி திருப்பிய வண்ணமாயிருந்தான். மக்கள் பிளவுபட்டு இரு பிரிவாகும் போது என்னை அவர்களில் சிறந்தோரில் ஆக்கிக் கொண்டிருந்தான்.” என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (தபராணி (10 – 399) ஹரஸுஸ் ஸுன்னா (பாகவி 3 – 171) மஜ்ம உஸ்ஸவாயித் (8 – 124) அபூ நுஅய்ம்

“ஆதமின் சந்ததிகளில் தலைமுறை தலைமுறையாக நான் சிறந்த தலைமுறை வழியே (மரபணுக்களில் பாதுகாக்கப்பட்டு வந்து இப்போது) நான் தோன்றியிருக்கும் (இந்தச்) சிறந்த தலைமுறையில் தோன்றி இறைத்தூதராக்கப்பட்டுள்ளேன்.” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸரத் அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புஹாரி 3559)

“இஸ்மாயில் (அலை) அவர்களின் பிள்ளைகளிருந்து கினானா கோத்திரத்தாரையும், அவர்களிலிருந்து குறைஷிகளையும், அவர்களிலிருந்து என்னையும் தேர்ந்தெடுத்தான். நான் சிறப்பானவர்களில் இருந்து வந்த சிறப்பானவராகும்” என நபி நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக வர்ஸலா இப்னு அஸ்க் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (முஸ்லிம் - 4 – 1782)

மேலே எடுத்து வைத்த சான்றுகளில் இருந்து - முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வழித்தோன்றல்கள் என்றும், அந்த வழியில் வந்த இந்த குறைஷிக் கோத்திரமும், குறிப்பாக தலைமைத்துவத்தை தன்னகத்தே

கொண்டிருந்த முத்தலிப் கோத்திரத்தினரும் பனூஹாஷிம்களும் சிலை வணக்கத்தில் ஈடுபடாமல், அல்லாஹ்வையே தங்களது இறைவனாக ஏற்று தொழுதும் வந்தார்கள் என்பதே வரலாறு.

அன்றைய கால மக்களில் அநேகர் சிலைகளை வணங்கி வந்தார்கள் என்றாலும் ஹனீப் என்கிற ஒரு மதப்பிரிவினர் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் மார்க்கம் என்று ஓர் இறைவனை ஏற்று இறுதி நபி (ஸல்) அவர்களின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தார்கள் என்பதும், அந்த ஹனீப் மதப்பிரிவினரில் தான் முஹம்மது (ஸல்) அவர்களது குடும்பத்தினர்கள் இருந்தார்கள் என்பதும் தான் வரலாற்றில் பதியப்பட்டிருக்கும் நிஜங்கள். அது மட்டுமல்ல, அல்குர்ஆன், அல்ஹதீஸ் வழக்கிலும் அது நிருபிக்கப்பட்டுள்ளது இப்பொழுது புரிந்திருக்கும்.

அப்ரஹா மன்னன் கஃபத்துல்லாஹ்வை அழிக்க வந்த சமயம் அவனை சந்தித்த அப்துல் முத்தலிப் அவனிடம் மன்னனின் படையினா் கைப்பற்றிய தனது 100 ஒட்டகங்களை திருப்பிக்கேட்ட சம்பவமும், கஃபத்துல்லாஹ்வின் நாயன் கஃபத்துல்லாஹ்வை பாதுகாப்பான் என்று அவனுக்கு கூறிய கூற்றும் மிகவும் பிரபலமான நாம் அனைவரும் அறிந்த சம்பவங்களாகும்.

அன்றைய தினம் தலைவர் அப்துல்முத்தலிப் எல்லா குறைஷிகளையும் மக்காவை விட்டும் மலைப் பிரதேசங்களுக்கு செல்லுமாறு பணித்து விட்டு தனது குடும்பத்தினரை மாத்திரம் அழைத்துக் கொண்டு கஃபாவுக்குச் சென்று கஃபாவின் கைப் பிடியை பிடித்துக் கொண்டு அல்லாஹ்வை விளித்து அப்ரஹாவின் படையினரிடம் இருந்து தம்மை பாதுகாக்கும் படி அனைவரும் ஒருமித்து பிரார்த்தித்தனர்.

இதில் தலைவர் அப்துல் முத்தலிப் அவர்கள் தனது கைகளை ஏந்திக்கொண்டு "யா அல்லாஹ்! உனது அடிமை தனது வீட்டைப் பாதுகாக்கின்றான். உனது வீட்டை நீயே பாதுகாப்பாயாக!" என பிரார்த்தித்த பிரார்த்தனையானது அனைத்து வரலாற்று நூல்களிலும் பதியப் பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிற செய்கையானது இந்த உண்மைகளை எமக்கு உணர்ந்துகொள்ள பெரும் துணையாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

இதன் மூலம் அப்துல் முத்தலிப் உடைய மார்க்கம் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்ட மார்க்கம் என்பது தெளிவு.

உண்மை இப்படி இருந்தாலும் இப்ராஹீம் (அலை) அவர்களது வழித்தோன்றல்களில் இருந்த அல்லாஹ்வை ஏற்றுக்கொண்ட நல்லவர்களையும் இணை வைப்பாளர்கள் என்று கூறாமல் கூறுவது போல இந்த ஹதீஸ் உருக் கொடுக்கப்பட்டிருக்கிற தந்திரம் புரிகிறதல்லவா?

இனி இந்த குர்ஆன் ஆயத்தை கொஞ்சம் கவனியுங்கள்.

(இன்னும் இதையும் எண்ணிப்பாருங்கள்) இப்ராஹீமை அவருடைய இறைவன் சில கட்டளைகளையிட்டு சோதித்தான்; அவற்றை அவர் முழுமையாக நிறைவேற்றினார்; நிச்சயமாக நான் உம்மை மக்களுக்கு இமாமாக (தலைவராக) ஆக்குகிறேன் என்று அவன் கூறினான்; அதற்கு இப்றாஹீம் "என் சந்ததியினரிலும் (இமாம்களையாக்குவாயாக)" எனக் கேட்டார்; என் வாக்குறுதி (உம் சந்ததியிலுள்ள) அநியாயக்காரர்களுக்கு சேராது என்று கூறினான்." (அத்தியாயம் 2 : ஆயத் 124)

இப்புனித அல்குர்ஆன் கருத்துப்படி இப்ராஹீம் (அலை) அவர்களுடைய சந்ததியில் வருகின்ற நல்லவர்களுக்கு தலைமைத்துவத்தை - இமாமிய்யத்தை கொடுப்பதாக இறைவன் வாக்களித்த அதே சமயம் அநியாயக்காரர்களுக்கு இந்த தலைமைத்துவம் அருளப்பட மாட்டாது என்று கூறியிருக்கிறான்.

அப்துல் முத்தலிப் அவர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களின் பரம்பரையில் வந்த நீதியான ஒரு தலைவர், அவருக்குப் பின்னால் அபூதாலிப் (ரழி) அவர்கள் தலைமைத்துவத்துக்கு உரியவர்களா கிறார்.

இக்குர்ஆன் கருத்துப் படி அவர் நீதியான நல்ல மனிதர். ஆகவே அவர் குறைஷிகளின் - பனூஹாஷிம்களின், முத்தலிப் குடும்பத்தினருடைய தலைவராகிறார். இன்னுமொரு பிரபல வார்த்தையில் சொன்னால் அந்த சமூகத்திற்கு அவர் கலீபாவாகிறார்.

அவர் நல்ல நீதியான அல்லாஹ்வுக்கு விருப்பமான தலைவராக இருந்த ஒரே காரணத்தினால் அவரது பாதுகாப்பில் எமது முஹம்மது (ஸல்) அவர்களை சுமார் 42 வருடங்கள் பாதுகாப்பாக வைத்து தனது தூதுத்துவத்தை இயம்பிக் கொண்டு இருப்பதற்கு இறைவன் அனுமதி அளித்தான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இந்த குர்ஆன் ஆயத்துடைய கருத்துப் படி – இறைவனை எதிர்த்து, அநீதமான, வரம்பு மீறி நடந்து கொண்ட இப்ராஹிம் (அலை) அவர்களது சந்ததியில் இருந்து வந்த அபூலஹப், அபூஜஹ்ல் போன்றோர் தலைமைத்துவத்தை இழந்து நரகத்திற்குப் போவது இறை நியதியாகும்.

ஆனால், இந்த புனையப்பட்ட ஹதீஸின் கருத்துப்படி – அபூதாலிப் (ரழி) கா.்.பிர் அல்லது இறை நிராகரிப்பாளர் என்று நாம் கருதினால் மேலே சொன்ன குர்ஆன் ஆயத்தானது வரலாற்று நிகழ்வுகளுடன் முரணாகிறது போல் தோற்றம் பெறுகிறதல்லவா?

யாருக்கும் அணுவளவுகூட அநீதம் செய்யமாட்டேன் என்று கூறி அநீதம் என்கிற பண்பையே தன்னகத்தே கொண்டிருக்காத ஏக வல்ல அல்லாஹுத் தஆலா – அபூஜஹ்ல், அபூலஹப் போன்ற அநீதக் காரர்களுடன் அபூதாலிப்பையும் இணைத்து நரகில் தூக்கி எறிந்தால், வல்லநாயன் அல்லாஹ் நீதி தவறிய, அநீதம் இழைக்கிற ஒரு கொடுமைக்காரனாக இருப்பானோ என்கிற சந்தேகத்தை இந்த ஹதீஸ் மெலிதாக நூலிழைமாதிரி எமது இதயத்தில் பதிக்க துணைபோகிற உண்மை புரிகிறதல்லவா?

நுபுவ்வத்தின் ஆரம்ப 13 வருட காலப்பிரிவில் இறை விசுவாசி என்பதற்கான அடையாளங்கள்

முதலில் நாம் அல்குர்ஆனிய கட்டளைப்படி யாரை இறைவன் இறை நிராகரிப்பாளன் என்று கூறுகிறான் என்பதைக் கவனிப்போம்.

"......... எவர்கள் அல்லாஹ் இறக்கி அருளிய சட்டத்திற்கேற்பத் தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள்தாம் நிராகரிப்பாளர்கள்"

(அல்: 5 ஆயத்: 44)

"......... எவர்கள் அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள்தாம் அநீதியாளர்கள்"

(அல்: 5 ஆயத் 45)

"......... மேலும், எவர்கள் அல்லாஹ் இறக்கியருளிய சட்டத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்கள்தாம் .்.பாஸிக்கள்-பாவிகளாவர்"

(அல்: 5 ஆயத் 46)

அல்லாஹுத்தஆலா தான் இறக்கியருளிய சட்டங்களின் படி தீர்ப்பளிக்காதவர்கள் குறித்து-

1) அவர்கள் இறை நிராகரிப்பாளர்கள் (கா.்.பிர்கள்)
2) அவர்கள் அநீதி செய்பவர்கள்-கொடுமை புரிபவர்கள் (ஜாலிம்கள்)
3) அவர்கள் பாவிகள் (.்.பாஸிக்கள்)

என்று எடுத்துரைத்துள்ளான். எவன் இறைக்கட்டளைக்கு மாறாக இறைவனின் சட்டம் தவறானது, மனிதனின் சட்டம்தான் சரியானது என்னும் கருத்தினடிப்படையில் தீர்ப்பளிக்கின்றானோ அவன் முழுமையான இறைநிராகரிப்பாளனும், கொடுமையாளனும், பெரும் பாவியுமாவான்.

ஒருவன் அல்லது ஒரு கூட்டம் அல்லது ஒரு நாடு கொள்கையளவில் அல்லாஹ்வின் கட்டளைகளை சத்தியமென ஏற்றுக்கொண்டு நடைமுறையளவில் அதற்கு மாற்றமாய் தீர்ப்பு வழங்கினால் அவன் அல்லது அந்தக் கூட்டம் அல்லது அந்த நாடு முஸ்லிம் சமுதாயத்தை விட்டும் வெளியேறாவிட்டாலும், தன் இறை நம்பிக்கையை கு.்.ப்ர் (இறைமறுப்பு), அநீதி, பாவங்கள் ஆகியவற்றுடன் கலக்கச் செய்து விட்டதாகவே பொருள் கொள்ளல் வேண்டும்.

இதைப் போன்றே யார் யாரெல்லாம் எல்லா விவகாரங்களிலும் அல்லாஹ்வின் கட்டளைகளை விட்டும் பிறழ்ந்து செல்கின்றார்களோ அவர்கள் அனைவரும் எல்லா விவகாரங்களிலும் இறை மறுப்பாளர்கள், கொடுமையாளர்கள், பாவிகளாவர்.

சிலர் சில விவகாரங்களில் இறைவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்றனர். வேறு சிலவற்றில் கீழ்ப்படியாமல் இருக்கின்றனர் எனில் அவர்களுடைய வாழ்வில் இறைநம்பிக்கை மற்றும் இறைவனுக்கு கீழ்ப்படிதல் ஆகிய தன்மைகளுடன் இறைநிராகரிப்பு, அநீதி, பாவமிழைத்தல் போன்ற தன்மைகளும் கலந்திருக்கின்றன என்று பொருள்படும்.

இவர்கள் எந்த விகிதாசாரத்தில் அவற்றைக் கலந்து விட்டிருக்கின்றனரோ அந்த விகிதாசாரத்தில் இறைவனுக்கு கீழ்படியும் போக்கும், மாறு செய்யும் போக்கும் அவர்கள் வாழ்வில் கலந்து நிற்கும்.

அல்குர்ஆனின் இந்தக் கண்ணோட்டத்துடன் இன்றைய நவீன, அறிவியல் உச்சத்தில், தகவல் துறைகளின் மிக எழுச்சி மிக்க யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று மிகத் திருப்திப்பட்டு இறுமாப்பில் இருக்கின்ற எமது நிலைமையின் பரிதாபகர போக்கையும், தூரதிஷ்ட நிலைமையையும் மிக இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

இன்றைய மத்திய கிழக்கில் கொள்கையளவில் மிகத் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இஸ்லாம், நடைமுறையிலும், சட்ட ரீதியிலும் ஷரீஅத் என்கிற போர்வையில் அன்றைய கால யூதர்களினதும், இறை நிராகரிப்பாளர்களினதும் போக்கிற்கு கொஞ்சமும் வித்தியாசப்படாமல் இருப்பதைக் காண முடியும். ஏனெனில், அந்த நாடுகளில் அமெரிக்காவின் கட்டளைகளும், சட்டங்களும் மிக அநீதமான முறையில் நிறைவேற்றப்படுவதை எவராலும் மறுக்க முடியாது.

∴பாத்திமா மன்னராட்சியின் மத்திய தளமாக விளங்கி, முழு முஸ்லிம் உலகையும் ஒரு காலத்தில் அரசாண்டு வந்த எகிப்தில் அல்குர்ஆனிய கட்டளைகள் புறக்கனிக்கப்பட்டு இன்று பிரான்ஸ் சட்ட திட்டங்களே அரசாள்கின்றன.

பெரும்பான்மை முஸ்லிம்கள் வாழ்கின்ற இந்தோனேஷியாவில் கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட

இஸ்லாம் இருக்க, நடைமுறையில் ‘பஞ்சசீல’ சட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

இறுதி இஸ்லாமிய மன்னராட்சியின் தலைமைப் பீடமாக இருந்த துருக்கியில் அமெரிக்க, பிரிட்டிஷ் சட்டங்கள் அரசால் அங்கீகரிக்கப்பட்டு பின்பற்றப் படுகின்றன.

பாகிஸ்தானில் பிரிட்டிஷ் (ரோமன் டச்) சட்டங்கள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதுவே அரசியல் சட்டமாக பின்பற்றப்படுகின்றது.

அல்குர்ஆன் இறைநிராகரிப்புக்கு வழங்கியிருக்கின்ற அடிப்படை கொள்கை வரைவிலக்கணத்துடன் இந்த நவீன உலகைப் பார்க்கும் பொழுது எமது நிலைமையின் படு பயங்கரம் இப்பொழுது விளங்கியிருக்கும்.

ஏனெனில், நாமும் விரும்பியோ விரும்பாமலோ இத்தகைய சட்ட ஆளுமையின் கீழ் தான் வாழ்ந்து மடிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இறைவனையும் அவனது கட்டளைகளையும் முழுமையாக ஏற்றுக் கொண்டோம் என்று சொல்கின்ற எமது நிலைமையின் தளமே ஆட்டம் கண்டுகொண்டிருக்க, நாம் துணிந்து எமது துர்ப்பாக்கிய நிலைமையை மறந்து இந்த இஸ்லாமிய கொள்கையை உலகில் ஸ்தாபிக்க அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட முஹம்மத் (ஸல்) அவர்களது தூதுத்துவத்தின் பாதுகாப்பிற்கு மிகப்பெரும் பாதுகாப்பு அரணாக அல்லாஹ்வால் ஏற்று அனுமதி அளிக்கப்பட்ட அந்தப் பெரியவரை இறை நிராகரிப்பாளன் என்றும், நரகவாதி என்றும் தீர்ப்பு வழங்குவதுதான்.

அன்றயகாலப்பிரிவில் இஸ்லாத்தை ஏற்பது என்பது எந்த வகையில் அடையாளம் காணப்பட்டது என்பதை நாம் கொஞ்சம் விளங்கிக் கொண்டால் அபூதாலிப் (ரழி) அவர்களின் இறை விசுவாசத்தை எம்மால் இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

நுபுவ்வத்தின் ஆரம்ப பகுதியில் ஒரு முஸ்லிமையும் இறைநிராகரிப்பாளரையும் பிரித்தறிந்து கொள்வதற்கு ஏதும் வித்தியாசமான வழி வகைகள் அக்காலப் பிரிவில் வேறாக இருக்கவில்லை.

இறை விசுவாசிகளும் இறை நிராகரிப்பாளர்களும் இரண்டறக் கலந்தே இருந்தார்கள். வித்தியாசமான வணக்க வழிபாடுகள் கூட அக்காலத்தில் அருளப்பட்டிருக்கவில்லை.

இந்நிலைமையில் அன்று எவ்வாறு இறை விசுவாசியை இறை விசுவாசி என்றும், இறை நிராகரிப்பாளரை இறை நிராகரிப்பாளர் என்றும் பிரித்துக் கணித்தார்கள் என்பதை கவனித்தால், ஒரு இறை நிராகரிப்பாளர் அல்லது இணைவைப்பாளன் முஹம்மது (ஸல்) அவர்களை எதிர்ப்பதன் மூலம் தனது இறை நிராகரிப்பை வெளிப்படுத்தினான்.

இறை விசுவாசியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவர் அவர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பாதுகாப்பதன் மூலமும் முஹம்மது (ஸல்) அவர்களது தூதுத்துவத்தை ஏனையவர்களுக்கு பிரச்சாரம் செய்வதன் மூலமும் தனது இறைவிசுவாசத்தை வெளிப்படுத்தினர்.

இதில் பெரும் தலைவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் பகிரங்கமாக முஹம்மது (ஸல்) அவர்களை ஆதரித்து அவரது பிரச்சாரத்தில் தமது குடும்பத்தவர்களை இணைந்து கொள்ளுமாறு வற்புறுத்தி இதன் காரணமாக அராபிய கோத்திரங்களனைத்தினதும் முழு அளவிலான எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார் என்பதே வரலாற்று உண்மைகளாகும்.

பெருமானார் (ஸல்) அவர்களின் ஆறு வயதில் இருந்து இறுதி மூச்சுவரை பெருமானார் (ஸல்) அவர்களைப் பாதுகாத்து வளர்த்து வந்தவர் அபூதாலிப் (ரழி) என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

தாம் கொண்ட கொள்கைக்கு தமயன் எதிரியாக இருப்பினும் அவனைக் கொலை செய்து விட்டு தனது கொள்கையைக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்ததாக அக்கால குறைஷிகளின் பண்பியல் இருந்திருக்கிறது என்பது வரலாறு கூறும் நிஜம்.

இவ்வாறான கெட்ட சுபாவம் கொண்டவராக அபூதாலிப் (ரழி) இருந்திருப்பின் கடைசித் தருணம் வரை நாயகம் (ஸல்) அவர்களை கண் இமைபோல பாதுகாத்திருக்க வாய்ப்பில்லை என்பது தெளிவு.

இக்குறிப்பிட்ட ஹதீஸ்கள் முர்ஸலான ஹதீஸ்கள் என்பதற்கான விளக்கம்

இந்த குறிப்பிடப்பட்டுள்ள ஹதீஸ்களை கொஞ்சம் கவனமாக கவனிக்கும் போது ஹஸரத் இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவித்த ஒரு ழயீபான ஹதீஸ் மற்றுமொரு வழியாக மிகவும் பலவீனமான ஸனதுடன் வந்திருப்பது புரியும்.

ஒரு ழயீபான (பலவீனமான) ஹதீஸ் பல வழியாக அறிவிக்கப் படுமானால் அது ஸஹீஹானதாக கருதப்படும் என்பதனை ஹதீதுகலை அறிவுள்ளோர் நன்கறிவர்.

இங்கே புனையப்பட்ட இந்த ஹதீஸ்கள், இவ்வாறு பல வழிகளில் அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரே காரணத்தினால் ஸஹீஹானதாக மாறி புஹாரி கிரந்தத்தில் இடம் பெற்றிருப்பதை கவனிக்கவும்.

மிகப் பிரபலமான இஸ்லாமிய ஹதீஸ்கலை ஆய்வாளர் ஸிப்ளி நூமானி எழுதிய 'ஸீரதுன் நபி' என்கிற ஆய்வுப்புத்தகத்தில் அல் முஸையப் கூறியதாக பதியப்பட்ட இந்த ஹதீஸை இப்னு இஸ்ஹாக் என்ற இன்னுமொரு ஹதீஸ் ஆய்வாளரை மேற்கோள் காட்டி குறிப்பிடப்பட்டுள்ள செய்தி யாதெனில், அபூதாலிப் (ரழி) அவர்களின் மரணத்தின் பொழுது அவரது உதடுகள் அசைந்தன. அதுவரை இஸ்லாத்தை ஏற்காத நிலையில் இருந்த அல் அப்பாஸ் தனது காதுகளை அபூதாலிப் (ரழி) அவர்களின் வாயினருகே கொண்டு சென்று அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டு விட்டு முஹம்மத் (ஸல்) அவர்களைப் பார்த்து பெருமானாரின் விருப்பத்திற்கு இணங்க அவர் கலிமாவை மொழிந்ததாக பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் கூறினார்.

ஸிப்ளி நூமானி தான் எழுதிய ஆய்வுப் புத்தகத்தில் புஹாரி முஸ்லிம் கிரந்தம் பாகம் 5இல் பதிவாகியுள்ள 223ம் இலக்க ஹதீஸின் அறிவிப்பாளர் அல் முஸையப்பைப் பற்றி குறிப்பிடும்

பொழுது "இந்த ஹதீஸை அறிவிப்பதற்கு அல் முஸையிப்பிற்கு எதுவித அதிகாரமும் இல்லை. ஏனெனில் அல் முஸையிப் மக்கா வெற்றிக்குப் பிறகுதான் புனித இஸ்லாத்தை ஏற்று இறை விசுவாசியானார். அதுமட்டுமன்றி, அபூதாலிப் (ரழி) அவர்களின் மரணத் தறுவாயில் அவர் அங்கே பிரசன்னமாகி இருக்கவில்லை." என்று கூறுகிறார்.

இதன் காரணமாகத்தான் பிரபல ஹதீஸ் ஆய்வாளர் "அல் அய்னி" என்பவர் இந்த ஹதீஸை 'முர்ஸல்' ஆன ஹதீஸாக கணித்திருக்கிறார்.

அவர் மேலும் இதைப் பற்றி குறிப்பிடும் பொழுது "அபூதாலிப் (ரழி) அவர்கள் பெருமானாருக்கு செய்த தியாகங்களை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அதேபோல் இந்த தியாகங்களின் உண்மைநிலையை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த மார்க்கத்துக்காக தனது குழந்தைகளைக் கூட பலியிடுவதற்கு அபூதாலிப் (ரழி) தயாராக இருந்தார்.

இந்த கொள்கைக்காக வேண்டி பகிரங்கமாக அவர் முழு அராபிய தீபகற்பத்தையும் பகைத்துக் கொண்டார்.

இதற்காக வேண்டி அவர் பல வருடங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு உணவு, உடை, தண்ணீர் போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு துயருறுத்தப்பட்டார்.

முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அவர் கொண்ட அன்பினால் தனது இனத்தவரினர்களது கடும் பழி சொல்லுக்கும் அவர்களது அலட்சியப் போக்குக்கும் மூர்க்கமான பகைமைக்கும் ஆளானார்.

வயோதிப வயதை அடைந்த முஸ்லிம்களுக்கு மிகவும் கண்ணியமும் மரியாதையும் கொடுக்கும் வல்ல அல்லாஹ் (தள்ளாத வயதை அடையும் ஒவ்வொரு முஸ்லிமுடைய கண்ணியத்திற்காக, அவரது பாவங்களை அல்லாஹ் நன்மைகளாக மாற்றிவிடுவதாக

அறிவித்து, முதுமையால் அல்லலுறும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் அல்லாஹ்) தள்ளாத வயதில் மரணத்தை எதிர் கொண்ட அந்தப் பெரியவரின் வாழ்வில் நடந்தேறிய இந்தப் புனிதத் தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நீதியாளனான அல்லாஹ்வினால் அலட்சியப்படுத்தப்பட்டு இதற்காக அவருக்குக் கிடைக்க வேண்டிய உரிய சன்மானங்கள் வழங்கப்படாது தடுக்கப்படுமா?" என்று கேட்டு முடிக்கிறார்.

அபூதாலிப் (ரழி) அவர்களுடைய இறுதி மரண சாசனம்

அபூதாலிப் (ரழி) அவர்களுடைய இறுதி மரண சாசனம் மிகவும் பிரபல்யமானது. இதில் அவர்கள் தம்மை சூழ இருந்த தமது ஆதரவாளர்கள் அனைவரையும் நோக்கி "முஹம்மது (ஸல்) அவர்களுடன் மிக நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு நான் உங்களுக்கு கட்டளை பிறப்பிக்கிறேன். குறைஷிகளிலும், அராபிகளிலும் அவர்தான் மிகவும் நம்பிக்கைக்குரியவர். அவர் கொண்டு வந்த தூதுத்துவத்தின் உண்மையை எல்லோருடைய இதயங்களும் முழுமையாக ஏற்றிருந்தாலும், சிலரது நாவுகள் அவர்களது இதயத்தின் உண்மைக் குரலுக்கு முரணாகவும் காழ்ப்புணர்வின் காரணமாகவும் பகைமையின் காரணமாகவும் பொய் உரைக்கின்றன.

அல்லாஹ்வின் மீது ஆணையாக யாரெல்லாம் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்கிறார்களோ அவர்கள் அனைவரும் நேர்வழி பெற்றவர்கள். யாரெல்லாம் அவரது வழிகாட்டலில் செல்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் நல்லதொரு எதிர்காலம் இருக்கிறது.

யா! பனூஹாஷிம்களே, முஹம்மது (ஸல்) அவர்களுடைய அழைப்பிற்கு பதில் அளித்து அவரை நம்பி அவர் வழி செல்லுங்கள். நிச்சயமாக நீங்களனைவரும் பெரும் வெற்றியாளராவீர்கள். அவர் உங்களை சரியான வழியில் அழைத்துச் செல்வார். நிச்சயமாக அவரது வழியே நேர்வழியாக இருக்கிறது." (ஆதாரம் அல் முஹப்பில் துன்யா, தாரீக், கமீஸ், பலுகுல் அதாப், அல்ஸீரா அல் ஹலபிய்யா, சுன்னி அல் முத்தலிப், உரூஸுல் அனாப், தபகாத் இப்னு ஸாத்)

இந்த விடயங்கள் அனைத்தும் ஸஹீஹுஸ் ஸித்தாக் கிரந்தங்களில் பதியப்படாத ஒரே காரணத்தாலும், நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிற புனையப்பட்ட ஹதீஸ்கள் ஸஹீஹுஸ் ஸித்தாக்களில் இடம் பிடித்தமையுமே எமது அறிஞர்களை கொஞ்சம் தடுமாற வைத்து தடம் புரள வைத்ததற்கான காரணமாகும்.

அபூதாலிப் (ரழி) அவர்களது சரிதையை வரலாற்று ஆதாரங் களைக் கொண்டு கவனமாக பரிசீலிக்கும் ஒவ்வொருவரும் அபூதாலிப் இறை விசுவாசியாக இருந்தார் என்பதை ஒரு போதும் மறுக்கப் போவதில்லை. ஆனால், இந்த ஹதீஸை ஆதாரமாக நம்புகின்ற ஒருவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களை சந்தேகமின்றி இறை நிராகரிப்பாளர் என்று கருதி வழி தவறி விடுவது இயல்பு.

முஹாஜிர்களில் ஒருவரான ஹாதிப் (ரழி) என்ற பத்ர் ஸஹாபாவின் பிரபலமான இன்னுமொரு சம்பவத்தை கவனியுங்கள்.

மக்கா குறைஷிகளுக்கு எதிராக நபிகளார் இறுதிப் போர் நடவடிக்கைகளை மிகமிக இரகசியமாக மேற்கொண்ட சமயம் அதைப் பற்றிய விபரங்களை எப்படியோ அறிந்து கொண்ட ஹாதிப் (ரழி) அந்த விடயத்தை குறைஷிகளுக்கு மிக இரகசியமாக தனது பணிப் பெண் மூலம் அனுப்பி வைக்க, அல்லாஹுதஆலா வஹி மூலம் இதனை பெருமானாருக்கு தெரியப்படுத்த ஹஸரத் அலி (ரழி) அப்பெண்ணைக் கண்டு பிடித்து அவளிடம் இருந்த செய்தியையும் அவளையும் பெருமானாரிடம் கொண்டு வந்தார்கள்.

ஹாதிப் (ரழி) அவர்களின் இந்த செய்கையால் கடும் கோபம் கொண்ட ஹஸரத் உமர் (ரழி) துரோகியான அவரின் தலையை கொய்து விட பெருமானாரின் உத்தரவை வேண்டி நிற்க பெருமானார் உமரை நோக்கி "நீங்கள் விரும்பியதை செய்யுங்கள். நான் உங்களை மன்னித்து விட்டேன் என பத்ரின் மக்களைப்பற்றி அல்லாஹ் கூறியிருப்பதை நீர் அறிய மாட்டீரா?" என்று கூறியதை இங்கு நினைவு படுத்த விரும்புகிறேன்.

பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்ட மக்கள் அனைவருக்கும் இவ்வாறு பகிரங்கமாக சலுகை செய்து அவர்களை உலகத்திலேயே அல்லாஹ் கௌரவித்தமைக்குக் காரணம்

அவர்கள் அனைவரும் முஹம்மது (ஸல்) அவர்களுடன் இணைந்து முஹம்மது (ஸல்) அவர்கள் கொண்டு வந்த கொள்கையை உலகில் ஸ்தாபிக்கவும் முஹம்மது (ஸல்) அவர்களை பாதுகாக்கவும் ஒன்று பட்டு இருந்த ஒரே காரணத்திற்காகவேயன்றி வேறில்லை.

யதார்த்தங்கள் இப்படி இருக்க புனையப்பட்ட ஹதீஸ்களின் தூய தன்மையைப் பற்றிய சந்தேகங்கள் எழும் போது நாம் எம்மையும் எமது எண்ணங்களையும் தூய்மைப் படுத்திக் கொள்வது மிக அவசியமாகிறது.

இஸ்லாமிய வரலாறுகளில் அபூதாலிப் (ரழி) அவர்களுக்கு எதிராக புஹாரி கிரந்தத்தில் இருக்கின்ற இந்த புனையப்பட்ட ஹதீஸை தவிர வேறு எந்த வரலாற்று குறிப்பும் அவர்களுக்கு எதிராக இல்லாமல் இருப்பதே அவர் இறை விசுவாசி என்பதற்கு உறுதியான அத்தாட்சியாகும்.

மக்கத்து குர்ஆன் ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் ஆய்வு செய்வதற்கு கையாளவேண்டிய முறைகள்

மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களால் எழுதப்பட்ட மிகப் பிரபலமான குர்ஆன் தர்ஜுமா கிரந்தத்தில் மக்காவில் அருளப்பட்ட வசனங்கள் குறித்து அவரது ஆய்வு இங்கு கவனிக்கத்தக்கது.

"மதீனாவில் இறங்கிய அத்தியாயங்களைப் பொறுத்தவரை அவை ஒவ்வொன்றும் இறங்கிய காலகட்டத்தை இலகுவாக தெரிந்து கொள்ள முடிகின்றது. அல்லது ஒரு சிறு ஆய்வின் மூலம் அதை நிர்ணயித்துவிட முடியும். சொல்லப் போனால் அந்த அத்தியாயங்களின் அனேக வசனங்கள் இறங்கியதற்கான தனித்தனி காரணங்கள் கூட நம்பத் தகுந்த அறிவிப்புக்கள் மூலம் கிடைத்துவிடுகின்றன.

ஆனால் மக்காவில் அருளப்பட்ட வாக்கியங்கள் அவ்வாறு இல்லை. மக்கத்து அத்தியாயங்களில் மிகக் குறைவான

அத்தியாயங்கள் அல்லது வசனங்கள் இறங்கிய காலமும் சந்தர்ப்ப சூழ்நிலையும் பற்றித்தான் நம்பத்தக்க சரியான ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இதனால் மக்காவில் அருளப்பெற்ற அத்தியாயங்கள் தொடர்பாக வரலாற்று ஆதாரங்களைவிட அகச் சான்றுகளையே நாம் அதிகம் நம்பவேண்டியுள்ளது. பல்வேறு அத்தியாங்களின் தலைப்பு, கருத்து, விளக்கும் பாணி ஆகியவற்றிலும், அந்த அத்தியாயங்களின் வரலாற்றுப் பின்னணி பற்றி அவற்றில் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ உள்ள சமிக்ஞைகளிலும் அந்த அகச்சான்றுகள் காணப்படுகின்றன.

இத்தகைய அகச்சான்றுகளின் துணை கொண்டு ஒவ்வோர் அத்தியாயத்தைப் பற்றியும் இது இன்ன தேதியில், இது இன்ன ஆண்டில், இன்ன சந்தர்ப்பத்தில் இறங்கிற்று என்ற துல்லியமாக நிர்ணயித்துவிட முடியாது.

ஒருபுறம் மக்காவில் அருளப்பெற்ற அத்தியாயங்களின் அகச்சான்றுகளை வைத்துக் கொள்ளல் வேண்டும். மறுபுறம் நபி (ஸல்) அவர்களுடைய மக்கா வாழ்கையின் வரலாற்றையும் வைத்துக் கொள்ளல் வேண்டும். பின்னர் இரண்டையும் ஒப்பு நோக்கிப் பார்த்து எந்த அத்தியாயம் எந்த கால கட்டத்துடன் தொடர்புடையது என்று கணித்து முடிவுக்கு வரவேண்டும்."

அவரது இக்கூற்றின் பிரகாரம் அல்குர்ஆன் வசனங்களின் விளக்கங்களுக்கே, குறிப்பாக மக்காவில் அருளப்பட்ட அனைத்து அல்குர்ஆன் வசனங்களுக்கும் வரலாற்று ஒப்பீட்டாய்வு அவசியம் என்கிற பொழுது மக்கத்து ஹதீஸ்களுக்கு இந்த வரலாற்று ஒப்பீட்டாய்வு எவ்வளவு முக்கியத்துவம் பெறுகிறது என்பது இப்பொழுது உங்களுக்கு விளங்கியிருக்கும்.

அபூதாலிப் (ரழி) அவர்களின் ஆதரவில் இருந்த நுபுவ்வத்தின் ஆரம்ப 10வருட வரலாற்றுக் குறிப்புக்கள் அனைத்தும் அபூதாலிப் (ரழி) ஒரு முஸ்லிம், மு:.மின் என்பதற்கு உறுதியான சான்றுகளாக இருக்கின்ற நிலையில், புனையப்பட்ட இந்த ஹதீஸ்கள் மாத்திரம்

அந்த பெரியவரின் பண்பியலை சிதைக்கும் விதமாக பதியப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

அபூதாலிப் (ரழி) இறை நிராகரிப்பாளர் என்கிற விடயம் உண்மையாக இருந்தால், வரலாற்று உண்மை நிகழ்வுகளும், அல்குர்ஆன் கூற்றுக்களும் ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன.

அது மட்டுமன்றி இந்த தவறான நம்பிக்கையின் விளைவாக முஹம்மது (ஸல்) அவர்களின் நடத்தையும் அல்குர்ஆனும் ஒன்றுக் கொன்று முரண்படுகின்றமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

இஸ்லாமிய வரலாற்றுப் பதிவுகளில் இஸ்லாத்தின் மிகப் பெரிய பாதுகாப்பு அரணாக இருந்த அபூதாலிப் (ரழி) அவரது பண்பியலை சிதைக்கும் வகையிலேயே இந்தக் கருத்துக் குழப்பம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ஏனெனில், நுபுவ்வத்துக்கு முன்னும் நுபுவ்வத்தின் ஆரம்பத்திலும் இருந்து தனது மரணம் வரும் வரை முஹம்மது (ஸல்) அவர்களது பாதுகாப்புக்காகவும் இஸ்லாத்திற்காகவும் உறுதியாக இறுதி வரை இருந்த இந்தப் பெரியவர் இணைவைத்தவராக மரணித்தார் என்ற கூறுவது, நம்புவது மிகப் பெரிய தவறாகும் - மிகப் பெரிய பாவமாகும்.

அல் குர்ஆன் ஆய்வுக்கு முன்னர் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள்

புனித அல்குர்ஆனின் பார்வையில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் நிலைமையை நாம் ஆய்வுக்கு எடுப்பதற்கு முன்னர் சில விளக்கங்களை உங்கள் முன் சமர்ப்பிப்பதற்கு விரும்புகிறோம்.

1. அல்குர்ஆன் மக்களுக்கு அருளப்பட்டது ஏக வல்ல அல்லாஹ்விடமிருந்து ஆகவே, அந்த அல்லாஹுத் தஆலாவிற்கு தான் அருளிய மார்க்கத்திற்கும் அதை அறிமுகப்படுத்திய முஹம்மது (ஸல்) அவர்களது நடத்தைக்கும் இடையே கருத்து முரண்பாடு தோற்றம் பெறக்கூடிய முறையில் புனித குர்ஆனிய கருத்துக்களை அருள வேண்டிய அவசியம் இல்லை

2. நுபுவ்வத்தின் ஆரம்ப காலப் பகுதியில் சில இறை நிராகரிப்பாளர்களுடன் எமது பெருமானார் (ஸல்) அவர்கள் பிரச்சினைகளின்றி இருக்க விரும்பினாலும், அவர்கள் அனைவரும் எமது கண்மணி முஹம்மது (ஸல்) அவர்க ளுக்கு பெரும் தொல்லையாகவும், அச்சுறுத்தலுமாக இருந்தார்களே தவிர பெருமானாருடன் எதுவித நல்லிணக்கப்பாட்டுடனும் இருக்கவில்லை என்பதே உண்மை வரலாறாகும்.

3. நுபுவ்வத்தின் ஆரம்ப 13 வருட காலப்பிரிவில் இறை விசுவாசிகளின் தொகை 600 ஐக்கூட எட்டியிருக்கவில்லை. இந்த சிறுதொகையினரிலும் அநேகர் ஏழைகள். இந்த ஏழை முஸ்லிம்களின் பெற்றோர்கள் அல்லது பராமரிப்பாளர்கள், இவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் சகாக்கள் என்று அறிந்ததும், துன்புறுத்தினார்களே தவிர ஒருபோதும் பாதுகாப்பளித்து பராமரிக்கவில்லை என்பதே நிஜம்.

4. குடிப்பது, சூதாடுவது, சாராயம் விற்பது போன்ற தவறுகளில் தான் குர்ஆனிய சட்டங்கள் ஆரம்பத்தில் மௌனித்து பிறகு அந்த அனுமதிகளை இரத்து செய்து முஸ்லிம்கள் தடுக்கப்பட்டார்களே தவிர, குர்ஆனிய கருத்துக்களுக்கும் அதன் கௌரவத்திற்கும் உரிய உயரிய போதனைகளுக்கும முரணாக பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு போதும் நடக்கவில்லை என்பதையும், தனது பாதுகாவலர்களாக இணைவைப்பாளர்களை பெருமானார் ஏற்று இணைவைப்பாளர்களுடன் இணங்கி நடந்து பின்னர் இறை சட்டமூலம் அவரது செய்கை தடுக்கப்படவில்லை என்பதையும் நாம் உணர்ந்து கொள்வது மிக அவசியமாகிறது.

5. நுபுவ்வத்தின் ஆரம்ப காலப்பிரிவில் பெருமானாருடன் குறைஷி இறை நிராகரிப்பாளர்கள் எதுவித இணக்கப் பாட்டிற்கும் வரத் தயாராக இருக்கவில்லை என்பதும், அவர்களுடன் பெருமானாரும் எதுவித இணக்கப்பாட்டிற்கும் வருவதற்கு ஒருபோதும் விரும்பவில்லை என்பதுமே வரலாற்று உண்மைகளாகும்.

6. நுபுவ்வத்தின் இறுதி பத்து வருட காலத்தில் அசுர வளர்ச்சிகண்ட இஸ்லாம் மிகவும் சக்தி வாய்ந்த அரசாக இணங்காணப்பட்டதன் பிறகுதான், மனித உரிமைகளுக்கும் மனித நேயங்களுக்கும் மதிப்பளித்து பிற மதங்களையும், பிற சமூகங்களையும் கௌரவிக்கும் உயரிய கொள்கை கோட்பாட்டின் அடிப்படையில், இஸ்லாம் ஒரு ஆக்கிரமிப்பு மதம் இல்லை என்பதை உலகுக்கு உணர்த்துவதற்காக பல வகையான உடன்படிக்கைகளும் அதன் விளைவாக சில இணக்கப்பாடுகளும் தோற்றம் பெற்றன.

7. புனித அல்குர்ஆனிய வசனங்களும், பெருமானாரின் வாழ்க்கை வழிகாட்டுதல்களும் உலகம் அழியும் வரை உலக மக்களுக்குரிய வழிகாட்டுதல்களே தவிர, குறிப்பிட்ட ஒரு காலப் பிரிவினரை விளித்து அருளப்பட்ட வேதமாக இஸ்லாம் ஒரு பொழுதும் இருக்கவில்லை என்பதையும் இஸ்லாம் அவ்வாறு ஒரு போதும் இருக்கப் போவதில்லை என்பதையும் கருத்திற் கொள்க.

8. நாம் ஆய்வுக்கு எடுத்துள்ள அனைத்து வசனங்களும் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களது மறைவுக்குப் பின்னர் அருளப்பட்ட வசனங்கள் என்பதால், ஒரு இணைவைப்பாளரை எமது முஹம்மது (ஸல்) அவர்கள் தனது பாதுகாவலராக எடுத்துக் கொண்டார் என்பதாக சில அறிஞர்கள் வாதிடுகிறார்கள். ஆனால் அல்குர்ஆனை அருளியவன் அல்லாஹ் என்பதையும், பெருமானாரின் பாதுகாப்புக்கு அவனே அபூதாலிப் (ரழி) என்கிற உயரிய ஒழுக்கமுள்ள, சிலைகளை வணங்காத அல்லாஹ்விடமே பிரார்த்திக்கிற ஒரு பெரும் தலைவரை நியமித்தான் என்பதையும் கருத்திற் கொள்ளவும்.

9. அபூதாலிப் (ரழி) ஒரு இணைவைப்பாளராக இருந்திருந்தால் இணைவைப்பாளர்கள் எல்லாம் அசுத்தமானவர்கள் என வர்ணித்து அவர்களை அலட்சியப் படுத்திய நிலையில் எவ்வாறு அல்லாஹ் வெறுத்து ஒதுக்குகிற ஒருவரை ரஸூல் (ஸல்) அவர்களின் பாதுகாவலராக சுமார் 42 வருடங்கள் இருப்பதற்கு அனுமதி அளித்தான்? என்ற வினா ஒரு சர்ச்சைக்குரிய இறையியல் கட்டளைகளுக்கும் ரஸூல் (ஸல்)

அவர்களின் வழிகாட்டுதல்களுக்கும் மாற்றமான கேள்வியாக மிளிர்கிறது என்பதையும் கவனிக்கவும்.

பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலானோரை நீர் பின்பற்று வீரானால் அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழிகெடுத்து விடுவார்கள். (ஆதாரமற்ற) வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் (பொய்யான) கற்பனையிலேயே மூழ்கிக்கிடக்கிறார்கள்.

(அல்குர்அன் 6:116)

அபூ தாலிப் (ரழி) காபிர் என்று கூறும் கூற்றானது எவ்வாறு அல்குர்ஆனுடன் முரண்படுகிறது என்று இனி ஆராய்ந்து பார்ப்போம்.

அல்குர்ஆன் - முரண்பாடு ஒன்று

அல் குர்ஆன் விரிவுரையாளர்களும், ஹதீஸ் கலை விற்பன்னர்களும் அல்குர்ஆன் 9ம் அத்தியாயம் ஸூரா பராஅத் அருளப்பட்ட காலம் ஹிஜ்ரி 9ம் வருடம் என்பதில் எதுவித கருத்து வேறுபாடுகளும் இன்று வரை கொள்ளவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். அதேபோல், அபூதாலிப் (ரழி) அவர்கள் உலகை விட்டும் பிரிந்தது நுபுவத்தின் 10ம் வருடம் என்பதிலும் எதுவித சந்தேகமும் இதுவரை இல்லை.

அந்த ஸூறாவிலுள்ள 23வது வசனத்தை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்.

“ஈமான் கொண்டவர்களே! உங்கள் தந்தைமார்களும். உங்கள் சகோதரர்களும், ஈமானை விட்டு குப்ரை நேசிப்பார்களானால், அவர்களை நீங்கள் பாதுகாப்பாளர்களாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களில் யாரேனும் அவர்களை பாதுகாப்பாளர்களாக எடுத்துக் கொண்டால் அவர்கள்தான் அநியாக்காரர்களாவார்கள்.”

(அல்குர்ஆன் 09:22)

இந்த ஆயத்தின் கருத்துப்படி அபூதாலிப் இணைவைப்பாளராக அல்லது இறை விசுவாசியாக இல்லாத நிலைமையில் சுமார் 42 வருடங்கள் அவர் எவ்வாறு முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பாதுகாவலராக இருப்பதற்கு இறைவன் அனுமதித்தான்?

அவசியத்திற்கு ஏற்ப அவ்வப்பொழுது தேவை கருதி குர்ஆன் வசனங்கள் அருளப்பட்ட நிலைமையில் அவர் மரணித்து 12 வருடங்களுக்குப் பிறகுதான் எமது ரஸூல் (ஸல்) அவர்களுக்கு இந்த உண்மையை தெளிவுபடுத்தி அவர்களையும் ஈமான் கொண்ட முஸ்லிம்களையும் இறைவன் எச்சரிக்க விரும்புகின்றானா?

அல்லது இணைவைப்பாளராக இருந்த அபூதாலிப் (ரழி) அவர்களை தனது நெருங்கிய பாதுகாவலராக எடுத்துக் கொண்ட எமது ரஸூல் (ஸல்) அவர்கள் பெரும் அநியாயக்காரக் கூட்டத்தில் இருந்திருப்பார்களோ என்கிற ஐயத்தை தூண்டுவதாக இது அமைகிறது அல்லவா? (நஊது பில்லாஹ்).

தவிர, அபூதாலிப் (ரழி) அவர்கள் இறைநிராகரிப்பாளராக இருந்திருந்தால், ஏகவல்ல ஏகனுக்கு இந்த இறை நிராகரிப்பாளரது தயவிலே தனது இறைத் தூதை இயம்ப வந்த எம் ரஸூல் முஹம்மது (ஸல்) அவர்களை வைத்திருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பது திண்ணம்.

ஏனெனில், அந்த நூற்றாண்டில் அப்ரஹா மன்னனின் யானைப் படையை விட்டும் தனது இல்லத்தை பாதுகாத்த அந்த வல்லவனுக்கு எம்பெருமானாரைப் பாதுகாக்க பிரிதொரு தலைவரை உருவாக்க வேண்டும் என்பது ஒரு செய்தியல்ல.

கோத்திரங்களாகவும், குழுக்களாகவும் வாழ்ந்துவந்த அக்கால மக்களில் அபூதாலிப் (ரழி) அவர்களுடைய அல்லது எமது தூதரர் முஹம்மது (ஸல்) அவர்களுடைய தந்தையாரின் கோத்திரத்தாரின் தூய்மை பற்றிய விடயங்களும், அக்கோத்திரம் அல்லாஹ்வை முழுவதுமாக விசுவாசித்து, இறுதி இறைத் தூதரை எதிர்பார்த்து காத்திருந்த எதிர்பார்ப்புகளும் (முஹம்மது (ஸல்) அவர்களுடைய தந்தையின் பெயரே அப்துல்லாஹ் - அர்த்தம் அல்லாஹ்வின் அடிமை) வரலாறு கற்ற அனைவரும் அறிந்த இரகசிய உண்மைகள்.

இந்த உண்மைகள் அனைத்தும் மிக இரகசியமாக பாது காக்கப்படக் காரணம் அன்றைய இஸ்லாமிய மன்னர்களது முஹம்மது (ஸல்) அவர்களது குடும்பத்தினருக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான அடக்குமுறைகளும் அராஜக அரசியல் கொள்கைகளும்தான்.

இன்று அந்த நிலைமைகள் இல்லை. ஏனெனில் இன்று உண்மையான இஸ்லாம் மதம் வெறும் போதனைகளுடனும் சடங்கு, சம்பிரதாயங்களுடனும் மக்களை விட்டும் அந்நியப்பட்டு எல்லா இடங்களிலும், அனைத்து நிலைகளிலும் அலட்சியப்படுத்தி அவமானப்படுத்தப்படுவதை யாரும் மறுக்கப்போவதில்லை.

நிலைமை இப்படி இருக்க இந்த உண்மைகளை உலமாக்கள் மக்கள் மத்தியில் பகிரங்கப்படுத்துவதிலுள்ள சிக்கல்கள்தான் என்ன?

அல்குர்ஆன் - முரண்பாடு இரண்டு

இப்பொழுது இந்த அல்குர்ஆன் ஆயத்தைக் கொஞ்சம் கவனியுங்கள்.

"அவர்கள் அல்லாஹ்வின் மீதும், நபியின் மீதும், அவர்மீது இறக்கப்பட்ட (வேதத்) தின் மீதும் நம்பிக்கை கொண்டிருந்தார் களானால், அவர்கள் கா∴பீர்களை(தங்களின்) உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆனால் அவர்களில் அநேகர் பாவிகளாகவே இருக்கின்றனர்." (அல்குர்ஆன் 5:81)

இந்தப் புனித அல்குர்ஆன் கருத்துப்படி அல்லாஹுத்தஆலா ஒரு இணைவைப்பாளரை அல்லது கா∴பிரை எவ்வகையிலும் எமது ரஸூல் (ஸல்) அவர்களது பாதுகாப்பிற்கு பாதுகாப்பாளராக இருந்திருக்க ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லை என்பது திண்ணம்.

1427 வருடங்களுக்குப் பிறகும், இன்றைய அறிவியல் அச்சுறுத்தல்களுக்கு கிஞ்சித்தும் அசைந்து கொடுக்காது, இன்றய யுகத்தின் Big Bang வரைவிலக்கணத்திற்குக் கூட அணுவத்தனை அளவும் வித்தியாசப்படாமல் அந்த அறிவியல் உண்மைகள்

அனைத்தையும் உள்வாங்கி, எல்லை இல்லா பிரபஞ்சத்தின் விரிவாக்களின் விடயத்திலும், இது சார்ந்த அனைத்து விஞ்ஞான உண்மைகளிலும் எதுவித முரண்பாட்டையும் தோற்றுவிக்காது எல்லோரையும் வியக்க வைத்துக் கொண்டிருக்கும் அல்குர்ஆனும், அபூதாலிப் (ரழி) அவர்களை கா∴பிர் அல்லது இணைவைப்பாளர் என்று கருதும் நம்பிக்கையுடன் மேற்சொன்ன ஆயத்தை கவனிக்கும் பொழுது, அல்குர்ஆன்- அன்றய வரலாற்று உண்மைகளை புரியாமல் பேசுவது போலவும், அந்த உண்மைகளுடன் முரண்படுவது போலவும் இந்த ஆயத்து தோற்றம் பெறுகிறது அல்லவா?

அல்குர்ஆன் - முரண்பாடு மூன்று

"ஈமான் கொண்டவர்களே! எனக்கு விரோதியாகவும், உங்களுக்கு விரோதியாகவும் இருப்பவர்களை பிரியத்தின் காரணத்தால் இரகசியச் செய்திகளை எடுத்துக் காட்டும் உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள் (ஏனெனில்) உங்களிடம் வந்துள்ள சத்திய (வேத)த்தை அவர்கள் நிராகரிக்கிறார்கள்: நீங்கள் உங்கள் இறைவனான அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டதற்காக, இத்தூதரையும், உங்களையும் வெளியேற்றுகிறார்கள்: என் பாதையில் போரிடுவதற்காகவும், என் பொருத்தத்தை நாடியும், நீங்கள் புறப்பட்டிருந்தால் (அவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள்: அப்போது) நீங்கள் பிரியத்தால் அவர்களிடத்தில் இரகசியத்தை வெளிப்படுத்தி விடுகிறீர்கள்: ஆனால், நீங்கள் மறைத்து வைப்பதையும், நீங்கள் வெளிப்படுத்துவதையும் நான் நன்கு அறிந்தவன் மேலும், உங்களிடத்திலிருந்தும் எவர் இதைச் செய்கிறாறோ அவர் நேர்வழியைத் திட்டமாக தவற விட்டு விட்டார்". (அல்குர்ஆன் 60:1)

இப்புனித அல்குர்ஆன் வசனப்படி அபூதாலிப் (ரழி) இறை நிராகரிப்பாளராக இருந்திருந்தால் அவரை தனது பாதுகாப் பாளராகவும் நெருங்கிய ஆலோசகராகவும் வைத்திருந்த முஹம்மது (ஸல்) அவர்கள் நேர்வழியை திட்டமாக தவறவிட்டுவிட்டவராகவே கணிக்கப்படும் அபாயம் இருப்பது புரிகிறதா?

அபூதாலிப் (ரழி) இறைநிராகரிப்பாளராக இருந்திருந்தால் முஹம்மது (ஸல்) அவர்கள் அவரது பாதுகாப்பினையும், தயவினையும் ஒருபோதும் ஏற்று இருக்கப் போவதில்லை. ஏனெனில் அவ்வாறான செய்கை அவரை தூதுவராக அனுப்பிய அல்லாஹ்வுக்கும், அல்லாஹ்வால் அருளப்பட்ட அல்குர்ஆன் வழி காட்டல்களுக்கும் முற்று முழுதான முரணான செயற்பாடாக இருந்திருக்கும்.

அபூதாலிப் (ரழி) இறை விசுவாசி என்பதற்கும், அவர் ஒரு மு..மின் என்பதற்கும் தெளிவான அத்தாட்சியாக, ஆதாரமாக முஹம்மது (ஸல்) அவர்கள் தனது நீண்ட கால பாதுகாவலராக அவரை ஏற்றுக் கொண்ட செய்கை புலப்படுத்தி நிற்கின்றது.

ஆனால் மேலே எடுத்துகாட்டிய அனைத்து அல்குர்ஆன் வசனங்களும், அனைத்து வரலாற்றுப் பதிவுகளும் அபூதாலிப் (ரழி) அவர்களுடையதும் அன்னாரது குடும்பத்தவர்களதும் அதாவது எமது ரஸுல் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களது ஏக விசுவாசத்தின் உண்மையை உரைப்பதாக அமைந்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த அல்குர்ஆன் வசனங்கள் அனைத்தும் பெருமானாருடன் இருந்த சஹாபாப் பெருமக்களின் உறவினர்களையும் நண்பர்களைப்பற்றியும், அந்த சஹாபாப் பெருமக்களின் இறந்து போன உறவினர் நண்பர்களைப் பற்றியும் அறிவுறுத்துவதாக அமைந்திருப்பது புலனாகும்.

ஆனால், புனையப்பட்ட இந்த போலி ஹதீஸ்களைத் தவிர, வேறு ஏதாவது அல்குர்ஆன் வசனமாவது அல்லது ஏதாவது வரலாற்று நிகழ்வாவது அபூதாலிப் (ரழி) எதிராக இருக்கக் காண்பது அரிது.

அபூதாலிப் (ரழி) அவர்கள் இறைவிசுவாசி இல்லை என்ற குற்றச்சாட்டு எதுவித ஆதாரமும் அற்றது. ஆனால், அபூதாலிப் (ரழி) அவர்களை குற்றம் சுமத்துபவர்களின் வரலாறுகளோ மது, மாது, சூது, இணைவைத்தல் என்று எல்லாவிதமான பாவச்செயல்களுடன் பிண்ணிப் பிணைந்து பின்னர் அவர்கள் இஸ்லாத்தை தழுவுவதுடன் தூய வடிவமாக மாறியதாக பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பது பிரபல்யமான உண்மைகளாகும்.

இது தவிர, அபூதாலிப் (ரழி) அவர்கள் எமது ரஸுல் (ஸல்) அவர்களை எடுத்து வளர்த்ததும், ஆதரவாக இறுதி வரை இருந்ததும், அவர் அவரது தம்பி மகன் என்ற காரணத்தால் அல்ல என்பதும் முஹம்மது (ஸல்) அவர்கள்தான் எதிர்பார்க்கப்பட்ட இறுதித் தூதரர் என்ற இறை உணர்வே அவர்களை பெருமானாருக்கு ஆதரவாக இருக்கத் தூண்டியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏனெனில், கடும் பஞ்சம் சூழ்ந்திருந்த காலப்பிரிவொன்றில் ஒருமுறை அபூதாலிப் (ரழி) அவர்கள் க..பத்துல்லாஹ்விற்கு வந்து பல உருவச்சிலைகள் க..பாவில் இருந்த நிலைமையில் பாலகர் முஹம்மது (ஸல்) அவர்களை கைகளில் சுமந்து, (சிறுவர் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது இரண்டு கைகளையும் அபூதாலிப் (ரழி) அவர்களின் கழுத்தை சுற்றி இறுக்கி அணைத்துக் கொண்டிருந்தார்) அல்லாஹ்வை விளித்து மழைவேண்டி பிரார்த்தித்ததும் அவர்களது பிரார்த்தனை முடிவுற முன்னர் பெருமழை பொழிந்த சம்பவத்தை முஸ்லிம், கிறிஸ்தவ வரலாற்று விற்பன்னர்கள் ஏகோபித்து எழுதி வைத்து இருப்பது இதற்கு உறுதியான சான்றாக அமைந்துள்ளது.

எல்லா அநாதைச் சிறுவர்களுக்கும், விதவைப் பெண்களுக்கும் ஆதரவாக இருந்த அபூதாலிப் (ரழி) குறிப்பாக எமது பெருமானார் (ஸல்) அவர்களை மட்டும் தமது குழந்தைகளுடன் கூடவே வளர்த்ததன் நோக்கம் அவர்தாம் இறுதித் தூதர் என்ற காரணத்தை உய்த்து உணர்ந்ததைத் தவிர வேறு இல்லை.

மிகப் பிரபல்யமான இன்னுமொரு வரலாற்று உண்மையை சற்று கவனியுங்கள்.

ஸிரியாவுக்கு வியாபார விடயமாக அபூதாலிப் (ரழி) 12 வயது நிரம்பிய முஹம்மது (ஸல்) அவர்களை அழைத்துச் சென்றதையும் அங்கே புகைரா என்கிற கிறிஸ்தவ பாதிரியார் பெருமானாரைக் கண்டு எதிர்பார்க்கப்பட்ட இறுதித் தூதரின் அடையாளங்கள் எம் பெருமானார் மீது பொதிந்திருப்பதாக நன்மாராயணம் கூறி குறைஷிகளிடத்திலும், அராபிகளிடத்திலும், யூதர்களினாலும் அவருக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை முன் மொழிந்து எச்சரித்ததையும் பெருமானாரை விஷேட கவனம் எடுத்து

வளர்க்குமாறு அபூதாலிப் (ரழி) அவர்களை வேண்டி நின்றதையும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

இதன் மூலம் பெருமானாருக்கு நபித்துவம் அருளப்படுவதற்கு முன்னரேயே அபூதாலிப் (ரழி) அவர்கள் பெருமானாரின் நபித்துவத்தின் உண்மையை விசுவாசித்து, அவர்களை கவனமாக ஆதரித்து வளர்த்து வந்தார் என்பது தெளிவு.

அல்குர்ஆன் - முரண்பாடு நான்கு

இப்பொழுது இந்த அல்குர்ஆன் ஆயத்தையும், அன்றும் -இன்றும் நடந்து கொண்டிருக்கும் வரலாற்று உண்மைகளையும் கொஞ்சம் ஆராய்ந்து அசை போட்டுப் பார்ப்போம்.

“எவர்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் எதிர்க் கின்றார்களோ, நிச்சயமாக அவர்கள் அவர்களுக்கு முன்னிருந் தவர்கள் இழிவாக்கப்பட்டதைப் போல் இழிவாக்கப்படுவார்கள்- திடமாக நாம் தெளிவான வசனங்களை இறக்கியுள்ளோம் இறை நிராகரிப்பாளர்களுக்கு இழிவு படுத்தும் வேதனையுண்டு”

(அல்குர்ஆன் 58: 5)

அபூலஹப் - இழிவாக்கப்பட்ட விதம்

முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு அபூ லஹப் மிகவும் நெருக்கமான சிறிய தந்தை. அது மட்டுமன்றி அவன் இப்ராஹீம் (அலை) அவர்களது வழிமுறையில் வந்த தீயவர்களில் ஒருவன்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் வழிமுறையில் வந்த நல்லவர்களுக்கு “இமாமிய்யத்தை” - தலைமைத்துவத்தை அளித்து கண்ணியப்படுத்துகின்ற அல்லாஹுத்தஆலா- அந்த நபி பரம் பரையில் வந்த தீயவர்களுக்கு வழங்குகின்ற அகௌரவத்துக்கு வரைவிலக்கணம் அபூலஹப்.

அபூதாலிப் (ரழி), அபூலஹப் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் தங்களது செய்கைகளால் ஒன்றுக்கொன்று நேர்மாறான இரு நிலையை அடைகிறார்கள்.

எனவே, அல்லாஹுத் தஆலா வம்சத்தையோ குடுப்பத்தையோ கவனித்து தயை தாட்சண்யம் காட்டமாட்டான் என்பதற்கும் நல்லதொரு உதாரணம் அபூலஹப்.

எமது கண்மணி ரஸூல் (ஸல்) அவர்களுக்கு “மேலும் உம்முடைய நெருங்கியவர்களான சுற்றத்தாருக்கு (அச்சமூட்டி) எச்சரிக்கை செய்வீராக” என்ற அல்குர்ஆன் ஆயத்து அருளப்பட்ட வேளை, முஹம்மது (ஸல்) அவர்கள் “ஸபா” என்னும் மலைக் குன்றின் மீது ஏறி நின்றுகொண்டு, குறைஷிக் கோத்திரத்தை சேர்ந்த ஒவ்வொரு குலத்தாரின் பெயரைக் கூறி யாவரையும் அழைத்தார்கள்.

அவரது இவ்வழைப்பிற்கு இணங்கி அக்கால மரபுப்படி எல்லா குலத்தாரும் அந்த மலை அடிவாரத்தில் வந்து சேர்ந்தார்கள்.

அங்கே குழுமிய மக்களை நோக்கிய முஹம்மத் (ஸல்) அவர்கள் “இந்த மலைக்குப் பின்புறத்தில் ஒரு சேனை வந்திருக்கிறது. அது உங்கள் அனைவரையும் ஆக்கிரமித்து உங்களை இராக் கொள்ளையிடும் என்று நான் கூறினால் என்னை நீங்கள் நம்புவீர்களா?” என்று வினவினார்கள்.

அதற்கு அங்கே குழுமியிருந்த அனைவரும் “ஆம்! நாம் சந்தேகம் இல்லாமல் உங்களை நம்புவோம்.” என்று பதிலளித்தார்கள்.

இந்தப் பதிலைக் கேட்ட ரஸூல் (ஸல்) அவர்கள் “உங்கள் மீது இறைவனின் வேதனை உங்களுக்கு வரப் போகின்றதென்பதை தெரிவித்து உங்களை எச்சரிக்கிறேன். அதனை விட்டும் தப்பித்துக் கொள்வதற்கான வழியை கடைப் பிடித்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்கு தெளிவாக விஷயத்தை அறிவிப்பவன்.” என்று பொதுவாக யாவருக்கும் கூறிவிட்டு, பின்னர் தமக்கு மிக நெருங்கிய உறவினர்கள் அனைவரையும் பெயர் குறிப்பிட்டு “அப்பாஸே! எனது மாமியாராகிய ஸபிய்யாவே, என் புதல்வியான பாத்திமாவே, நீங்கள் நபியுடைய உறவினர்கள் என்று நம்பிக் கொண்டிருக் காதீர்கள். ஏனெனில் அல்லாஹ்விடத்தில் குற்றவாளியாக இருப்பவரை எனது உறவினர் என்ற முறையில் என்னால் காப்பாற்ற முடியாது.” என்று உபதேசம் செய்தார்கள்.

ரஸூல் (ஸல்) அவர்களது இந்த உரையைக் கேட்ட அபூலஹப் மிகவும் கோபமடைந்து "உன் கை நாசமாகட்டும்! இதற்காகத்தானா நீ எங்களை அழைத்தாய்" என்று கூறியவனாக ஒரு கல்லை எடுத்து முஹம்மத் (ஸல்) அவர்களை நோக்கி வீசினான். கூடவே மிகவும் கெட்டவார்த்தைகளை உபயோகித்து எமது ரஸூல் (ஸல்) அவர்களை தூஷித்தான்.

இந்த நிலையில் தான் சன்மார்க்கத்துக்கு விரோதமாக இருப்பவர்களுக்கு சம்பவிக்கின்ற இம்மை, மறுமை நிலமைகளை விபரிக்கின்ற சூறா "லஹப்" இறக்கியருளப்பட்டு, இப்ராஹீம் நபி பரம்பரையில் இருந்த அபூலஹப்புடைய நிலைமையை தெளிவு படுத்தி எல்லோரையும் எச்சரித்தது.

அபூலஹப்பின் மனைவியின் பெயர் உம்முஜமீல். இவளது தந்தையின் பெயர் ஹரிப். இவள் அபூஸுப்யானின் சகோதரி. முஆவியாவின் அருமை மாமியார். நபி (ஸல்) அவர்களது பேரர் இமாம் ஹுஸைனை கொலை செய்த யஜீதின் மாதா மகள்.

அபூலஹப்புக்கும் அவனது மனைவிக்கும் நபி (ஸல்) அவர்கள் மீது கடும் கோபம் இருந்தது. ஒவ்வொரு நாள் இரவும் உம்முஜமீல் முஹம்மத் (ஸல்) அவர்கள் போகும் வழிகளில் முட்களைக் கொண்டுவந்து குவித்து வைப்பாள். இந்த முட்களால் ரஸூல் (ஸல்) அவர்கள் அவதிப்படட்டும் என்பதே அவள் நோக்கம்.

அபூலஹபை விளித்து குர்ஆன் வசனங்கள் இறக்கி அருளப் பட்டதன் பின்னர் அபூலஹப்பும் அவனது மனைவியும் பொது மக்களை எதிர்கொள்ள முடியாது வெட்கப்பட்டு பெரும் சங்கோஜம் ஏற்பட்டது. இதனால் அவர்களது விரோதம் இன்னும் கூடியது.

"அபூலஹப்பின் இரண்டு கைகளும் நாசமடைக: அவனும் நாசமாகட்டும்" என்ற அல்குர்ஆனிய வசனம் ஒருவனை சபிக்கும் வசனம். அல்லாஹுத்தஆலா எவரையும் சபிக்கவோ அல்லது ஒருவருக்கு கெடுதல் நேரிட வேண்டும் என்று பிரார்த்திக்கவோ வேண்டியதில்லை.

ஆக, இக்குர்ஆன் வசனத்துக்கு விளக்கம் அளிக்கும் தப்ஸீருடைய உலமாக்கள் இங்கு அபூலஹப்புக்கு சம்பவிக்கப் போகின்ற தீமைகளைக் குறித்து இறைவன் முன்னறிக்கை செய்திருப்பதாக விளக்கம் கூறுகிறார்கள்.

இது தவிர, மனிதன் தனது கரங்களை கொண்டே அவனது முக்கியமான பல காரியங்களைச் செய்கிறான். நன்மை தீமையான அனைத்து காரியங்களைச் செய்வதற்கும் அவனுக்கு பிரதானமாக கைகள் பேருதவி செய்கின்றன. எனவே. இவ்விரண்டும் நாசமாகட்டும் என்பது அம்மனிதன் நாசமாகட்டும், அவனால் நன்மை, தீமை எதுவும் நிகழாமல் போகட்டும் என்பதாகவும் கருத முடியும் என்று அவர்கள் இதற்கு மேலும் விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

இந்த ஸூறா அருளப்பட்ட பொழுது அபூலஹப் செல்வந்தர்களில் ஒருவனாக இருந்தான். சில காலம் செல்ல அவனது செல்வ நிலை சீர் குலைந்து அவனை வறுமை பீடித்தது.

அவன் கடுமையான வறுமையால் வாடினான்.

இந்நிலையில் அவனுடைய மேனியெங்கும் கொப்புளங்கள் போன்றதொரு தொற்று நோய் பீடித்தது.

தொற்று நோய் அவனை பீடித்த காரணத்தினால் ஒருவரும் அவனுக்கு சிகிச்சை அளிக்க முன் வரவில்லை.

அபூலஹப் அந்த வியாதியால் மிகக் கடுமையாக வருந்தினான்.

அந்த நோயின் கொடுமையால் அவன் பயங்கரமாக சப்தமிடுவான். அவனது சப்தம் நாய் அழுவதைப் போல், ஓலமிடுவதைப் போல மற்றவர்களுக்குக் கேட்கும்.

அவனது அழகிய முகம் பேதலித்து மிகப் பயங்கரமாக தோற்றமளித்தது. இதன் காரணமாக மக்கள் தூரத்தில் இருந்து கூட அவனைப் பார்க்கப் பயப்படுவார்கள்.

அவன் இவ்விதமாக அவதிப்பட்டு, தன்னந்தனியானாக செத்துக் தொலைந்தானென்பது வரலாற்றுக்குறிப்புகளில் பதிவாகி இருக் கின்றன.

அபூலஹப்பின் சடலத்தை புதைப்பதற்குக் கூட யாரும் முன்வரவில்லை. சடலம் அழுகி துர்நாற்றம் வீசத்துவங்கிய பொழுது, பழிச்சொல்லுக்கு பயந்த அரபிகளில் சிலர் அபூலஹபின் சடலத்திற்கு வெகு தொலைவில் ஒரு பெரும் கிடங்கை தோண்டினர். பின்னர், நீண்ட நெடிய தடிகளைக் கொண்டு அவனது சடலத்தை கொஞ்சம் கொஞ்சமாக கிடங்கின் பக்கம் தள்ளித், தள்ளி, தள்ளி விட்டனர்.

இறுதியில் தொலைவில் இருந்தே கற்களை வீசி எறிந்து அந்தகிடங்கை முடிவிட்டனர்.

பெரும் செல்வத்திலிருந்த அவனது மனைவியும் இந்த வறுமையிலும், சிக்கலிலும் தனித்து விடப்பட்டாள்.

அவள் தனது வாழ்வைக் கொண்டு செல்ல காட்டிற்குச் சென்று விறகு வெட்டி அதனை விற்றுப் பிழைக்கும் நிலைமைக்கு ஆளாகினாள்.

தங்க ஆபரணங்களை அணிந்து அழகு பார்த்த கழுத்தில், விறகு கட்டத் தேவையான கயிற்றுகளை சுற்ற வேண்டிய நிலைமைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

ஒரு முறை, விறகுக் கற்றையைக் கட்டிச் சுமந்து தலையில் வைத்தும், எஞ்சிய கயிற்றை கழுத்திலும் சுற்றிக் கொண்டு வரும் வழியில் தலையில் இருந்த கட்டு தவறி விழ, கழுத்தில் சுற்றியிருந்த கயிறு இறுகி அவள் கீழே விழுந்து துடிதுடித்து இறந்ததையும் வரலாற்று ஆசிரியர்களால் பதியப்பட்டிருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

இவ்வாறாக இறைவனை எதிர்த்த அபூலஹப்பின் குடும்பம் சின்னா பின்னமாகி இழிவாக்கப்பட்டிருக்கின்ற வரலாற்று நிகழ்வானது அல்குர் ஆனின் வசனங்களுடன் எவ்வளது தூரம் இணைந்து போகிறதென்பதை கொஞ்சம் கவனித்துப் பாருங்கள்

இது தவிர, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த, அதிலும் இப்ராஹிம் நபி (அலை) குடும்பத்தைச் சேர்ந்த இருவரில் ஒருவருக்கு இந்த இழி நிலையையும், மற்றவருக்கு "கௌதரையும்" அளிப்பது இறைவனின் நாட்டம்.

இதனைப் பற்றி ஆட்சேபிக்க எவருக்கும் எதுவித உரிமையோ, அதிகாரமோ இல்லை.

"நபியின் உறவினர்கள் என்பதற்காக இறைவனிடம் குற்றவாளியாக இருப்பவரை என்னால் காப்பற்ற முடியாது" என்று நபி நாயகம் (ஸல்) அவர்கள், அன்று "ஸபா" மலைக்குன்றின் மீது செய்த உபதேசத்திற்கு இந்த சரிதம் அச்சொட்டான உதாரணமாக மிளிர்கிறது.

அபூ ஜஹ்ல் இழிவாக்கப்பட்ட விதம்

வரலாற்றுப் பதிவுகளின் குறிப்புக்களில் அநேக குறிப்புகள் அபூஜஹ்லைப் பற்றியும் அவனுடைய செய்கைகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ள குறிப்புகளின் படி அவன் எல்லா நிலைமைகளிலும் பெரும் ஏளனத்திற்கும், மக்களின் நகைப்பிற்கும் ஆளானதாக பதிந்திருப்பதைக் கவனிக்கவும்.

அபூஜஹ்ல் முஹம்மது (ஸல்) அவர்களுடைய நெருங்கிய உறவினன் என்று அநேகர் கருதுகின்றனர்.

ஆனால், உண்மை அதுவல்ல. உண்மையிலேயே அபூஜஹ்ல் உமையாக் குலத்தவர்களுக்கே நெருங்கிய உறவினன்.

அபூஸுப்யானுடைய தங்கையை அபூலஹப் மணமுடித்த வகையிலேயே இவன் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு தூரத்து உறவினனாகின்றான்.

முஹம்மது (ஸல்) அவர்களது சிறிய தந்தை அபூலஹப், அபூஸுப்யான், அபூஜஹ்ல் ஆகியோர் ரஸுல் (ஸல்) அவர்களை எதிர்ப்பதிலும் அவரது மார்க்கத்தை அழித்தொழிப்பதிலும் மிகவும் நெருக்கமாக செயற்பட்டிருப்பதையும், அவர்களது இந்த இலக்கை அடைய மிகப் பயங்கரமான சூழ்ச்சிகளை தினந்தோறும் செயற்படுத்தி வந்ததையும், ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் இவர்களது அனைத்து எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் இவர்களுக்கு எதிர்ப்பாகவும், முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு வந்திருப்பதையும் எம்மால் வரலற்றுப் பதிவுகளிலிருந்து துல்லியமாக அறிந்து கொள்ள முடியும்.

ஸூரத்துர் ரஹ்மான் அருளப்பட்ட பொழுது, "இதனை குறைஷித் தலைவர்களுக்கு ஓதிக்காண்பிப்பவர் எவர்?" என்று தம்மை சூழ இருந்த விசுவாசிகளிடம் ரஸூல் (ஸல்) அவர்கள் வினவ, எல்லோரும் மௌனித்திருந்த சமயம் இப்னு மஸ்ஊத் (ரழி) "நான்" என முன் வந்தார்.

அவரை உட்காரவைத்த ரஸூல் (ஸல்) மறுபடியும் இரண்டாவது முறையாக "இதனை ஓதுவது எவர்?" என்று கேட்க, இப்னு மஸ்ஊதை தவிர எவரும் முன் வரவில்லை.

ரஸூல் (ஸல்) மறுபடியும் மூன்றாவதாக வினவினார்கள். இறுதியாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுக்குத்தான் அனுமதி கொடுக்கப்பட்டது. ஏனெனில், அவரைத் தவிர வேறு எவரும் இக்காரியத்திற்கு துணிந்து முன் வரவில்லை.

இப்னு மஸ்ஊத் (ரழி) மிகவும் ஒல்லியானவர். உருவத்திலே மிக சிறியவர். மிகவும் பலஹீனமானவர்.

எனவே நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அனுமதி வழங்கினாலும் அவர் என்ன செய்கிறார் என்பதை அவதானித்த வர்களாகவே இருந்தார்கள்.

இப்னு மஸ்ஊத் (ரழி) இறை நிராகரிப்பாளர்களிடம் சென்றார். அவர்கள் க.்.பாவை சூழ அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டி ருந்தனர்.

அந்த குறைஷி இறை நிராகரிப்பாளர்களை நெருங்கிய அவர் ஸூரா அர்ரஹ்மானை ஓத ஆரம்பித்தார்.

உடனே, அபூஜஹ்ல் எழுந்து வந்து அவரைப்பிடித்து அவரது கன்னத்தில் பலமாக அறைந்தான்.

ஆஜாபாகுவான, பலசாலியான அவனது பலமான அறையின் காரணமாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களது காது கிழிந்து அதிலிருந்து உதிரம் வடிந்தது.

எனவே, அவர் தமது இயலாமையையும், பலஹீனத்தையும் எண்ணி கண்ணீர் வடித்தவராக திரும்பி வந்தார்.

நாயகம் (ஸல்) அவர்கள் இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்களுடைய கோலத்தைக் கண்டு இரக்கமுற்று, துக்கித்தவர்களாக தலையைக் கவிழ்த்தார்கள்.

அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் சிரித்தவர்களாக நபியிடம் வந்தார்கள். அந்த நிலையில் ஜிப்ரீல் (அலை) அவர்களைக் கண்ட ரஸூல் (ஸல்) அவர்கள் "ஜிப்ரீலே நீர் சிரிக்கிறீர். ஆனால் இப்னு மஸ்ஊத் அழுகிறாரே?" என்று கேட்க -

"அவர் எனது சிரிப்புக்கான காரணத்தை வெகு சீக்கிரம் தெரிந்து கொள்வார்" என்று ஜிப்ரீல் (அலை) பதிலுறுத்தார்கள்.

காலம் கடந்து செல்ல பத்று யுத்தம் வந்தது.

அப்துல் ரஹ்மான் இப்னு அவ்.்.ப் அறிவிக்கிறார்கள் "நான் பத்ர் போர் அன்று அணியில் நின்று கொண்டிருக்கும் பொழுது எனது வலப்பக்கமும் இடப்பக்கமும் குறைந்த வயதை உடைய இரு வாலிபர்கள் இருந்தனர்.

அவர்கள் இருப்பது எனக்கு ஒரு பாதுகாப்பாக இருக்கும் என நான் கருதவில்லை. ஏனெனில், அந்தளவு இளமையானவர்களாக அவர்கள் தெரிந்தனர்.

இந்நிலையில் அவர்களில் ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் என்னை நோக்கி "என் சிறிய தந்தையே! எனக்கு நீங்கள் அபூஜஹ்லைக் காட்டுங்கள்" என்றார்.

"நீ அவனை என்ன செய்யப்போகிறாய்?" என நான் அவரைக் கேட்டேன்.

அதற்கவர் - "அவன் எமது ரஸூல் (ஸல்) அவர்களை மிகவும் துன்புறுத்தியதாக நான் கேள்விப்பட்டேன். அல்லாஹ் மீது

சத்தியமாக! நான் இன்று அவனைப் பார்த்தால் நான் அல்லது அவன் மரணிக்கும் வரை அவனைவிட்டும் பிரியமாட்டேன்” என்றார்.

அவரது இப்பேச்சு எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. இதற்கிடையில் மற்றவரும் என்னைச் சீண்டி முந்தியவர் போலவே கேட்டார்.

அது சமயம் அபூஜஹ்ல் மக்களுக்கு மத்தியில் உலாவுவதைப் பார்த்தேன்.

உடனே நான் அந்த இளம் வாலிபர்களிடம் “நீங்கள் கேட்டவன் இதோ இவன் தான்” என்றேன்.

உடனே அவர்கள் இருவரும் அவனை நோக்கி வேகமாக விரைந்து சென்றனர்.”

இந்த இரு இளம் வீரர்களில் ஒருவர் ஹஸரத் முஆத் இப்னு அம்ர் இப்னு ஜமூஹ் (ரழி) மற்றவர் முஅவ்விது இப்னு அஃப்ரா (ரழி) ஆவார். அவர் இப்போரில் வீர மரணம் எய்தினார்.

முஆது இப்னு அம்ர் இப்னு அல் ஜமூஹ் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: “அபூஜஹ்ல் அடர்ந்த மரங்களுக்கு நடுவில் உள்ள ஒரு மரத்தைப் போல அவனை சென்றடைய முடியாத அளவுக்கு பாதுகாப்பில் இருக்கிறான். -அவனிடம் யாரும் செல்ல முடியாது- என்று மக்கள் கூறுவதை நான் கேட்டேன்.

எனவே, அவனை நானே கொலை செய்யவேண்டும் என்று முடிவு செய்தேன்.

நான் அவனைப் பார்த்துவிட்டபோது மிக வேகமாக ஓடிச்சென்று அதே வேகத்தில் எனது வாளை அவனது கரண்டைக்கால்களை நோக்கி வீசி அவனது கால்களைத் துண்டித்தேன்.

திருகையில் இருந்து அரைபடாத கொட்டை நசுங்கினால் பறக்குமே.......... அது போன்று அவனது கால்கள் பறந்து விழுந்தன.

இதைப் பார்த்த அவனது மகன் இக்ரிமா என் தோள்மீது பாய்ந்து வெட்டினார்.

அதனால் என் கை வெட்டுண்டு உடம்பில் தோலுடன் தொங்கிக் கொண்டிருந்தது.

அன்றைய தினம் முழுவதும் அதனை என் முதுகுக்கு பின்னால் போட்டுக்கொண்டு போர் செய்தேன். அது எனக்கு மிகவும் நோவினை அளித்தபோது என் பாதத்தின் கீழ் வைத்து பிய்த்து தூக்கி எறிந்து விட்டேன்.” என்றார்கள்.

பின்னர், முஸ்லிம்கள் பத்று சண்டையில் வெற்றி கொண்ட பொழுது - ஜிஹாதில் தமக்கும் பங்கு இருக்க வேண்டும் என இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் ரஸூல் (ஸல்) அவர்களை வேண்டிக்கொள்ள-

மிகவும் பலவீனமான மஸ்ஊத் (ரழி) அவர்களை நோக்கிய ரஸூல் (ஸல்) அவர்கள் “உமது அம்பை எடுத்துக் கொண்டு காயம் பட்டவர்களைப் புரட்டிப்பார். எவர் குற்றுயிராகக் கிடக்கிறாரோ அவரை நீர் கொன்று விடுவாயாயின், முஜாஹிதுடைய நன்மைப் பயனை நீர் அடைவீர்” என்றார்கள்.

உத்தரவுப்படி அவர் காயம் பட்டவர்களை புரட்டிப்பார்த்துக் கொண்டே வந்தார்.

வழியில் குற்றுயிராக இருக்கும் அபூஜஹ்லைப் பார்த்து பயந்தார்.

அவன் தம்மை அடித்து துன்புறுத்துவானோ என்று தூரத்தில் இருந்து அவன் மீது அம்பெய்தார்.

அதனைத் தடுத்துக்கொள்ள அவனுக்கு சக்தி இல்லை என்று தெரிந்ததன் பின்னர் அவன் அன்மையில் வந்து அவனது பரந்த மார்பின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டார்.

அவரைப் பார்த்த அபூஜஹ்ல் “இடையனின் புதல்வனே! என்மீது நீ ஏறி விட்டாயா?” என்று கேட்டான்.

அதற்கு இப்னு மஸ்ஊத் (ரழி) "இஸ்லாம் என்றும் உயரும். தாழமாட்டாது" என்றார்.

அப்பொழுது அவன் "எனது மரண வேளையில் உனது தலைவரை பார்க்கிலும் அதிக கோபமானவர் எனக்கு வேறு எவறுமில்லை என்று அவருக்கு தகவல் கொடுத்து விடு" என்றான்

இச் செய்தியை இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் ரஸுூல் (ஸல்) அவர்களிடம் கொண்டு வந்தார்கள்.

இதைச் செவியுற்ற ரஸுூல் (ஸல்) அவர்கள் "எனது பிர்அவ்ன் மூஸாவின் பிர்அவ்னைப் பார்க்கினுங் கொடியவன். ஏனெனில், அவனோ நான் விசுவாசங் கொண்டேன் என (மரணத் தருவாயில்) கூறினான்" என்று கூறி "இப்னு மஸ் ஊதே! என்னுடைய இவ்வாளைக் கொண்டு அவனை வெட்டு. இது மிகக் கூர்மை யானது" எனக் கூறி இப்னு மஸ்ஊதிடம் தமது வாளைக் கொடுத்து அனுப்பினார்கள்.

அவனது தலையை அந்த வாளைக்கொண்டு அவர் வெட்டி எடுத்ததன் பின்னர் அந்தத் தலையை தூக்கிக்கொண்டு வர அவரால் இயலவில்லை.

அது அவ்வளவு பெரியதாக, பாரமானதாக இருந்தது.

எனவே, இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அவனது காதைப் பிளந்து அதில் கயிற்றைக் கட்டி அபூஜஹ்லின் தலையை தரதர என இழுத்துக் கொண்டு ரஸுூல் (ஸல்) அவர்களை நோக்கி வந்தார்கள்.

அச்சமயம் ஹஸரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ரஸுூல்(ஸல்) அவர்களின் முன்னிலையில் மீன்டும் சிரிப்புடன் தோன்றி "முஹம்மதே! காதுக்குப் பதில் காது" என்றார்.

ஆணவத்துடனும், அகங்காரத்துடனும் இறைவனை எதிர்த்து ரஸுூல் (ஸல்) அவர்களையும் எதிர்த்து வாழ்ந்து வந்த குறைஷித் தலைவர்களின் வாழ்க்கை எவ்வாறு இழிவானதாக முடிவடைந்தன

என்பதை இந்த வரலாற்றுக் குறிப்புகளின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

இன்றும் கூட அவனது வீடுதான் ஹாஜிகள் மலசலம் கழிக்கும் கழிவறையாக வைக்கப்பட்டிருப்பது நாம் அறிந்த உண்மை.

அபூதாலிப் (ரழி) அவர்களை-இன்றும் (என்றும்) இறைவன் கௌரவித்துக் கொண்டிருக்கும் முறை

அபூ தாலிப் (ரழி) அவர்களும் அவருடைய குடும்பத்தவர்களும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஆரம்பம் முதல் இறுதி வரை தோளோடு தோள் கொடுத்து பெருமானாரின் இன்ப துன்பங்களில் பங்காளிகளாக இருந்து வந்தார்கள் என்பது வரலாற்று உண்மைகளாகும்.

அபூ தாலிப் (ரழி) அவர்களின் மறைவுக்குப் பிறகுதான் ரஸுூல் (ஸல்) அவர்கள் மக்காவைத் துறந்து யத்திரிபுக்கு ஹிஜ்ரத் போக வேண்டிய கட்டாயமும் உருவானது என்பதை நாம் அறிவோம்.

இது தவிர, இன்று இருக்கின்ற முஸ்லிம்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினருக்கும் அதிகமானோர் (பல கோடிக்கணக்கான முஸ்லிம்கள்) ஹஸரத் அபூ தாலிப் (ரழி) அவர்களின் பெயர் கூறக் கேட்ட மாத்திரம் "அலைஹிஸ்ஸலாம்", அல்லது "ரழியல்லாஹு அன்ஹு" என்று நன்மாராயம் கூறுவதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அபூலஹப், அபூஜஹ்ல் போன்று இறைவனை நிராகரித்த நிலையில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) இருந்திருந்தால் அவருக்கு இவ்வாறான கண்ணியத்தை இறைவன் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை.

அல்குர்ஆனிய கருத்துப்படி அதற்கான வாய்ப்புக்கள் இல்லவே இல்லை.

அவர் இறைவனின் நேசர் என்கிற ஒரே காரணத்தினால் தான் இன்றும் முஸ்லிம்களின் உள்ளத்தில் மிகவும் கண்ணியத்துடன் அந்தப் பெரியவர் நினைவு கூறப்படுகிறார்.

நிலைமை இப்படி இருக்க இனி இப்படி கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஹஸரத் மூஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதராக தூதுத்துவம் அருளப்பட்ட சமயம் சிலர் அவரை ஏற்றுக் கொள்ள அநேகர் அவரை நிராகரித்தார்கள். இது உண்மை தானே?

அதே போல ஹஸரத் ஈஸா (அலை) இறைத் தூதுவராக வெளிவந்த நிலைமையில் கிறிஸ்தவர்கள் அவருடைய தூதுத்துவத்தை ஏற்றுக் கொள்ள மற்றைய சமூகங்கள் அவருடைய தூதை நிராகரித்து விட்டார்கள். இதுவும் உண்மை தானே?

இறுதியாக முஹம்மது (ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித் தூதராக வந்தார்கள். ஒரு சமூகம் அவர்களை ஏற்றுக் கொண்டது. ஏனையோர்கள் அவரை ஒரு பொய்யரெனக் கூறி இன்று வரை நிராகரித்து வருகின்றனர். இதுவும் மறுக்க முடியாத உண்மை தானே?

இதில் ஏற்றுக் கொண்டவர்கள் இறைவனிடத்தில் தப்பிக் கொண்டனர். ஏனையவர்கள் இருள்களிளேயே இன்றும் தத்தளிக்கிறார்கள்.

இதே போன்று அவிசுவாசிகள் எவ்வாறு நபிமார்களை நிராகரித்து எவ்வித பலனையும் இன்று வரை காணாமல் போன துரதிஷ்ட நிலைமையையே இந்த உண்மைகளைப் புரியாமல் நாம் அபூதாலிப் (ரழி) அவர்களைத் தூற்றுவதற்கு முன்வருவது தோற்றுவிக்கும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

அபூதாலிப்(ரழி) அவர்களுக்கு ஆதரவாக அருளப்பட்ட அல்குர்ஆன் வசனம்

இதுவரை நாம் அல்குர்ஆனின் கருத்தியலின் பிரகாரம் அபூதாலிப் (ரழி) அவர்கள் இறை நிராகரிப்பாளராக இருந்திருக்க வாய்ப்பில்லை என்பதை கவனித்தோம்.

இவை அனைத்தையும் விட மிக அழுத்தம் திருத்தமாக அல்குர்ஆனில் ஒரு வசனம் அபூதாலிப் அவர்களும் அவரது தந்தை அப்துல் முத்தலிப் அவர்களும் செய்த ஒரு செயலை இறைவன் தான் செய்ததாகவும், அந்தச் செயலை இவர்களைக் கொண்டு அவனே செய்வித்ததாகவும் கூறுகின்ற கூற்று இந்தப் பெரியவர்களின் மகிமையை மேலும் கௌரவிப்பதாக அமைந்துள்ளது.

நுபுவ்வத்தின் இரண்டாம் அல்லது மூன்றாம் வருடமளவில் இந்த திருக்குர்ஆன் வசனம் அருளப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்கள் பதிவாகி இருக்கின்றன.

“(நபியே!) அவன் உம்மை அநாதையாகக் கண்டு அப்பால் (உமக்கு) புகளிடமலிக்கவில்லையா?” (அத்தியாயம் 93 வசனம் 6)

இந்த வசனத்தின் மூலம் அல்லாஹுத்தஆலா நபி பெருமானார் (ஸல்) அவர்களை அநாதையாகப் பிறக்கச் செய்து அவனே அவன் விரும்பிய நல்ல போஷகரைக் கொண்டு அவருக்கு அவசியமான பாதுகாப்பை அளித்து அவனது அருட்கொடையைப்பற்றி பெருமானாருக்கு நினைவூட்டி பெருமானார் (ஸல்) அவர்களை ஆறுதல் படுத்தி அல்லாஹ்வின் அருளைப்பற்றி அநாவசியமாக கவலை கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தும் பாங்கு இதில் புலப்படுகின்றதுதானே.

இத்தகைய செயல்களின் பின்னணியில் ரஸூல் (ஸல்) அவர்களுடைய கோத்திரத்தில் இருந்த நல்லவர்கள் அனைவருக்கும் இறுதித் தூதுவரது கண்காணிப்பு விடயத்திலும் அவரைப் போஷித்து பாதுகாக்கும் விடயத்திலும் பங்களிப்பு பெறுகின்ற வாய்ப்பை அளித்து, அந்தப் பாக்கியத்தை அக்குடும்பத்தில் உள்ள நல்லவர்களுக்கு நல்கி அவர்கள்

அனைவரையும் கௌரவித்த இறையியல் தன்மையின் இரகசியங்கள் இந்த வரலாறுகளில் தொக்கி நிற்பது புலனாகவில்லையா?

நுபுவ்வத்தின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு அபூதாலிப் (ரழி) அவர்கள் முடிவு செய்த ரஸூல் (ஸல்) அவர்களின் திருமணம்

ரஸூல் (ஸல்) அவர்களது திருமண சம்பவத்தை நாம் கொஞ்சம் கவனமாக பரிசீலித்து பார்க்கையில் பெரியவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் நுபுவ்வத்தின் பாதுகாப்பிற்கு அதனை எவ்வாறு உபயோகித்தார் என்பதை கவனிக்கும் பொழுது அவர்மீதுள்ள பெரும் மரியாதை இன்னும் கூடுகிறது.

ரஸூல் (ஸல்) அவர்கள் தமது ஆறாவது வயதில் தனது தாயை இழந்த விடயம் எமக்குத் தெரியும்.

தாயாரின் மறைவிற்குப் பிறகு, பாட்டனார் அப்துல் முத்தலிப் ரஸூல் (ஸல்) அவர்களது பாதுகாவலராகிறார்கள்.

அப்துல் முத்தலிப்தான் ஸம்ஸம் கிணற்றைத் தோண்டியவர். அதன் காரணமாக கஃபதுல்லாஹ்வின் நிழலில் தினமும் அவருக்காக ஒரு சாய்வு மஞ்சத்தை அமைத்துக் கொடுப்பது குடும்பத்தினரின் வழக்கமாக இருந்து வந்தது.

சிறுவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அந்த மஞ்சத்தில் அமர்ந்து விளையாடுவார்.

ஏனைய பெரிய தந்தைமார் சிறுவரை வேறு எங்கேனும் அமரச்சொன்னால் உடனே அப்துல் முத்தலிப் "எனது மகனை விட்டு விடுங்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக அவரது எதிர்காலம் மிகப் பெரியதாக இருக்கும்" என்று கூறுவார்கள்.

தினமும் பாட்டனாரும், பேரனும் கையோடு கை சேர்த்தவர்களாக கஃபாவில் அல்லது மக்காவில் எங்கேனும் காண முடிந்தது.

தலைவர் அப்துல் முத்தலிப் நகரத்துப் பெரியவர்களுடன் நடாத்தும் ஆலோசனைக் கூட்டங்களுக்குச் செல்லும் போதும் பேரன் முஹம்மதை அழைத்துச் செல்லத் தவறுவதில்லை.

அந்த ஆலோசனைக் கூட்டங்களில் கலந்து கொள்பவர்கள் எல்லாம் நாற்பது வயதைக் கடந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரும் பல்வேறு பிரச்சினைகளையும் அலசி ஆராய்வர்.

இதில் விஷேடம் என்னவென்றால், இந்த எண்பது வயது முதியவர் ஏழே வயதான தன் பேரனிடம் பல்வேறு விடயங்கள் குறித்து அபிப்பிராயம் கேட்பதும், அதன் படி நடப்பதும் உண்டு.

சக முதியவர்கள் அவரிடம் இது குறித்து விசாரித்தால் அவர் "எனது மகனுக்கு ஒரு மா பெரும் எதிர்காலம் இருக்கிறது" என்பார்.

தனது தாயார் மறைந்து இரண்டே வருடங்களில் தனது அன்பிற்குரிய பாட்டனார் மறைந்து போக ஹஸரத் அபூதாலிப் (ரழி) சிறியவரின் பாதுகாவலராகிறார்.

ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களும் ரஸூல் (ஸல்) அவர்களின் தந்தையார் அப்துல்லாஹ்வும் ஒரு தாய் வயிற்றுச் சகோதரர்கள்.

பாட்டனாரிடம் இருந்து பெற்று வந்த அன்பு, பாசம், பாதுகாப்பு அனைத்தும் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களிடம் இருந்து ரஸூல் (ஸல்) அவர்களுக்கு குறைவின்றி கிடைத்தது.

அவரது சொந்தப் புதல்வர்களில் ஒருவராகவே இவரும் நடாத்தப்பட்டார். ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் மனைவி பாத்திமா எல்லா வகையிலும் ரஸூல் (ஸல்) அவர்களது தாய் இல்லாக் குறையை நிவர்த்தி செய்து வந்தார்.

ஏழ்மையில் இருந்த ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் குடும்பத்தில், தனது சொந்தக் குழந்தைகள் பசியில் இருந்தாலும் பாத்திமா தன்னை பட்டினி கிடக்க விடமாட்டார் என பின்னைய காலங்களில் ரஸூல் (ஸல்) அவர்கள் நினைவு கூறுவார்கள்.

தலைவர் அப்துல் முத்தலிப் அவர்களின் இறுதிக்காலப் பகுதியில் அவரது செல்வ வளம் மிகவும் குன்றிச் சென்றிருந்தது.

அவர் தனது மக்களுக்கு விட்டுச் சென்றவையும் சிறியனவாகவே இருந்தன. அவர்களுள் சிலர் சொந்தமாக பெரும் செல்வம் சேர்த்திருந்தனர். அப்துல் உஸ்ஸா என்ற அவரது மகன் (இவன் தான் அபூலஹப்) பெரிய செல்வந்தனாக இருந்தான்.

ஆனால், ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்கள் ஏழையாகவே இருந்தார். இதனால் அவரது தம்பி மகன் முஹம்மது (ஸல்) அவர்கள் தனதும் தனது பாதுகாவலரின் குடும்பத்தினரின் ஜீவியத்துக்குமாக தன்னால் இயன்றளவு சுயமாக சம்பாதிக்க வேண்டியவராக இருந்தார்.

முஹம்மத் (ஸல்) தனது இருபதாவது வயதை அடைந்திருந்த சமயம், பிரயாணம் செய்து கொள்ள இயலாதவராக இருந்த ஒரு வர்த்தகரது பொருட்கள் அனைத்தையும் இவரே பொறுப்பேற்று செல்லவேண்டிய நிலைமை உருவானது.

மிகவும் வெற்றிகரமான ஒன்றாக அமைந்த அந்தப் பயணம், பின்னர் அது போன்ற பொறுப்புகள் பலவற்றை முஹம்மத் (ஸல்) அவர்கள் பால் கொண்டு வந்து சேர்க்க இவற்றின் காரணமாக வாழ்க்கை வசதிகளும் அதிகரிக்க, வெற்றிகரமான ஒரு வியாபார நாயகனாக முஹம்மத் (ஸல்) அவர்கள் உருவாகத் தொடங்கினார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் பொருளாதாரத்தில் நல்ல முறையில் முன்னேற்றம் அடைய கூடவே திருமணம் செய்து கொள்ளும் சாதகமும் கூடியது.

அக்காலப் பிரிவில், அரசியல் ரீதியாக ஒரே கோத்திரத்தவராக கருதப்பட்டு வந்த ஹாஷிம், முத்தலிப் கோத்திரத்தார் மங்கிச் செல்லும் தமது செல்வாக்கை மீட்டு நிலைநிறுத்த முஹம்மது (ஸல்) அவர்களையே நம்பியிருந்தனர்.

இதில் கோத்திர வேறுபாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, குறைஷிகளின் தலைவர்கள் அனைவரும் தமக்கு அடுத்த தலைமுறையில் வரக்கூடிய மிக்க திறமை வாய்ந்த தலைமைத் துவம் பொருந்தியவராக, அரேபியா முழுவதும் தமக்குப் பின்னர் தமது குலத்தின் பெருமையையும் கௌரவத்தையும் பாதுகாக்கக்

கூடியவராக முஹம்மத் (ஸல்) அவர்களையே எதிர்நோக்கி இருந்தனர்.

இக்காலப் பிரிவில் “அல் அமீன்” குறித்த புகழுரைகள் அனைவர் நாவிலும் இடையறா ஒலித்துக் கொண்டிருந்தன.

ஒரு கதாநாயகன் அந்தஸ்த்தில் முஹம்மது (ஸல்) அவர்கள் கணிக்கப்பட்ட அப்போதைய நிலையில் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களுக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர்.

மூத்தவர் தாலிப் முஹம்மது (ஸல்) அவர்களின் வயதினராகவும், அகீல் பதின்மூன்று அல்லது பதின்நான்கு வயதினராகவும் இருந்தனர்.

ஜ..பர் நான்கே வயதான சிறுவர்.

அழகும், புத்திசாதுரியமும் மிக்க ஜ..பருடன் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டிருந்த உறவு மிகவும் நெருங்கியதாக இருந்தது.

அபூதாலிப் (ரழி) அவர்களுக்கு புதல்வியர்களும் இருந்தனர். அவர்களுள் ஒருவர் திருமண வயதை எட்டியிருந்த பாகிதா. இவர் பின்னய காலங்களில் உம்முஹானி என்று அழைக்கப்பட்டார்.

பாகிதாவுக்கும் தனக்கும் இடையில் வளர்ந்து வந்த நெருங்கிய உறவின் காரணமாக, அவரை மணந்து கொள்ள ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களிடம் அனுமதி வேண்டி நின்றார் இளவல் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

ஆனால், தனது வளர்ப்பு மகன் குறித்து வேறு திட்டத்தில் இருந்தார் பெரியவர் அபூதாலிப் (ரழி) அவர்கள்.

தனது உளக்கிடக்கையை வெளியிட்ட இளவல் முஹம்மது (ஸல்) அர்களிடம் “பெருந்தன்மை வாய்ந்த மனிதனது கைமாறு பெருந்தன்மை பொருந்தியதாக இருக்க வேண்டும்” என்றார்.

தனது பெரிய தந்தை அவரது மகளை தனக்கு மணம் செய்ய மறுத்ததற்கான காரணத்தை முஹம்மது (ஸல்) அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

எனினும், தான் இன்னும் மணஞ்செய்ய தகுதி பெற்றவர் அல்லர் என்பதையே பெரிய தந்தையார் மிக அன்பாகவும், தாழ்மையாகவும் உணர்த்துவதாக கருதிக்கொண்டு எமது இளவல் தனது திருமணம் சம்பந்தமான இறுதி முடிவை பெரியவர் வசமே ஒப்புவித்துவிட்டு மௌனித்து விட்டார்.

இங்கே ஏழ்மை நிலையில் இருந்த ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களின் மகளை அராபிய கோத்திரங்கள் அனைத்தினதும் விடுதலை வீரராக கணித்த, சிறந்த வியாபார நாயகனாக இருந்த சிறுவயதில் இருந்தே மிக வித்தியாசமாக கணித்து மிக கவனமாக வளர்க்கப்பட்ட முஹம்மத் (ஸல்) மணக்க விருப்பம் தெரிவித்த சமயம் அந்த பொன்னான வாய்ப்பை நழுவ விட அந்த ஏழை முதியவர் ஏன் மறுக்க வேண்டும்.

இது தவிர, அவரது பேச்சுக்கு என்றுமே முஹம்மத் (ஸல்) அவர்கள் மறுப்புகள் கூறியதில்லை. இந்த நிலையில், பெரியவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) ஒரு சுய நல விரும்பியாக இருந்திருந் தால், அவராகவே அவருடைய புதல்வியை முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுக்க முனைந்திருப்பார்.

ஆனால் இறுதி நபித்துவத்தின் பாதுகாப்புக்கு எவ்வாறான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும் என்பதைப் பற்றி அந்த தலைவர் நன்குணர்ந்திருந்தார்.

அந்த இறையுணர்வின் காரணத்தினால் தான் அந்தப் பெரியவர் தனது சொந்த மகளை இந்த இளவல் விரும்பிக் கேட்டிருக்க அவருக்கு தனது மகளை விட மிகவும் பொருத்தமான துணையாக அன்றைய காலப்பிரிவில், உயர் கோத்திரங்கள் அனைத்தினதும் ஆண்கள் அனைவரும் மிகத் தீவிரமாக மணக்க விருப்பம் தெரிவித்து எல்லோராலுமே ஏற்றுக் கொள்ளப்பட்ட மிக மிக அழகானவரும் மிக உயர்ந்த கோத்திரத்தை சேர்ந்தவரும், விதவையுமான, உயர்ந்த குணமும் பரிசுத்த ஒழுக்கமும் உள்ளவர் என புகழப்படக் கூடிய “தாஹிரா” எனும் பட்டத்தையுடைய அன்னை கதீஜா (ரழி) அவர்களை தேர்ந்தெடுத்தார்கள்.

இறுதி நபித்துவத்தைப் பாதுகாப்போம் எனக் கூறியவர்களாக

நாம் வெறும் சுவரொட்டிகளுடன் எமது காரியத்தை முடித்து திருப்தி அடைய, அங்கே அந்தப் பெரியவர் எவ்வளவு நுணுக்கமாக நுபுவ்வத்தின் பாதுகாப்புக்கான செயல் திட்டங்களை வகுத்து செயற்படுத்தினார் என்பதை கவனிக்கவும்.

அக்காலப்பரிவில், மக்காவில் இருந்து அந்நிய நாடுகளுக்கு கொண்டு போகப்படும் வியாபார பொருட்களில் அன்னை கதீஜா (ரழி) அவர்களின் சரக்குகள் பாதிக்கு அதிகமாகவும், மீதமானவைகள்தாம் மற்றய அனைத்து வியாபாரிகளினது சரக்குகளாக இருக்கும் என வரலாற்றுக் குறிப்புகளில் காணமுடிகிறது. அன்னையாரின் செல்வப் பெருக்கின் அளவை இதிலிருந்து எம்மால் கணித்துக்கொள்ள முடியும்.

அன்னை கதீஜா (ரழி) அவர்களினதும் முஹம்மத் (ஸல்) அவர்களினதும் திருமணத்தின் குத்பா உரையை பெரியவர் அபூதாலிப் (ரழி) அவர்களே நிகழ்த்தி அந்த திருமணத்தை அழகாக முடித்து வைத்தார்.

அன்றய காலப்பிரிவில் வாழ்ந்த சிறந்ததொரு மணமகனை, அவர் சுயமாக இந்த ஏழை முதியவரின் மகளை மணக்க முன் வந்த போதும் அந்த சந்தர்ப்பத்தை தனது மகளுக்கு பெற்றுக்கொள்ளும் பொன்னான வாய்ப்பை விட்டுக் கொடுத்த பெரியவரின் தியாகத்தை என்னென்பது.

இறுதி நபித்துவத்தின் - ரிஸாலத்தின் - பாதுகாப்புக்குத் தேவையான தலைமைத்துவ பாதுகாப்பை தன் புறத்திலிருந்தும், பொருளாதார பாதுகாப்பினை மிகவும் பலம் வாய்ந்த குவைலித் கோத்திரத்தின் மகளார் அன்னை கதீஜா (ரழி) அவர்களின் பக்கத்திலிருந்தும் நிர்ணயித்த அந்த தலைவரின் விவேகமும், தியாகமும் தற்போதைய தமது தலைவர்களில் எவருக்காவது இருக்கிறதா?

தற்போதைய நமது தலைமைத்துவத்தை விட்டு விடுங்கள் உங்களால் முடிந்தால் இவ்வாறு தியாக சிந்தையுடன் ரிஸாலத்தின்- இறுதி நபித்துவத்தின் பாதுகாப்புக்கு உழைத்த ஒரு உண்மையான தலைவரை இணங்காட்டுங்கள் பார்க்கலாம்.

இன்று கூட யாருமே செய்ய முன் வராத தியாகத்தை அன்று ரிஸாலத்தின் பாதுகாப்புக்கருதி செய்த இந்தப் பெரியவரின் பண்பியலை சிதைத்து அவரை நரகவாதி என்று எவ்வாறு நம்மவரால் இன்று பரவலாக நா கூசாது கூற முடிகிறது?

ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களினதும் அன்னை கதீஜா (ரழி) அவர்களினதும் மறைவு நுபுவ்வத் பத்தாம் வருடம் ஒரு சேர நிகழ்ந்துவிட அந்த வருடத்தில் இருந்தே முஹம்மத் (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தின் பாதுகாப்பு அரண்களாக இருந்த தலைமைத்துவப் பாதுகாப்பையும் பொருளாதாரப் பாதுகாப்பையும் ஒரு சேர இழந்து மக்காவை விட்டும் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட விடயமும், அந்த வருடமே இஸ்லாமிய வரலாற்றில் நபிகளாரின் துக்ககரமான வருடமாக பதிக்கப் பட்டிருப்பதையும் உங்களுக்கு நினைவு படுத்த விரும்புகிறோம்.

இஸ்லாமிய பிக்ஹு சட்டக்கலையின் தீர்ப்பு

இஸ்லாமிய பிக்ஹு சட்டக்கலையின் தீர்ப்புப்படி இறை விசுவாசியாக இருக்கின்ற அல்லது இறை விசுவாசியாக இருப்பானோ என்கிற ஐயப்பாட்டுடன் இருக்கின்ற ஒருவனைப் பார்த்து அவன் இறை நிராகரிப்பாளர் என்று கூறினால், கூறப்பட்டவன் முஸ்லிமாக இருந்திருந்தால் அவ்வாறு கூறியவன் இறை நிராகரிப்பாளராக மாறிவிடுவதாக எல்லா அறிஞர்களும் ஏகோபித்து ஏற்று இருப்பதால், ஹஸரத் அபூ தாலிப் (ரழி) அவர்கள் முஸ்லிமாக இருந்து முஸ்லிமாக மரணித்ததற்கு மிக உறுதியான சான்றாக அல் குர்ஆனிய வசனங்களும் பெருமானார் (ஸல்) அவர்களின் நடத்தைகளும், வரலாற்றுப் பதிவுகளும் இருக்கின்ற நிலையில் அந்தப் பெரியவரின் இறை விசுவாசத்திற்கு களங்கம் கற்பித்தலான நம்பிக்கையில் அவ்வாறு கூறுபவர்களை இறை நிராகரிப்பாளராக மாற்றிவிடுகின்ற அபாயம் பொதிந்திருப்பது இப்பொழுது விளங்குகிறதல்லவா.

புனையப்பட்ட செய்கை வெளிப்படையாக புலப்படுகின்ற புஹாரி கிரந்த ஹதீஸை நம்பி அபூதாலிப் (ரழி) அவர்களை இறை நிராகரிப்பாளர் என்று கருதி அதனை ஏதோ ஒருவழியில் வெளியே பிரஸ்தாபித்து அதன் மூலம் பெருமானார் (ஸல்) அவர்களது

குடும்பத்தவர்களது தூய்மைக்கு பங்கம் கற்பித்தலான செய்கையானது அவ்வாறு செயற்படுபரை இறை நிராகரிப்பாளராகவும் இறை முனிவுக்கு இலக்கானவராகவும் மாற்றிவிடும் அபாயத்தை இப்பொழுது உணர்ந்திருப்பீர்கள்.

அபூதாலிப் (ரழி) இறைநிராகரிப்பாளாராக இருந்திருந்தால் முஹம்மது (ஸல்) அவர்கள் அவரது பாதுகாப்பினையும், தயவினையும் ஒருபோதும் ஏற்று இருக்கப் போவதில்லை. ஏனெனில் அவ்வாறான செய்கை அவரை தூதுவராக அனுப்பிய அல்லாஹ்வுக்கும், அல்லாஹ்வால் அருளப்பட்ட அல்குர்ஆன் வழி காட்டல்களுக்கும் முற்று முழுதாக முரணான செயற்பாடாக இருந்திருக்கும் என்று மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

அபூதாலிப் (ரழி) இறை விசுவாசி என்பதற்கும், அவர் ஒரு மு.்மின் என்பதற்கும் தெளிவான அத்தாட்சியாக, ஆதாரமாக முஹம்மது (ஸல்) அவர்கள் தனது நீண்ட கால பாதுகாவலராக அவரை ஏற்றுக் கொண்ட செய்கை புலப்படுத்தி நிற்கின்றது என்பதனை மீளவும் நினைத்துப் பார்க்கவும்.

இறுதியாக இவ்வாறான தெளிவான உண்மைகளை மறுக்கும் அல்லது தெரிந்தும் மௌனமாக இருக்கும் அல்லது சாதாரண பொதுமக்கள் இவைகளை அறிந்து கொள்ள தடையாக இருக்கும் உலமாக்களைப்பற்றி, மக்கள் தலைவர்களைப்பற்றி அல்குர்ஆன் ஸூறா அன்ஆம் 26ம் வசனம் என்ன கூறுகிறது என்று பாருங்கள்.

"மேலும் அவர்கள் (பிறரையும்) அதை (கேட்கவிடாது) தடுக்கிறார்கள்: இவர்களும் அதைவிட்டும் ஒதுங்கிக் கொள்கிறார்கள்: அவர்கள் தங்களைத் தாங்களே நாசமாக்கிக் கொள்கிறார்கள்: ஆனால் அவர்கள் (இதைப்) புரிந்து கொள்வதில்லை" (அல்குர்ஆன் 6:26)

எவ்வளவு எளிமையாக அல்குர்ஆன் நிகழ்கால உலமாக்களைப் பற்றியும், பிடிவாதத்துடன் உண்மைகளை மறுக்கும் மக்கள் தலைவர்களைப்பற்றியும் விளக்கி, அவர்களது நிலைமைகளை

எச்சரித்து அவர்களது புரிந்து கொள்ள முடியாத தன்மையை உணர்த்தி நிற்கிறது?

மேலே ஆராயப்பட்ட தகவுகளின் சான்றுகளிலிருந்து உங்களால் சுயமாகவே அபூதாலிப் (ரழி) அவர்கள் ஏக விசுவாசியாக இருந்தார்களா? அல்லது இறை நிராகரிப்பாளராக இருந்தார்களா? என்று இறுதித்தீர்மானத்திற்கு வர முடியும் என்று நம்புகிறோம்.

நாம் கவனத்தில் கொள்ளத் தவறிய இஸ்லாமிய வரலாற்றின் இருண்ட பின்னணி நிகழ்வுகள்

முஹம்மது (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களின் பண்பியலை சிதைக்கின்ற விதமாக புனையப்பட்ட இவ்வாறான போலி ஹதீஸ்களின் உருவாக்கத்திற்கு காரணமான நிகழ்வுகள் முஹம்மது (ஸல்) அவர்களது மறைவுடனேயே ஆரம்பமாகி உள்ளதை நாம் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்த சூழ்நிலைகளின் உச்ச கட்டங்கள் ஹஸரத் உதுமான் (ரழி) அவர்களின் மறைவுடன் தொடங்கி ரஸுல் (ஸல்) அவர்களது அருமை பேரர் ஹஸரத் ஹுஸைன் (ரழி) அவர்களதும் அவர்களது குடும்பத்தினர்களது கர்பலா ஷஹீதுடன் இரு கூறாக பிளவுபட்டு இன்று வரை தொடர்கிறது.

இந்த விளைவுகளின் நிஜமான பின்னணி நிகழ்வுகளின் உண்மைகளுக்கு ஆதாரமாக இந்த சகாப்த்தத்தின் பெரும் சிந்தனையாளரும் தலைசிறந்த மார்க்க மேதையும் ஆய்வாளருமான ஹஸரத் மௌலான சைய்யித் அபுல் அ.்லா மௌதூதி (றஹ்) அவர்களின் ஆய்வுரை புத்தகமான ‘இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும்’ என்ற புத்தகத்தின் ஒரு பகுதியை இந்த ஆய்வுரையின் இனைப்பாகத் தருகிறோம்.

கிலாபத்தும் மன்னராட்சியும்

கிலா.்பத் என்கிற அற்புதமான அமைப்பை முஸ்லிம்கள் இழந்து போனது ஏதோ எதிர்பாராத, எதேச்சையான நிகழ்வு அல்ல,

திடீரென்று ஏற்பட்டதும் அல்ல. மாறாக, அதற்கான பின்னணிக் காரணங்கள் பல இருந்தன. அவை, பலவந்தமாக கிலா.்பத்தை, மன்னராட்சியை நோக்கி இழுத்துச் சென்றன.

இந்த மாற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அதைத் தடுத்து நிறுத்துவதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கத்தான் செய்தன. ஆனால், மாற்றத்தை கொண்டு வந்த காரணிகள் எந்தளவு வலிமை வாய்ந்தவையாக விளங்கின என்றால், அவற்றுக்கு முன்னால் இந்த ‘சாத்தியக்கூறுகள்’ ‘தடுக்கும் வாய்ப்புகள்’ எல்லாம் செல்லாக் காசுகளாகிவிட்டன!

உண்மையில் இது ‘உம்மத்தே முஹம்மதிய்யா-வின் இல்லையில்லை, மனித குலத்தின் துரதிஷ்டமாகும்!’

இப்போது நம்முன் உள்ள கேள்வி என்னவென்றால், கிலா.்பத்திற்கும், மன்னராட்சிக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் என்ன?

‘ஒன்று’ இருந்த இடத்திற்கு ‘இன்னொன்று’ வந்து விடுவதால் என்ன பெரிதாய் மாற்றம் நிகழ்ந்துவிடப் போகின்றது?

அதனால் முஸ்லிம்களின் ‘சமூகவாழ்வில்’ மாற்றங்கள் ஏதும் நிகழ்ந்தனவா?
இனி இவைகளை கொஞ்சம் கவனத்திற் கொள்வோம்.

01.கலீ.்பாவை தேர்ந்தெடுக்கும் முறையிலேயே மாற்றம்

உம்மத்தின் தலைவராக ஒருவரை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? என்கின்ற அடிப்படைவிதியே முதலில் மாற்றத்திற்கு ஆளாகிப்போனது!

‘கிலா.்பத்தே ராஷிதா’ வின் காலகட்டத்தில் எவ்வாறு இருந்தது என்றால்

- யாரும் தலைமைப் பதவிக்குரிய ‘வேட்பாளராக’ தன்னை அறிவித்துக் கொள்ளக்கூடாது:

- தன்னுடைய 'முயற்சி'களால், 'சாமர்த்தியங்கள்'களால் அதிகாரத்திற்கு யாரும் வரக்கூடாது:

- மாறாக, மக்கள் யாரை தகுதியானவராகக் கருதுகிறார்களோ, தங்களுடைய ஆலோசனை மூலம் அவரைத் தேர்ந்தெடுத்து அதிகாரத்தை அவரிடம் ஒப்படைப்பர்.

- 'பைஅத்' என்பது அதிகாரத்திற்கான அங்கீகாரம் அல்ல! மாறாக,? அதிகாரம் பெற அடிப்படைக் காரணியின் காரணம்.

- தன்னுடைய வலிமையை, பலத்தை பயன்படுத்தியோ, சதி செய்தோ யாரும் 'பைஅத்' பெற முயலக்கூடாது.

- 'பைஅத்'விஷயத்தில் மக்களுக்கு முழு சுதந்திரம் இருந்தாக வேண்டும்:

- எவ்விதக் கட்டுப்பாடும் , நிர்ப்பந்தமும் இல்லாத நிலையில் தன்னியல்பாக, தாங்களாக மக்கள் யாரைத் தேர்ந்தெடுக்க வில்லையோ அவர் அதிகாரத்திற்கு வரமுடியாது:

நேர்வழி நின்ற குல∴பாயே ராஷிதீன்களில் ஒவ்வொரு கலீ∴பாவும் இந்த 'நடைமுறை'களின் வழியாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் எவரும் கிலா∴பத்தை அடைவதற்காக, எந்தவிதமான 'முயற்சி'யையும் மேற்கொள்ளவில்லை! மாறாக, அவர்கள் மீது அது திணிக்கப்பட்டபோது ஏற்றுக்கொண்டார்கள்.

அலி (ரழி) அவர்களைப் பற்றி வேண்டுமானால் யாரேனும், ஏதாவது கூறவிரும்பினால் அதிகபட்சம் 'அவர் தன்னை கலீபாவிற்கு தகுதியானவராகக் கருதினார்' என்று மட்டும் கூறலாம்: அப்போது அதற்கான ஒரு சிறு ஆதாரத்தைக் கூட நம்மால் வரலாற்றில் காண முடியாது. அவர் தன்னை தகுதியானவராக 'கருதினார்' என்பது மேற்கண்ட இந்நடைமுறைக்கு மாற்றமானதாக ஆகாது, ஆக, நான்கு கலீ∴பாக்களும் பொறுப்புக்கு வந்தது என்பது, கொடுக்கப்பட்டதே

தவிர, (அவர்களாக முயன்று) பெற்றுக் கொண்டது அல்ல!

மன்னராட்சியின் ஆரம்பமே இந்த நடைமுறையை உடைத்துக்கொண்டுதான் கிளம்பியது! ஹஸ்ரத் முஆவியா (ரழி)யின் கிலா∴பத்தைப் பொறுத்தவரை 'முஸ்லிம்களாக விரும்பி அவரைத் தேர்ந்தெடுத்தார்கள்: முஸ்லிம்கள் விரும்பவில்லை என்றால் அவர் கலீபா ஆகியிருக்க முடியாது: என்பதெல்லாம் கிடையாது!' அவர் கலீ∴பாவாக விரும்பினார்: 'கலீ∴பா'பதவியை 'பெற்றுக்'கொண்டார்: முஸ்லிம்களின் விருப்பத்திற்கெல்லாம் அங்கு வேலையே இல்லை! (இன்றும் கூட மத்திய கிழக்கு முஸ்லிம் மன்னர்களின் நிலைமை இதுவே.)

மக்களாக விரும்பி அவரை கலீ∴பாவாக ஆக்கவில்லை: அவராக ஆகிக்கொண்டார்: எனவே, 'வேறுவழியில்லாமல்' மக்கள் பைஅத் செய்தாகவேண்டிய கட்டாயம் நேர்ந்தது.

ஒருவேளை மக்கள் பைஅத் செய்திருக்கவில்லை என்றால் அவர் பதவியைவிட்டு விலகியிருப்பாரா? என்றால் அதெல்லாம் ஒன்றும் கிடையாது. மாறாக, கலவரம், வன்முறை தலைவிரித்தாடியிருக்கும்! எனவே, 'அமைதி' நிலவவேண்டுமே என்ற ஒரே காரணத்திற்காகத்தான் 'பைஅத்' செய்தார்கள் (ஹி 41 ரபீவுல் அவ்வல்) இமாம் ஹஸன் (ரழி) அவரோடு சமாதானமாய் போன பிறகு எல்லா சஹாபாக்களும், தாபிஈன்களும் அவரை ஏற்றுக் கொண்டார்கள். இந்த சமாதானம்கூட வெறும் நாடகமே.

ஹஸரத் முஆவியா (ரழி)யும் இதனை நன்கு புரிந்திருந்தார் பதவிக்கு வந்தவுடன் 'புனித மதீனா'வில் அவர் ஆற்றிய உரையில் இது புலனாகின்றது. அவர் அங்கு குறிப்பிட்டார்.

"நான் பதவிக்கு வந்துள்ளது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இல்லை என்பதையும், நீங்கள் யாரும் அதை விரும்பவும் இல்லை என்பதையும், நான் பதவி ஏற்கின்ற இந்நேரத்தில் நன்றாகவே புரிந்து வைத்துள்ளேன்! உங்கள் உள்ளங்களில் உள்ளதை நான் நன்றாகவே அறிகிறேன்: என்னுடைய இந்த வாளின் வலிமையைக் கொண்டுதான் நான் பதவியைப் பிடித்துள்ளேன். உங்களுக்கு தேவையானது

அனைத்தையும் நான் செய்யவில்லை என்றால், நான் செய்கின்ற சிலவற்றைக் கொண்டு திருப்தி அடைந்து கொள்ளுங்கள்!"

இவ்வாறு துவங்கிய இம்மாற்றம் யஜீத் பதவிக்கு வந்தவுடன் வலுவாக வேரூன்றியது. அதன் பிறகு இன்றைய இருபதாம் நூற்றாண்டில் முஸ்த.்.பா கமால் உதுமானியின் கிலா.்.பத்தை வீழ்த்தி கொக்கரிக்கும்வரை அதில் சிறு சலனமோ, சலசலப்போ ஏற்படவே இல்லை!

வலிமையைப் பயன்படுத்தி பைஅத் பெறுவதும் ஒரே கோத்திரத்தின் பரம்பரை ஆட்சி தொடர்வதும் இதன் மூலம் வழக்கத்திற்கு வந்தது. அதன் பிறகு இன்று வரை 'தேர்ந்தெடுக்கும் கிலா.்.பத்' முறைக்கு திரும்பும் சந்தர்ப்பம் முஸ்லிம்களுக்கு கிடைக்கவேயில்லை.

முஸ்லிம்களின் சுதந்திரமான ஆலோசனையின் மூலம் பதவிக்கு வருவதற்கு மாற்றமாக, ஆட்சியாளர்கள் வலிமையின் மூலம் ஆட்சிக்கு வரத்தொடங்கினர்.

'பைஅத்' மூலமாக ஆட்சிக்கு வரவேண்டியது ஒழிந்துபோய், ஆட்சிக்கு வந்தபிறகு பைஅத்-தை 'பெற்றுக்கொள்வது' வழக்கத்திற்கு வந்தது. பைத்அத் வழங்குவதோ, வழங்காமல் இருப்பதோ முஸ்லிம்களின் உரிமை என்ற நிலை இல்லாமல் போனது.

அதிகாரத்திற்கு வருவதும், வராமலிப்பதும் 'பைஅத்'தைப் பொறுத்தது (ஷர்த்து) என்ற நிலை மாறிப்போனது ஆட்சிக்கு வந்துவிட்டவரிடம் 'பைஅத்' செய்யாமல் இருக்கலாம் என்பது மக்களுக்கு இயலாமல் போனது அதுபோன்றே மக்கள் 'பைஅத்' செய்யாததால் ஆட்சிக்கு வந்தவர் விலகிவிட வேண்டும் என்பதும் இல்லாமல் போனது.

முஸ்லிம்களின் ஆலோசனையின் மூலமாக அமையாத ஆட்சி, அரசு, சட்ட அடிப்படையில் கூடுமா? கூடாதா? என்கின்ற விவாதம் இங்கு நமக்கு தேவையில்லை. மாறாக, நம்முன் உள்ள கேள்வி என்னவென்றால்

கிலா.்.பத்தை அமைக்க இஸ்லாம் கூறும் வழிமுறை என்ன

'நேர்வழி நின்ற கலீ.்.பாக்கள்' கடைபிடித்த வழிமுறையா?

அல்லது,

ஹஸரத் முஆவியா (ரழி)யும், அவருக்கு பின்வந்தோரும் பின்பற்றிய நடைமுறையா?

"ஒரு காரியத்தை இப்படித்தான் செய்தாக வேண்டும்" என்று இஸ்லாம் வழிமுறையை வகுத்துக் கொடுக்கின்றது.

இது ஒரு நடைமுறை.

"வேறு வழிமுறைகளைப் பின்பற்றி அக்காரியம் செய்யப்பட்ட பின்பு, அதை மாற்ற, சரிப்படுத்த முயற்சித்தால் அதைவிட மோசமான ஒரு சூழ்நிலைவந்துவிடும் என்ற நிலையில் அதை சகித்துக் கொள்ளும்படி இஸ்லாம் கூறுகிறது."

இது ஒரு முறை

ஒன்று, ஆகுமானது மட்டுமல்ல! கண்டிப்பாக செய்தே ஆக வேண்டியதும் கூட!

இன்னொன்று, விரும்பி ஏற்றுக்கொள்வது அல்லது: வேறு வழியில்லாமல் பொறுத்துக் கொள்வது!

இவையிரண்டும் எப்படி சமமாகும்?

"இவை இரண்டும் ஒன்று போலத்தான்: இஸ்லாம் இவ்விரண்டையும் சமமாகத்தான் மதிக்கின்றது" என்று கூறுபவன் மிகப்பெரிய அநியாயக்காரன் ஆவான்.

02. கலீ.்.பாக்களின் வாழ்க்கை முறையில் மாற்றம்

இரண்டாவது மிகப்பெரிய மாற்றம் என்னவென்றால்,

மன்னராட்சி தொடங்கிய உடனேயே, மன்னர்களான கலீ.்.

பாக்கள் (?) கைசர், கிஸ்ரா போன்ற அரசர்களின் வாழ்க்கையை வாழத் துவங்கினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், நேர்வழி நின்ற கலீஃபாக்களும் வாழ்ந்த வாழ்க்கை முறையை கைவிட்டனர்.

- அவர்கள் மாடமாளிகைகளில் வசிக்கத் துவங்கினர்.
- அரண்மனைகளை பாதுகாக்கவும், முன், பின் பராக்சொல்லி செல்லவும் மெய்க்காப்பாளர்கள் (*Bodyguards*) நியமிக் கப்பட்டனர்.
- அரசபையினர், மன்னர்களுக்கும், மக்களுக்கும் இடையே தடுக்கும் திரைகளாக மாறினர்.
- மக்கள் ஆட்சியாளர்களை எளிதில் சந்திக்க முடியவில்லை.
- ஆட்சியாளர்கள் மக்களை சந்திப்பதும், மக்கள் மத்தியில் உலாவருவதும் இல்லாமல் போனது.
- குடிமக்களின் நிலையை அறிந்துகொள்ள ஆட்சியாளர்கள் அரசபையினர் எனும் இடைத்தரகர்களை நாடியிருக்கும் நிலை ஏற்பட்டது. இடைத்தரகர்கள் மூலமாக ஒருபோதும் உண்மை நிலை அறிய முடியாது என்பதற்கு வரலாறே சாட்சி!
- இடைத்தரகர்களின் தயவு இல்லாமல் நேரிடையாக மக்கள் ஆட்சியாளர்களை சந்திப்பதும், முறையிடுவதும் முடியவே முடியாத ஒன்றாக ஆகிப்போனது.

இது முழுக்க, முழுக்க குலஃபாயே ராஷிதீன்களின் வழிமுறைக்கு நேர் எதிரானது ஆகும், அவர்கள் எந்நேரமும் மக்கள் மத்தியிலேயே இருந்தார்கள். யார் வேண்டுமானாலும் அவர்களைத்தடுத்து நிறுத்தி கேள்வி கேட்கலாம், ஐந்து நேரமும் மக்களோடு மக்களாக நின்று தொழுது வந்தார்கள். ஜும்ஆ மேடைகளில் மக்களுக்கு உபதேசம் செய்தார்கள். அரசாங்க கொள்கையை விளக்கிக் கூறினார்கள். தம்முடைய அரசு பற்றி

சாதாரண குடிமகன் கேட்கும் கேள்விக்கும் பொறுமையாக விளக்கி பதில் கூறினார்கள்.

தன்னுடைய உயிருக்கே உலைவந்துவிட்ட இறுதிக் காலத்தில் கூட ஹஸ்ரத் அலி (ரழி) கூஃபாவில் இம்முறையை நிலை நாட்டினார்கள். ஆனால், மன்னராட்சியின் ஆரம்பத்திலேயே இம்முறையை கைகழுவிவிட்டு ஈரானிய, ரோமானிய 'இராஜபாட்டை'யில் நடக்கத் துவங்கினார்கள், இது முதலில் ஹஸ்ரத் முஆவியா (ரழி) வின் காலத்தில் துவங்கியது. படிப்படியாக வளர்ந்து பிற்காலத்தில் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இன்றும் கூட முஸ்லிம் மன்னர்கள், முஸ்லிம் ஆட்சியாளர் களிடம் இத்தகைய போக்கே காணப்படுகின்றது.

03. பைத்துல்மால் நிலையில் மாற்றம்

மூன்றாவது முக்கிய மாற்றம் பைத்துல்மால் குறித்த கொள்கையில் நடந்தது.

பைத்துல்மால் என்பது கலீபாவிடமும், அவருடைய அரசாங் கத்திடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் அமானிதப்பணம ஆகும் - பைத்துல்மாலைப் பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் இதுதான்!

தான் விரும்பியவாறு செலவு செய்ய கலீஃபாவுக்கு உரிமை கிடையாது. சட்டத்துக்கு புறம்பான வகையில் ஒரு ரூபாயைக் கூட அதில் சேர்க்கக் கூடாது. அதே போல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு ரூபாயைக்கூட செலவு செய்யக்கூடாது. ஒவ்வொரு நயாபைசாவுக்கும் கலீஃபா பதில் சொல்லியாக வேண்டும். தனக்காக ஒரு நடுத்தர குடிமகனின் வருமான அளவு ஊதியத்தை அவர் பெற்றுக் கொள்ளலாம்.

மன்னராட்சியில், பைத்துல்மால் என்பது அரசர் மற்றும் அரச

குடும்பத்தினரின் சொந்த சொத்தாக ஆகிப்போனது. பொதுமக்கள் என்பவர் வரிகட்டக்கூடியவர்கள், விசாரிக்கும் உரிமை எல்லாம் அவர்களுக்கு கிடையாது என்கிற நிலைமை உருவாகிப் போனது.

அக்காலத்தைய அரசர்கள், இளவரசர்கள் மட்டுமல்லாது கவர்னர்கள், தளபதிகள் ஆகியோரின் இராஜபோக வாழ்க்கையைப் பார்த்தாலே பைத்துல்மாலை எப்படியெல்லாம் தங்கள் இஷ்டத்திற்கு அவர்கள் செலவு செய்தார்கள் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆட்சிக் வந்தவுடன் அரச குடும்பத்தினர் கைவசம் இருந்த எல்லா ஆக்கிரமிப்பு சொத்துக்களையும் திரும்பப்பெற ஆணையிட்டார்.

அப்போது அவர் முதலில் தன்னிடமிருந்த தன்னுடைய தந்தை அப்துல் அஜீஸ் பின் மர்வானால் கொடுக்கப்பட்ட 40,000 தீனார் வருட வருமானம் தருகின்ற சொத்துக்களை அரசாங்கம் வசம் ஒப்படைத்தார்.

அவற்றுள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சொந்த சொத்தான ‘ஃபதக்’ ஈத்தம் பழத்தோட்டமும் அடங்கியிருந்தது. இந்தத் தோட்டம் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு உரியது. அதனை அவர்கள் தமது அருமை மகள் பாத்திமா (ரழி) அவர்களுக்கு நன்கொடையாக வழங்கியிருந்தார்கள். இந்தத் தோட்டத்தின் வருவாயில் தான் அந்தக் குடும்பம் சுகமாக வாழ்ந்து வந்தது.

முதலாவது கலீபா பதவிக்கு வந்தவுடன் இந்த தோட்டத்தை அரசுக்கு சுவீகரித்து அதனை அண்ணலாரின் அருமைப் புதல்விக்கு தர இயலாது என்று மறுத்து இருந்தார்கள். இந்தத் தோட்டத்தின் பிணக்கு ஹஸரத் உமர் (ரழி) அவர்களுடைய இறுதிக்கட்டம் வரை தொடர்ந்து கொண்டிருந்தது. கடைசியில் ஹஸரத் உமர் (ரழி) அவர்கள் அந்தத் தோட்டத்தை மீண்டும் ரஸூல் (ஸல்) அவர்களது குடும்பத்தினருக்கே திருப்பிக் கொடுத்துவிட்டார்கள்.

ஆனால் மர்வான் இப்னுல் ஹகம் தன்னுடைய ஆட்சிக்

காலத்தில் அதைக் கைப்பறி தனது சொந்த சொத்தாக ஆக்கிக் கொண்டான்.

‘பைத்துல் மாலை’ செலவு செய்தது எல்லாம் இது போன்ற முறைகெட்ட வழிகளில் என்றால், ‘பொதுநிதி’க்கு வரும் செல்வமும் தவறான வழிகளிலே பெறப்பட்டது. ஹலால், ஹராம் என்பதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் கூட யோசித்துப் பார்க்கப்படுவதே இல்லை.

ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் தனக்கு முன்னால் சென்ற ‘உமைய்யா குலத்துப் பேரரசர்கள்’ வசூலித்து வந்த முறைகேடான வரிகளைப் பற்றி தன்னுடைய ஓர் அரசாணையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். பொது நிதிக்கு செல்வம் சேகரிக்கும் விஷயத்தில் அவர்கள் எப்படியெல்லாம் ஷரீஅத்தை உடைத்து நொறுக்கினார்கள் என்பது அதிலிருந்து தெரிய வருகிறது.

அதில் உச்சகட்ட கொடுமை என்னவென்றால், இஸ்லாத்தைத் தழுவிய மாற்று மதத்தினர் மீதும் ‘ஜிஸ்யா’ வரி விதிக்கப்பட்டது. ‘ஜிஸ்யா’ வரியிலிருந்து தப்பிப்பதற்காகத் தான் இவர்கள் இஸ்லாதைத் தழுவுகிறார்கள் என்று காரணமும் சொல்லப்பட்டது. ஆனால், உண்மையான காரணம் என்னவென்றால் இஸ்லாம் பரவுவதன் மூலம் தம்முடைய ‘வருமானம்’ தடைப்பட்டுப் போய்விடுமோ என்று அவர்கள் பயந்தார்கள்.

இப்னு அசீர் உடைய இந்த அறிவிப்பை பாருங்கள்

இராக் உடைய ‘வைஸ்ராய்’ ஆன ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் பிறகு அவருடைய அதிகாரிகள் கடிதம் எழுதினார்கள். ‘திம்மிக்கள் நகரங்களில் குடியேறி வருகிறார்கள். இதன் காரணமாக வருமானம் தடைப்பட்டுவிட்டது!’

‘அவர்கள் அனைவரையும் ஊரைவிட்டு வெளியேற்றுங்கள்! முன்புபோலவே, அவர்களிடமிருந்து ஜிஸ்யா வசூல் செய்யுங்கள்!’ என்று ஹஜ்ஜாஜ் பகிரங்க அறிவிப்பை வெளியிட்டான். இவ்வாணை அமுல்படுத்தப்பட்டபோது,

''யா முஹம்மதாஹ்! யா முஹம்மதாஹ்!!'' என்று கூக்குரலிட்டவாறு, கதறி அழுதவர்களாக அந்த 'புதிய' முஸ்லிம்கள் 'இதை நாங்கள் இனி எங்கே சென்று முறையிடுவோம்!' என்று புலம்பியவர்களாக வெளியேறினார்கள்.

இந்நிலையை பார்க்கச்சகியாமல் பசரா, கூ∴பா நகரஉலமாப் பெருமக்கள் பொங்கி எழுந்தார்கள். என்றாலும் ஹஜ்ஜாஜ் பின் யூஸுபை எதிர்க்க இயலாத அவர்கள் அந்த அப்பாவிகளோடு சேர்ந்து வெளியேறிச் சென்றார்கள்.

ஹஸரத் உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களிடம் குராஸான்-லிருந்து வந்த குழுவொன்று முறையிட்டது 'புதிதாய் இஸ்லாத்தை தழுவிய ஆயிரக் கணக்கானோரிடம் ஜிஸ்யா கட்டயமாக வசூலிக்கப்படுகிறது. ஆளுநர் எந்த அளவு இனவெறி கொண்டவராக உள்ளார் என்றால், 'மற்ற குலத்தைச் சேர்ந்த நூறுபேர்களைக் காட்டிலும் என்னுடைய குலத்தைச் சார்ந்த ஒரு நபர் மேலானவர்!' என்று வெளிப்படையாகவே கூறுகிறார்!'

இதன் காரணமாக அல்ஜர்ராஹ் பின் அப்துல்லாஹ் அல்ஹகமி-யை உடனடியாக பதவி இறக்கினார் உமரிப்னு அப்துல் அஜீஸ். தன்னுடைய ஆளுநருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

'அல்லாஹ் தஆலா முஹம்மது (ஸல்-அம்) அவர்களை ஒரு 'தாஈ'-யாகத்தான் அனுப்பினான். 'தாசில்தாராக அல்ல!'

04 கருத்துச் சுதந்திரத்திற்கு தடை

இக்கால கட்டத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றங்களுள் ஒன்று, நன்மையை ஏவி, தீமையை தடுக்கும் உரிமை முஸ்லிம்களிடம் இருந்து பிடுங்கப்பட்டது ஆகும்.

நன்மையை ஏவி, தீமையை தடுப்பதை உரிமையாக அல்ல, மாறாக முஸ்லிம்களின் மீது கட்டாயக் கடமையாக இஸ்லாம் ஆக்கியிருக்கிறது. சமூகத்தின் மனசாட்சி உயிரோடு இருக்கவேண்டும்:

குடிமக்கள் தாம் நினைத்ததை வெளிப்படுத்த வேண்டும்: தவறு செய்பவர் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் தட்டிக்கேட்கும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.

இஸ்லாமிய அரசு ஆரோக்கியமாகவும், சரியான பாதையிலும் இருப்பது இவற்றைச் சார்ந்தே உள்ளது.

'கிலாபத்தே ராஷிதா'வில் மக்களுக்கு இவ்வுரிமை முழுமையாக கிடைத்தது. நேர்வழி நின்ற கலீ∴பாக்கள் அதை வெறுமனே அனுமதிக்கவில்லை! மாறாக, ஊக்கப்படுத்தினார்கள். தவறுகளைச் சுட்டிக் காட்டுவோர், விமர்சிப்போர் அவர்கள் காலத்தில் கண்டிக்கப்படவில்லை. பாராட்டப்பட்டார்கள்: பரிசளிக்கப்பட்டார்கள்: ஆட்சேபணைக் குரல் எழுப்புவோர் அடக்கிவைக்கப்பட வில்லை, அறிவுபூர்வமான, அவர்கள் ஏற்றுக் கொள்ளும் பதில்கள் அளிக்கப்ட்டன: விளங்க வைக்கப்பட்டனர்.

ஆனால் மன்னராட்சிக் காலத்தில் கருத்துக்களை வெளியிடுவது தடைசெய்யப்பட்டது: வாய்ப்பூட்டுகள் போடப்பட்டன: வாயைத் திறப்பதென்றால் பாரட்டுவதற்காக மட்டுமே திறக்கவேண்டும். இல்லையென்றால் வாய்மூடி மௌனியாக இருக்கவேண்டும் என்கிற நிலை உருவானது.

உண்மையை உரக்கச் சொல்லாமல் உங்களால் இருக்க முடியாது என்றால் அதற்குப் பரிசாக சிறைவாழ்வையும், கொலைக்களத்தையும் சந்திக்கத் தயாராக இருக்கவேண்டும் என்கிற பரிதாபகரமான நிலமை முஸ்லிம் உம்மத்தில் உருவானது.

எனவே, யார்யாரெல்லாம் உண்மையயை மக்களிடையே கூறவும், தவறுகளைத் துணிந்து தடுக்கவும் முற்பட்டார்களோ அவர்களுக்கு கடுமையாக தண்டனைகள் கொடுக்கப்பட்டன! அதன் மூலம் ஒட்டுமொத்த மக்களும் பயமுறுத்தப்பட்டனர்!

இந்த புதிய கொள்கை ஹஸரத் முஆவியா (ரழி)வின் ஆட்சிக் காலத்தில் ஹஸரத் ஹுஜ்ர் பின் அதீ கொலை செய்யப்பட்டதிலிருந்து துவங்கியது. ஹுஜ்ர் பின் அதீ உலகப் பற்றற்ற ஜாஹித் ஆகவும்,

சமூகத்தின் சான்றோர்களில் ஒருவராகவும், ஆபிதான சஹாபியாகவும் இருந்தார்.

ஹஸரத் முஆவியா (ரழி) காலத்தில் மிம்பர் மேடைகளில் ஹஸரத் அலியை பகிரங்கமாக திட்டும் கலாச்சாரம் தோன்றி வளர்ந்தது! பொதுமக்களால் இதை பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்றாலும், அவர்கள் 'இரத்தத்தை' முழுங்கி அமைதி காத்தனர்!

கூஃபாவில் வசித்துவந்த ஹுஜ்ர் பின் அதீயினால் இதை சகித்துக் கொள்ள இயலவில்லை. அவர், அதற்குப் பதிலாக ஹஸ்ரத் அலியைப் போற்றியும், ஹஸரத் முஆவியாவைத் தூற்றியும் உரைகள் நிகழ்த்தத் துவங்கினார். ஹஸரத் முகீரா (ரழி) கவர்னராக இருந்தவரை அவரைக் கண்டு கொள்ளவில்லை.

அவருக்குப் பிறகு பஸறா கவர்னராக இருந்த ஸியாதின் ஆளுகையின் கீழ் கூஃபா இணைக்கப்பட்டதும் இருவருக்குமிடையில் மோதல் துவங்கியது.

குத்பா உரைகளில் ஸியாத் ஹஸரத் அலியை திட்டும் போதெல்லாம், உடனே ஹஸரத் ஹுஜ்ர் பின் அதீ எழுந்து நின்று பதில் கூறத் தொடங்கனார். ஒருமுறை ஸியாத் வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு தாமதமாக வந்தபோதும் அதனைக் கண்டித்துக் கூறினார்.

கடைசியில், அவரும், அவருடைய பன்னிரண்டு தோழர்களும் கைது செய்யப்பட்டனர். அவருக்கு எதிராக ஏராளமான சாட்சிகள் தயார் செய்யப்பட்டனர்.

'அவர்கள் ஒரு குழுவாக செயற்பட்டனர்; வெளிப்படையாக கலீஃபாவை திட்டிவந்தனர்; அமீருல் முஃமினீனுக்கு எதிராகப் போராடுமாறு மக்களை தூண்டினர்; கிலாஃபத், அபூதாலிபுடைய, குடும்பத்தினருக்கு மட்டுமே சொந்தமானது; வேறு எவருக்கும் அதில் உரிமையில்லை என்பதே அவர்களின் வாதம்; நகரில் அவர்கள்

குழப்பம் விளைவித்தனர்: அபூ துராமை (அலி) (ரழி) ஆதரிக்கின்றனர்; அவருக்காக வெளிப்படையாக பிரார்த்தனை செய்கின்றனர்; அவரை எதிர்ப்பாரோடு இணைந்து கொள்வதில்லை!'

இதுவே அவர்களுக்கெதிரான குற்றப்பத்திரிகை ஆகும்! அதற்கான சாட்சிகளின் பட்டியலில் நீதிபதி ஷுரைஹ் அவர்களின் பெயரும் இடம் பெற்றிருந்தது. ஆனால், அவர் ஒரு கடிதத்தை ஹஸ்ரத் முஆவியா (ரழி)வுக்கு எழுதி அனுப்பினார்.

'ஹுஜ்ர் பின் அதீ-க்கு எதிரான சாட்சிகளின் பட்டியலில் எனது பெயரும் உள்ளதாக கேள்விப்பட்டேன்! தொழுகையை நிலை நாட்டுபவர்களில் ஒருவராக, ஜகாத் கொடுப்பவராக, தொடர்ந்து ஹஜ், உம்ரா செய்பவராக, நன்மையை ஏவி, தீமையை தடுப்பவராக ஹுஜ்ர் பின் அதீ திகழ்கிறார். இதுவே அவரைப்பற்றிய எனது சாட்சியமாகும். அவருடைய உயிரும், பொருளும் ஹராம் ஆகும்! (அதாவது அவரை கொலை செய்வதோ, அவருடைய பொருட்களை ஜப்தி செய்வதோ கூடாது) தாங்கள் நினைத்தால் அவரை கொலை செய்யலாம்: அல்லது மன்னித்து விட்டுவிடலாம்!'

இப்படியாக, இக் 'குற்றவாளி'? முஆவியா (ரழி)விடம் அனுப்பிவைக்கப்பட்டார் அவரைக்கொன்று விடும்படி முஆவியா (ரழி) ஆணையிட்டார். கொலைக்களத்திற்கு அழைத்துச் சென்றவுடன், பணியாளர்கள் அவர்களிடம்.

"நீங்கள் அலி (ரழி) அவர்களையும், ரஸூல் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தார்களையும் ஆதரிப்பதை விட்டுவிட்டோம் என்று கூறிவிட்டால் உங்களுடைய தண்டனையை நிறுத்திவிடும்படியும் இல்லாவிட்டால் கொன்று விடும்படியும் எங்களுக்கு கூறப்பட்டுள்ளது" என்றனர்.

ஆனால் அவர்கள் அதனை நிராகரித்துவிட்டார்கள். ஹுஜ்ர் பின் அதீ கூறினார். "இறைவனுக்கு பிடிக்காத ஒன்றை என்னால் சொல்லவே இயலாது!" இறுதியாக, அவரும், அவருடைய ஏழு தோழர்களும் கொலை செய்யப்பட்டனர்.

அப்துல் ரஹ்மான் இப்னு ஹஸ்ஸான் என்ற ஒரு தோழரை ஹஸ்ரத் முஆவியா (ரழி) மோசமான முறையில் கொன்றுவிடும்படி கூறி ஸியாத் இடம் திருப்பி அனுப்பிவிட்டார். அதுபோன்றே அவர் உயிரோடு புதைக்கப்பட்டார்!

இச்சம்பவம் உம்மத்தின் அனைத்து சான்றோர்களையும் பலமாக உலுக்கியது. அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி), ஹஸ்ரத் ஆயிஷா (ரழி) ஆகியோர் இதனைக் கேட்டு அதிர்ந்து போயினர். இவ்வாறு செய்துவிடாதீர்கள் என்று முன்கூட்டியே ஹஸ்ரத் ஆயிஷா (ரழி), ஹஸ்ரத் முஆவியா (ரழி)வுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். எனினும் ஹஸரத் முஆவியா (ரழி) அவர்கள் அதனை துச்சமாக மதித்து தூக்கி எறிந்து விட்டார்கள். பின்னர் ஒருமுறை ஹஸரத் முஆவியா (ரழி) அவர்களை சந்தித்தபோது ஹஸ்ரத் ஆயிஷா (ரழி) அவரிடம் வினவினார் "முஆவியாவே! ஹுஜ்ரை கொலை செய்தபோது அல்லாஹ்வுடைய பயம் உங்களுக்கு கொஞ்சங்கூட ஏற்படவில்லையா?" அதற்கு ஹஸரத் முஆவியா (ரழி) எதுவுமே கூறவில்லை.

ஹஸ்ரத் முஆவியா (ரழி)யின் கவர்னர்களுள் ஒருவரான குராசான் ஆளுநர் ரபீ:. பின் ஸியாத் அல்ஹாரிஸி இதனைக் கேள்விப்பட்டவுடன் துள்ளியெழுந்து கதறினார்.

"என்னுடைய இறைவா! என்னிடம் ஏதேனும் நன்மை எஞ்சியுள்ளது என்று நீ நினைத்தால், என்னை இவ்வுலகிலிருந்து எடுத்துவிடு!"

ஹஸ்ரத் பசரீ (ரஹ்) கூறிவதாவது: "ஹஸ்ரத் முஆவியா (ரழி) அவர்கள் செய்த நான்கு செயல்களில், ஏதாவது ஒன்றை வேறொருவன் செய்திருந்தால் அதனாலேயே அவன் அழிந்து போயிருப்பான்.

1) உம்மத்தில் பெரும் பெரும் சஹாபாச் சான்றோர்கள் உயிரோடு உள்ளபோதே, ஆலோசனை - ஷூறா - அடிப்படையில் இல்லாமல் வாளைக் கொண்டு அவர் அதிகாரத்திற்கு வந்தது.

2) அவர் தன்னுடைய மகனை தனக்குப்பின் பொறுப்பாளராக்கியது. அவனோ குடி, போதைப் பொருட்களை பயன்படுத்துபவனாக இருந்தான்: பட்டாடைகளை அணிந்துவந்தான்: தம்பூரா என்னும் இசைக்கருவியை இசைக்கும் பழக்கம் உடையவனாக இருந்தான்.

3) ஸியாதை அவர் தன்னுடைய குடும்பத்தில் இணைத்துக் கொண்டது. ஆனால், நபிகளார் (ஸல்) அவர்களோ, "யாருடைய படுக்கையில் குழந்தை பிறக்குமோ, அது அவருக்கே உரியதாகும். விபச்சாரம் செய்தவனுக்கோ கல்லடிதான்!" என்று தெளிவாக கூறியிருந்தார்கள்.

4) ஹுஜ்ர்-ஐயும் அவருடைய தோழர்களையும் அவர் கொலை செய்தது.

இதற்குப் பிறகு தான் தமக்கு எதிராகக் கிளம்பும் குரல்களை அடக்கும்போக்கு அதிகரித்தது!

மர்வான் பின் ஹகம் மதீனாவில் கவர்னராக இருந்தபோது, அவன் பேசிய ஏதோ ஒன்றை மறுத்து ஹஸ்ரத் மிஸ்வர் பின் ம:. க்ரமா 'நீ சொன்னது தவறு!' என்று கூறியதற்காக அவர்களை எட்டி உதைத்தான்

ஒரு முறை ஹஜ்ஜாஜ் பின் யூசு:.ப் வெள்ளிக்கிழமை குத்பாவை வெகு நேரம் நீட்டி தொழுகையை தாமதப்படுத்தியபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்கள் அதனை கண்டித்தார். அவரைப் பார்த்து அவன் கூறினான்: "உங்களுடைய இவ்விரண்டு கண்களும் உள்ள தலையை சேதப்படுத்திவிட்டால் என்ன! என்று எனக்குத் தோன்றுகிறது!"

ஏறக்குறைய இதேபோன்றதொரு அறிவிப்பு இப்னு சஅத் தன்னுடைய தபக்காத்-தில் குறிப்பிட்டுள்ளார். பாகம்: 4, பக்கம்: 184

அப்துல் மாலிக் பின் மர்வான் ஹி 75-ல் மதீனா சென்றபோது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மிம்பர்மேடையின் மீது நின்றவாறு அறிவிப்பு செய்தான்:

"நான் இந்த உம்மத்தை வாளைத்தவிர வேறு எதைக் கொண்டும் சீர்திருத்த நினைக்கவில்லை.... இப்போது யாராவது என்னிடம் 'இத்தக்கில்லாஹ்' (அல்லாஹ்வுக்கு அஞ்சிக்கொள்) என்று கூறினால் அவனுடைய தலையைச் சீவிவிடுவேன்!"

வலீத் பின் அப்தில் மாலிக் ஒருமுறை ஜும்ஆ குத்பாவை நீட்டிக் கொண்டே சென்றான், அசருடைய நேரமும் கடந்து சென்றுவிட்டது. ஒரு மனிதர் எழுந்து நின்று கூறினார்:

"அமீருல் மு.்.மினீன் அவர்களே! நேரம் உங்களுக்காக காத்துக் கொண்டிருக்காது. இவ்வளவு நேரம் தொழுகையை காலதாமதப் படுத்தியதற்கு தாங்கள் இறைவனிடம் எந்தவித சமாதானமும் கூறும் வாய்ப்பில்லாமல் போகும்!" என்று கூறினார்.

வலீத் உடன் மறுமொழி கூறினான்: "நீ சொன்னது முழுக்க, முழுக்கச் சரி, மனிதனே! ஆனால், நீ நிற்கின்றாயே அது இவ்வளவு நேர்மையான மனிதன் நிற்பதற்கு உகந்த இடம் அல்ல!"

எனவே, அரசாங்க மெய்க்காப்பாளர்கள் அவரை உடனே கொலை செய்து சுவர்க்கத்திற்கு அனுப்பிவைத்தார்கள்

இதன் காரணமாக மக்களிடைய சிறுகச்சிறுக, ஊக்கம் குன்றிப்போனது! ஆதாய நோக்கு அதிகரித்துப்போனது! வாய்மையைக் கூறி வம்பை விலைக்கு வாங்குவானேன்? என்று அனைவரும் வீட்டிற்குள் முடங்கிப்போக ஆரம்பித்தார்கள். மனசாட்சியை விற்பதும், ஆட்சியாளர்களை வானளாவப் புகழ்வதும் மக்களிடையே அதிகரித்து நேர்மைக்காக குரல் கொடுப்பதும் நியாயத்திற்காக போராடுவதும் இல்லாமாற்போனது, அரசாங்கத்தைப் பற்றிய கவலை அறவே மக்களுக்கு இல்லாமற்போனது. யார் வந்தால் என்ன? யார் போனால் என்ன? என்று மக்கள் வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்களாய் மாறிப்போனார்கள்.

மக்களுடைய மனப்பாங்கினை ஒரு சம்பவத்தைக் கொண்டு அருமையாகக் கணிக்கலாம். ஹஸ்ரத் அலி பின் ஹுஸைன் (இமாம்

ஜைனுல் ஆபிதீன்) தம்மோடு நிகழ்ந்த அந்த சம்பவத்தை விவரிக்கிறார்கள். "கர்பலா சம்பவத்திற்குப் பிறகு ஒரு மனிதர் என்னை மறைத்தவாறு தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றுவிட்டார். என்னை பர்ப்பதும், விசும்பி விசும்பி அழுவதுமாக இருந்தார். நான் யாருக்காவது நன்றிக்கடன் பட்டுள்ளேன் என்றால், அது இம்மனிதருக்குத்தான், என்று நான் எண்ணிக்கொண்டேன் இதற்கிடையில் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத்-தின் சார்பாக "யாராவது அலி பின் ஹுஸைனைப் பிடித்து நம்மிடம் கொண்டு வந்தால் அவருக்கு முந்நூறு திர்ஹம்கள் சன்மானமாக அளிக்கப்படும்!" என்று அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வறிவிப்பைக் கேட்டதும் அம்மனிதர் என்னருகே வந்தார். அழுதவாறே என்னை இழுத்துக்கொண்டு இப்னு ஸியாதிடம் சென்றார். என்னை அவனிடத்தில் ஒப்படைத்துவிட்டு இனாமைப் பெற்றுக் கொண்டார்!"

5 நீதித்துறையின் சுதந்திரம் பறிபோதல்

நீதித்துறையில் *(Judiciary)* எந்த விதமான அரசாங்க, அரசு நிர்வாகத் தலையீடும் இருக்கக்கூடாது என்பது இஸ்லாமிய அடிப்படைக் கொள்கைகளில் முக்கியமான அம்சமாகும்.

கிலா.்.பத்தே ராஷிதாவில் நீதிபதிகள் என்னவோ, கலீபாக்களால்தான் நியமிக்கப்பட்டார்கள். ஆனால். நியமனத்திற்குப் பிறகு அவர்கள் இறைவனுக்கு மட்டுமே பயந்து, தமது அறிவு, தம்முடைய மனசாட்சியின் படி செயல்பட்டார்கள். அதைத் தவிர வேறு எவ்வகையிலும் அவர்கள் கட்டாயப்படுத்தப்படவில்லை. எவ்வளவு 'பெரிய' ஆளாக இருந்தாலும் நீதித்துறை விவகாரங்களில் 'செல்வாக்கை' செலுத்த இயலாது.

எந்த அளவுக்கு என்றால் கலீபாவுக்கு எதிராகக் கூட தீர்ப்பு கூறுமளவுக்கு நீதிபதிகளுக்கு சுதந்திரம் இருந்தது! கூறவும் செய்தார்கள் 'மன்னர்'களான கலீ.்.பாக்கள் வந்தபிறகு இந்த நடைமுறைகள் எல்லாம் உடையத் தொடங்கின. இம்மன்னர்கள் தங்களுடைய அரசியல் ஆதாயங்களுக்காகவும். சொந்த நலன்களுக்காவும் செய்கின்ற செயல்களில், நியாயமாக தீர்ப்பளிக்கும் உரிமை நீதிமன்றங்களிடமிருந்து பறிபோனது. இளவரசர்கள்,

கவர்னர்கள், தலைவர்கள், மாளிகைகளோடு தொடர்புடையவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் நீதி வழங்குவது என்பது கனவாகிப் போனது.

இதன் காரணமாகவே உம்மத்தின் சான்றோர்களான (உலமாக்கள்) அறிஞர் பெருந்தகைகள் நீதிபதிகளாக ஆவதைப் புறக்கணித்தார்கள். யாராவது ஒருவர் அப்பதவியை ஏற்றுக்கொண்டால் மக்கள் அவரை சந்தேகக்கண்களால் பார்த்தார்கள். நீதித்துறைல், நிர்வாகத்துறையினரின் தலையீடு எந்த அளவு விரிவடைந்தது என்றால் கவர்னர்களே நீதிபதிகளை நியமிக்கும், நீக்கும் அதிகாரத்தினைப் பெற்றார்கள். குல.ஃ.பாயே ராஷிதீன்கள் - நேர்வழி நின்ற கலீ.ஃ. பாக்கள் - காலத்தில் இவ்வதிகாரம் கலீ.ஃ.பாவுக்கு மட்டுமே சொந்தமானதாக இருந்தது.

6.ஆலோசனை அடிப்படையிலான அரசு அழிந்து போதல

- ஆலோசனை அடிப்படையில் அரசு நடத்தப்படவேண்டும்!
- ஆலோசனைக் குழுவில் இடம்பெறுவோர் அறிவு, இறையச்சம், நேர்மை, கூர்நோக்கு நிரம்பப் பெற்றவர்களாகவும், உம்மத்தின் நன்மதிப்பைப் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். இவை இஸ்லாமிய அரசியலின் அடிப்படைக் கொள்கைகளில் உள்ளவை ஆகும்.

குலா.ஃ.பாயே ராஷிதீன்கள் காலத்தில் மார்க்க அறிவு நிரம்பப்பெற்ற. தமது கருத்துக்களை தயவு, தாட்சண்யம் பார்க்காமல் எடுத்துரைக்கும் திறன்படைத்த சமூகச் சான்றோர் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அரசை எந்தப்பொழுதிலும் தவறான திசையில் செல்ல இவர்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள் என்று உம்மத் இவர்கள் மீது ஆணித்தரமான நம்பிக்கை கொண்டிருந்தது!

மன்னராட்சி ஆரம்பித்தவுடன் இந்த மு ,மையும் மாறிப்போனது 'ஆலோசனை'யின் இடத்தை 'தனி ,பர் சர்வாதிகாரம்' பிடித்துக்கொண்டது. சத்தியவான்க நேர்மையை உரைக்கும் உலமாக்கள், மன்னர்களிடமிருந்தும். ன்னர்கள், இவர்களிடமிருந்தும் விலகிப்போனார்கள். இப்போது மன்னர்களுக்கு ஆலோசனை கூறுபவர்களாக, அவர்களுடைய கவர்னர்கள், தலைவர்கள், அரசு பாரம்பரிய பிரபுக்கள், அரசவையினர் ஆகிப்போனார்கள். தகுதிவாய்ந்த, நேரிய, நம்பிக்கைக்குரிய சான்றோர் பெருமக்கள் அதில் இடம்பெறவில்லை!

சமூகத்தில் தோன்றும் சட்டப்பிரச்சினைகளுக்கு தெளிவான தீர்ப்பளிக்கக் கூடிய ஓர் மையம் இதன் விளைவாக ஏற்படாமல் போனது, ஒவ்வொரு பிரச்சினையின் போதும் அம்மையத்தை நாடி நிற்பதும் அது அளிக்கும் தீர்ப்பையொட்டி நாட்டின் நீதிமன்றங்கள் அனைத்தும் பின்பற்றி ஒழுகுவதும், அம்மையத்தின் ஒருமித்த தீர்ப்புக்கள் இஸ்லாமிய சட்டத்துறையின் அம்சமாகிப் போவதும், எல்லாமே இல்லாமல் பேய்விட்டது.

அரச அமைப்பு, நியமனம், முக்கிய உள்துறை, வெளிநாட்டு விவகாரங்கள், பொதுத்துறை கொள்கைகளில் இந்த குறிப்பிட்ட அரசவை ஜால்ராக்களே முடிவெடுப்பது கூட பெரிய விஷயமாக இல்லை. ஆனால் சட்டவிஷயங்களில் முடிவெடுப்பது என்பது அவர்கள் தகுதிக்குட்பட்டதாயும் இல்லை: அவர்களால் இயலவும் இல்லை: அவ்வாறு இவர்கள் 'சட்டத்துறை'யில் செயற்பட முயற்சித்தாலும் உம்மத்தின் ஒட்டுமொத்த மனசாட்சி இதனை அங்கீகரிக்கவும் இல்லை: உம்மத்தால் ஜீரணித்துக் கொள்ளவும் இயலவில்லை. அவர்களே கூட தங்களுடைய 'தகுதி' என்ன என்பதை நன்றாகவே அறிந்திருந்தார்கள். அவர்கள் எப்பேற்பட்ட '.ஃ.பாஸிக்' (பாவி)கள் '.ஃ.பஜிர்' (தீயோர்)கள் என்பதை உம்மத்தும் அறிந்தே வைத்திருந்தது.

அவர்களுடைய தீர்ப்புகள் 'இஸ்லாமிய சட்டத்துறை'யில் இடம் பெறுமளவுக்கு அவர்கள் ஒன்றும் இஸ்லாத்திற்காக பெரும் பெரும் பணிவிடைகளோ, ஊழியமோ, சாதனையோ செய்து இருக்கவில்லை. உலமாப் பெருந்தகைகளும், அறிஞர் பெருமக்களும் இவர்களுக்கு

எதிராக ஒன்றும் செய்யாமல் பேசாமல் வாளாவிருக்கவில்லை. ஆனாலும், அவர்களுடைய முயற்சிகள் தனிப்பட்டரீதியிலேயே இருந்தன.

ஒவ்வொரு ஆலிமும் தன்னுடைய பாடசாலையில் தன்னுடைய அறிவிற்கேற்ப சட்ட விஷயங்களை அலசுவார்! ஒவ்வொரு நீதிபதி-காழியும் தன்னுடைய அறிவிற்கேற்ப ஆய்வு-இஜ்திஹாத் செய்து தீர்ப்புகளை வழங்குவார், அல்லது வேறு ஏதாவது அறிஞர் வழங்கியுள்ள ஃபத்வாவின் அடிப்படையில் தீர்ப்பு அளிப்பார் ஆனால் இஸ்லாமிய உலகில் ஒரு முறையான சட்ட அமைப்பு இன்றி ஒழுங்கற்று *(Anarchy)* காணப்பட்டது ஒரு முழு நுற்றாண்டு காலம், உம்மத்திடம் எல்லா நீதிமன்ற அமைப்புகளும் ஒன்றிப்போய் பின்பற்றும் வகையிலான ஒரு முறையான சட்ட ஆணையம் இல்லாத நிலையே காணப்படடது!

07. இனவெறி, கோத்திரப்பற்றின் வளர்ச்சி

மன்னராட்சிக் காலத்தில் வளர்ந்து பரவிய இன்னொரு கொடிய மாற்றம், இன, கோத்திர, நாட்டு வெறி ஆகும். எந்த இனவெறியை முற்றிலுமாக அடக்கி ஒடுக்கி, இறைவனை ஏற்றுக்கொண்டோர் அனைவரும் சரிசமம்: ஒரே குலம் என்ற உன்னத நிலையை இஸ்லாம் தோற்றுவித்ததோ, அது சிதறிப்போய் இனவெறி மீண்டும் தலைதூக்கி தலை விரித்தாடியது!

பனூ உமய்யாக்களின் காலத்தில் அது ஒரு 'அரபுஅரசு' என்ற நிலையே மேலோங்கி காணப்பட்டது. அரபியர்களும், அரபி அல்லாதோரும் சரிசமமாக நடத்தப்படாத நிலை தென்பட்டது.

ஹஸரத் உமர் (ரழி) அவர்களுடைய காலத்தில் பல நாடுகள் வெற்றிக் கொள்ளப்பட்டு இஸ்லாத்தின் கீழ் வந்தது. இக்கால கட்டத்தில் ஹஸரத் உமர் (ரழி) சில தடைகளை அமுழுக்குக் கொண்டு வந்தார்கள். ஒன்று அரபு பெண்களை அரபி அல்லாதவர்கள் மணக்கும் முறையை தடை செய்ததும் ஒன்றாகும்.

முன்பே நாம் பார்த்ததுபோல், இஸ்லாமிய கொள்கைக்கு நேர் விரோதமாக இஸ்லாத்தினை தழுவியோருக்கும் ஜிஸ்யாவரி

விதிக்கப்பட்டது. இதனால் இஸ்லாம் பரவுவது தடைப்பட்டதோடு மட்டுமல்லாமல் 'இஸ்லாமிய அரசு நம்மை அரபுகளுக்கு அடிமையாக்கிவிட்டது: நாம் இஸ்லாத்தை தழுவியும் அவர்களுக்கு இணையாக ஆகஇயலவில்லை' என்ற எண்ணம் புதிதாய் இஸ்லாத்தை தழுவியோரிடையே தோன்றியது.

இந்த போக்கு கொஞ்சம் கொஞ்சமாக மோசமாகிக் கொண்டே வந்தது. ஆளுநர், நீதிபதி, என்று தொடங்கி பள்ளியில் தொழவைக்கும் இமாமும் 'அரபி'யாகத்தான் இருக்கவேண்டும் என்ற நிலை தோன்றியது.

'அரபியர்களைத் தவிர வேறுயாறும் தொழவைக்கும் இமாமாக நியமிக்கப்படமாட்டார்' என்று கூஃபாவில் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் ஆணையிட்டான்.

ஹஸரத் சஈத் இப்னு ஸுபைர் கைது செய்யப்பட்டபோது, அவரோடு தான் எப்படியெல்லாம் 'பெருந்தன்மை'யோடு நடந்துகொண்டேன் என்று பட்டியலிட்ட ஹஜ்ஜாஜ் 'நீங்கள் அரபியாக இல்லாதபோதும் உங்களை தொழவைக்கும் இமாமாக நியமித்ததேன்!" என்று கூறினான்.

இராக்கில் நப்தீ-க்களுடைய கைகளில் அடையாள முத்திரை பொறிக்கப்பட்டது.

பசராவிலிருந்து ஆயிரக்கணக்கில் புதிதாய் இஸ்லாத்திற்கு வந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஹஸரத் சஈத் இப்னு ஸுபைர், கூஃபாவில் நீதிபதியாக நியமிக்கப்பட்டபோது அவரைப்போன்ற உயர்ந்த கல்வியறிவு பெற்ற மார்க்க மேதைகள் அப்போது ஒன்றிரண்டு பேர்களே இருந்தனர் 'அரபியல்லாத ஒருவரை நீதிபதியாக்குவதா?' என்று மிகப்பெரிய சர்ச்சை ஏற்பட்டது. கடைசியில் அவருக்குப் பதிலாக ஹஸ்ரத் அபூமூஸா அஷ்அரி (ரழி)யின் குமாரர் அபூபுர்தா நீதிபதி ஆக்கப்பட்டார். இப்னு ஸுபைரைக் கலந்த பிறகே எந்த தீர்ப்பையும் வழங்கவேண்டும் என்று அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

கொஞ்சம், கொஞ்சமாக இந்த வெறி உக்கிரமடைந்து ஜனாஸா தொழுகைகூட அரபியில்லாதவர் தொழவைக்கக்கூடாது. தொழத் தெரிந்த அரபி இளைஞன் ஒருவன்கூட இல்லாதபோதுதான் மற்றவர் தொழவைக்கலாம் என்ற நிலையை அடைந்தது.

புதிதாய் இஸ்லாத்தை தழுவிய அரபு அல்லாத பெண்ணை யாரேனும் மணம்புரிய விரும்பினால் அவளுடைய தந்தைக்கோ, உறவினருக்கோ தகவல்தருவதற்குப் பதிலாக எந்த 'அரபி'யின் பாதுகாப்பில் *(Patronage)* அவர்கள் உள்ளனரோ அவருக்கு தகவல் தந்து சம்மதம் பெறவேண்டும்..

அடிமைப் பெண்ணிற்கு பிறந்தவன் மேலானவன் அல்லன்: அவன் கௌரவக்குறைவுடையவன் என்ற எண்ணம் வளர்ந்தது. பிறந்த குழந்தையும் வாரிசுரிமையில் சரிசமமாக மாட்டார்கள் என்ற நிலை ஏற்பட்டது. ஆனால், ஷரீஆ-வின் படி இரண்டு பேரும் சரிசமமானவர்களே!

அபுல் ஃபரஜ் அல்அஸ்ஃபிஹானி அறிவிக்கிறார்: பனு சுலைம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் தமது பெண்ணை புதிதாய் இஸ்லாத்தை தழுவிய அரபி அல்லாத ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார். முஹம்மது பின் பஷீர் அல்காரிஜி என்பவர் மதீனா சென்று இதைப்பற்றி கவர்னரிடம் புகார் செய்தார். உடனே கவர்னர் அத்திருமணம் செல்லாது என்று கூறி பிரித்துவிட்டார்; அந்த புது முஸ்லிமிற்கு கசையடிகள் வழங்கினார்; அவருடைய தலையில் எலும்புகளையும், சாம்பல், புழுதியையும் கொட்டி அவமானப் படுத்தினார்!

இந்த காரணத்தினால் தான் அஜமிகள் (அரபி அல்லாதோர்) இடையே பிரிவினைவாதம் தலைதூக்கியது. அதன் விளைவாக குராசானில் உமைய்யாக்களுக்கு எதிரான அப்பாஸிகளின் முயற்சிகளுக்கு எழுச்சிமிக்க வரவேற்பு கிடைத்தது. அரபுகளுக்கு எதிரான அஜமிகளின் வெறுப்பை, உமைய்யாக்களுக்கு எதிரான வெறுப்பாக மாற்றுவதில் அப்பாஸிகள் வெற்றி கண்டனர். புரட்சியினால் அரபியர்கள் கொட்டம் அடங்கிவிடும் என்று அவர்களுக்கு இவர்கள் உசுப்பேற்றினார்கள்.

அரபியர்கள், அரபி அல்லாதோரை பிரித்துவைப்பதோடு மட்டும் பனூ உமைய்யாக்கள் நின்றுவிடவில்லை. மாறாக அரபியர்களிலேயே சில இனங்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கி கோத்திரப் பாகுபாட்டையும் வளர்த்தனர். அத்னான்கள், கஹ்தான்கள், யமானிகள், முழர்கள், அஜுதுகள், தமீம்கள், கல்புகள், மற்றும் கைஸ் கோத்திரத்தார்களுக்கு இடையிலான பண்டைய கால போராட்டங்கள் மீண்டும் தலையெடுத்தன. ஒன்றிற்கு எதிராக இன்னொரு கோத்திரத்தை பயன்படுத்துவதில் அரசும் (முனைந்து) செயற்பட்டது. ஒவ்வொரு கவர்னரும் தன் ஆளுகைக்குற்பட்ட பகுதிகளில் தனது கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கு பெரும் வாய்ப்புகளையும், வசதிகளையும் வழங்கினார் பிற கோத்திரத்தார்களோடு அநியாயமான முறையில் நடந்து கொண்டார்!

குராசான் போன்ற பகுதியில் இது எந்தளவு வளர்ந்திருந்தது என்றால் யமனீக்கள், முழர்களுக்கிடையிலான பிளவைப் பயன்படுத்தி, பெரிதாக்கி, அவர்களை ஒருவரையொருவர் மோதவைத்து, அதைக்கொண்டே உமைய்யாக்களின் ஆட்சியைத் தகர்ப்பதில் அப்பாஸி தலைவர் அபூமுஸ்லிம் குராசானீ பெறும் வெற்றி கண்டார்.

தன்னுடைய 'அல்பிதாயா வந்நிஹாயா' வில் இப்னு அஸாகிரை மேற்கோள்காட்டி இப்னு கசீர் கூறுகிறார்: "அப்பாசிய படைகள் டமாஸ்கஸில் 'முன்னேறியபோது, யமானி, முழர்களுக்கிடையிலான மோதல் உச்சகட்டத்தை அடைந்திருந்தது. எந்த அளவுக்கு என்றால் ஒவ்வொரு பள்ளிவாசலிலும் இரண்டு 'மிஹ்ராபுகள்' (தொழவைக்கும் மையம்) இருந்தன, ஜாமிஆ பள்ளிவாசலில் இரண்டு மிம்பர்மேடைகள் இருந்தன. இரண்டு இமாம்கள்: இரண்டு குத்பாக்கள்: இரண்டு தொழுகைகள்: தனித்தனியாக! இரண்டு பிரிவினரில் எவரும் இன்னொரு பிரிவினருக்குப் பின் தொழ தயாராக இல்லை!"

8. 'சட்டம் தான் பெரியது' எனும் சிந்தனை ஒழிந்துபோதல்

மன்னராட்சி முஸ்லிம்களின் தலைகளின்மேல் கொட்டிய தீமைகளுள் பயங்கரமானது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான

'சட்டம் தான் பெரியது' என்ற கொள்கையை உடைத்து தூள் தூளாக்கியது ஆகும்.

- ஷரீஅத் சட்டம்தான் அனைத்திற்கும் மூலம்: அடிப்படை: ஆதாரம் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

- அரசு, குடிமக்கள், ஆட்சியாளர், ஆளப்படுவோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பொதுமக்கள், உயர் குடியினர் அனைவரும் சட்டதிற்கு முன் சமமானவர்களே! யாருக்கும் விதி விலக்கோ, சலுகையோ அறவே கிடையாது!

- நண்பனோ, எதிரியோ ஒப்பந்தம் செய்து கொண்டவனோ, பகிரங்க எதிரியோ, முஸ்லிம் குடிமகனோ, திம்மியோ, முஸ்லிம்களிலேயே விசுவாசமானவனோ, சதிகாரனோ யார். எப்படி இருந்தாலும் சரியே, அனைவரும் சட்டத்திற்கு முன் ஒரே மாரியாகத்தான் நடத்தப்படவேண்டும்!

- எக்காலத்திலும் சட்டத்தை மீறி எதுவும் செய்துவிடக் கூடாது!

கிலா∴பத்தே ராஷிதா - நேர்வழி நின்ற கலீ∴பாக்கள் காலத்தில் இந்த நெறிமுறைகள் அப்படியே பின்பற்றப்பட்டன. ஹஸ்ரத் உஸ்மான் (ரழி), ஹஸ்ரத் அலி (ரழி) போன்றோர் நெருக்கடி மிகுந்த இக்கட்டான சூழ்நிலைகளிலும் நெறிமுறைகளை அனுவளவு மீறி நடக்கக் கூட தயாராக இல்லை. இந்நான்கு கலீ∴பாக்களின் காலத்திலும் அது ஒரு வரையறுக்கப்பட்ட அரசாக திகழ்ந்ததே ஒழிய, எதையும் துணிந்து செய்யும் சர்வாதிகார அரசாக அல்ல!

ஆனால், மன்னராட்சி ஏற்பட்டவுடன் தம்முடைய நலன்கள் அரசியல் ஆதாயங்களுக்காக, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் தம்முடைய ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அம்மன்னர்கள் இஸ்லாத்தின் எவ்விதியை மீறவும் தயாரக இருந்தார்கள்

அரசாங்கச் சட்டமாக என்னவோ, இஸ்லாமியச் சட்டம்தான்

அறிவிக்கப்பட்டிருந்தது. நீதிமன்றங்கள் அதன்படிதான் வழக்குகளை விசாரித்துவந்தன. சாதாரண காலங்களில் எல்லா வழக்குகளும் ஷரீஆ அடிப்படையிலேயே தீர்ப்பளிக்கப்பட்டன.

ஆனால், அம்மன்னர்களின் அரசியல், மார்க்கத்திற்கு கட்டுப்பட்டதாக இருக்கவில்லை. தம்முடைய ஆசையை நிறைவேற்றிக்கொள்ள, ஆகுமான, ஆகுமாகாத எல்லா வழிகளையும் ஆராய்கின்ற சிந்தனையெல்லாம் அவர்களிடத்தில் காணப்படவில்லை. ஒவ்வொரு உமைய்யா மன்னரும் எப்படியெல்லாம் இஸ்லாமியச் சட்டங்களை மீறி நடந்தனர் என்பதை இனி ஆராய்வோம்.

ஹஸ்ரத் முஆவியா (ரழி)வின் காலத்தில்

சட்டத்தை மீறும் இக்கொள்கை ஹஸ்ரத் முஆவியா (ரழி)வின் காலத்திலிருந்து தொடங்கியது

- இமாம் ஜுஹ்ரி அறிவிப்பதாவது:

ஒரு கா∴பிர் முஸ்லிமுக்கு வாரிசாக முடியது ஒரு முஸ்லிம் கா∴பிருக்கு வாரிசாக முடியாது.

அண்ணலாரின் காலத்திலும், நான்கு கலீ∴பாக்களின் காலத்திலும் இதுவே நடைமுறையில் இருந்தது. ஹஸ்ரத் முஆவியா (ரழி) இதனை மாற்றி முஸ்லிமை, கா∴பிருடைய வாரிசாக ஆக்கினார். ஆனால் கா∴பிர், முஸ்லிம் உடைய வாரிசாக முடியாது என அறிவித்தார். ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) இந்த பித்அத்தை தடை செய்தார். ஆயினும், ஹிஷாம் பின் அப்துல் மலிக் தன் 'பரம்பரை வழக்கத்தை' மீண்டும் அமுலுக்கு கொண்டு வந்தார்.

- ஹாபிழ் இப்னு கசீர் அறிவிப்பதாவது: கொலை செய்யப்பட்டவருக்கு பெற்றுத்தரப்படும் நஷ்டஈடான 'தியத்-தின் நடைமுறையை ஹஸ்ரத் முஆவியா (ரழி) மாற்றியமைத்தார், 'ஒப்பந்தம் செய்து கொண்டவருக்கும்' - ஒரு முஸ்லிமைப் போன்று அதே அளவு தியத்

கிடைக்கவேண்டும். ஆனால், முஆவியா (ரழி) அதைப் பாதியாக குறைத்தார். எஞ்சிய பாதியை தாமே எடுத்துக் கொள்ள ஆரம்பித்தார்.

♦ ஹஸரத் முஆவியா (ரழி) அனுமதிக்க இன்னுமொரு தவறான பழக்கம் தம்முடைய எல்லா கவர்னர்களும் வெள்ளி குத்பா மேடைகளில் ஹஸ்ரத் அலி (ரழி) அவர்களை திட்டவேண்டும் என்று கட்டளையிட்டதாகும். மதீனா நகரில் அண்ணலாரின் பள்ளிவாசலில் அண்ணலின் அடக்கஸ்தலத்திற்கு எதிரே நின்று அண்ணலின் அன்புக்கு சொந்தமானவரை திட்டும் கலாச்சாரம் துவங்கியது. அலி(ரழி)யின் உறவினர்களும், தோழர்களும் வேறுவழியின்றி இதைக் காதால் கேட்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இறந்துபோன ஒருவரைத்திட்ட ஷரீஅத்தில் அனுமதியுள்ளதா என்பதெல்லாம் வெகுதூரம். இது மனிதப் பண்புகளுக்கே மாற்றமானது ஆகும்! அதுவும் புனித வெள்ளிக் கிழமைகளில் குத்பா மேடைகளில்! ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜிஸ் (ரஹ்) வந்த பின்பு தம் பரம்பரையினரின் இத்தவறான பழக்கத்தை ஒழித்தார்! அலி (ரழி)யைத் திட்டுவதற்கு பதில் கீழ்வரும் இறை வசனத்தை ஓதும் வழக்கத்தை செயல்படுத்தினார்.

"நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும் நன்மை செய்யுமாறும் உறவினர்களுக்கு கொடுத்து ஆதரிக்குமாறும் கட்டளையிடுகிறான். மேலும், மானக்கேடானவை, வெறுக்கப்பட்டவை, அழிச்சாட்டியம் ஆகியவற்றை விட்டும் உங்களை விலக்குகிறான். நீங்கள் நினைவில் நிறுத்துவதற்காக இதனை உங்களுக்கு அவன் உபதேசிக்கிறான்."

(ஸூறா நஹ்ல் 90வது வசனம்)

♦ போரில் கிடைக்கும் பொருட்களில் ஐந்தில் ஒரு பகுதி (குமுஸ்) பைத்துல்மால் பொதுநிதிக்கு வரவேண்டும். மீதிப்பகுதி போரில் ஈடுபட்ட போராளிகளுக்கு பங்கிடப்படவேண்டும். இது நியதி!

இதனை ஹஸரத் முஆவியா (ரழி) மாற்றியமைத்தார். போர் பொருட்களில் உள்ள எல்லா தங்கம், வெள்ளி அணிகலன்கள் அவருக்கே சேரும் எஞ்சியவையே பங்கிடப்படும் என்ற புது விதியைக் கொண்டுவந்தார்.

♦ அரசியல் இலாபங்களுக்காக, ஷரீஅத்தை மீறி நடந்த ஹஸ்ரத் முஆவியா (ரழி)யின் செயல்களில் ஒன்று தான் ஸியாத் பின் சுமைய்யா-வை தம்முடைய குடும்பத்தில் ஒருவராக ஆக்கிக்கொண்டது. இது முழுக்க, முழுக்க ஷரீஅத்திற்கு மாற்றமானது ஆகும். தாயிஃப்பைச் சேர்ந்த சுமைய்யா என்ற அடிமைப்பெண்ணின் வயிற்றில் பிறந்தவர்தான் ஸியாத்! ஜாஹிலிய்யா-காலத்தில் ஹஸ்ரத் முஆவியா (ரழி)யின் தந்தையான அபூசுஃப்யான் அப்பெண்ணோடு விபச்சாரம் புரிந்தார். அதனால் பிறந்தவர் தான் ஸியாத். அபூசுஃப்யானே ஒருமுறை ஸியாதை சுட்டிக்காட்டி 'இவன் என் மகன்' என்று குறிப்பிட்டிருந்தார், பருவமடைந்த பிறகு மிகப்பெரிய விவேகியாக, ராஜதந்திரியாக, பெரும் வீரராக உருவானார் ஸியாத். ஹஸ்ரத் அலி (ரழி)யின் காலத்தில் அவருடைய மிகப்பெரும் ஆதரவாளராக ஸியாத் திகழ்ந்தார். மாபெரும் சாதனைகளையும் நிகழ்த்தினார். அதன்பின்பு அவரைத் தம்முடைய ஆதரவாளராக மாற்றுவதற்காக, முஆவியா (ரழி) தன்னுடைய தந்தை, அவருடைய தாயோடு விபச்சாரம் செய்ததற்கான சாட்சிகளை தேடிப்பிடித்துக் கொண்டுவந்தார். ஸியாத் தன்னுடைய தந்தையின் 'விபச்சாரத்தினால் பிறந்த மகன்' (வலதுல் ஹராம்) என்பதனை நிரூபித்தார் அதன் அடிப்படையில் அவரை தம்முடைய குடும்பத்தில் ஒருவராக அறிவித்தார்.

ஒழுக்க அடிப்படையில் இது எவ்வளவு வெறுக்கத்தக்க, அருவெறுப்பான விஷயமோ, அதுபோன்றே ஷரீஅத்திலும் அனுமதியே இல்லாத ஒன்றாகும். விபச்சாரத்தினால் பிறந்த குழந்தையை வாரிசாக ஷரீஆ ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை. தெள்ளத்தெளிவாக அண்ணலார் (ஸல்) அறிவித்துள்ளார்கள்:

'யாருடைய படுக்கையில் (கட்டுப்பாட்டில் உள்ளபோது) குழந்தை பிறந்ததோ, அக்குழந்தை அவனுக்கு உரியதாகும். விபச்சாரம் செய்தவனுக்கோ கல்லடிதான்!'

உம்முல் மு.'.மினீன் அன்னை உம்மு ஹபீபா (ரழி) இதனால்தான் அவரை தமது சகோதரராக ஏற்க மறுத்துவிட்டார்கள். அவர்முன் ஹிஜாபையும் கட்டாயமாக கடைப்பிடித்துவந்தார்கள்.

- ஹஸரத் முஆவியா (ரழி) தம்முடைய எல்லா கவர்னர்களையும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்களாக, அவர்கள் என்னதான் செய்தாலும் சட்டம் கண்டுகொள்ளாது என்ற நிலைக்கு ஆக்கினார். அவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுகள் வந்தபோது அவர்கள்மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்க மறுத்தார்.

- அவருடைய கவர்னர் அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னு கீலான் ஒருமுறை பசாராவில் மிம்பரின்மீது குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு மனிதர் அவர்மீது கல்லை எறிந்துவிட்டார். எனவே, அப்துல்லாஹ் அவரை கைதுசெய்து, அவருடைய கையை வெட்டிவிடும்படி உத்தரவிட்டார். ஷரீஆ அடிப்படையில் அவர் செய்தது ஒன்றும் கையை வெட்டும்படியான கடுமையான குற்றம் அல்ல! ஹஸ்ரத் முஆவியா (ரழி) விடம் இதைப்பற்றிய புகார் வந்தபோது "வெட்டப்பட்ட கைக்குப் பதிலாக பைத்துல் மாலிலிருந்து நஷ்டஈடு வேண்டுமானால் கொடுத்துவிடுகிறேன்! ஆனால், என்னுடைய கவர்னர் மீது பழிவாங்கும் நடவடிக்கை மட்டும் ஆகாது!" என்று கூறிவிட்டார்.

- ஸியாத்தின் ஆளுகையின் கீழ் பசராவோடு, கூ.'.பாவையும் ஹஸ்ரத் முஆவியா இணைத்தார். கூ.'.பாவின் பெரிய - (ஜாமிஆ) பள்ளிவாசலில் ஸியாத் முதன்முறையாக குத்பா கொடுக்க சென்றார். அப்போது சில மனிதர்கள் அவர்மீது கல்லெறிந்தனர். உடனே, பள்ளிவாசல் கதவுகளை சாத்தும்படி கூறினார். கல்லெறிந்ததாகப் பிடிக்கப்பட்ட (ஏறக்குறைய 30-லிருந்து 80-

பேர் வரை) அனைவரும் கைது செய்யப்பட்டனர். அனைவருடைய கைகளையும் வெட்டும்படி ஸியாத் உத்தரவிட்டார்.

அவர்கள் மீது எந்தவிதமான விசாரணையும் கிடையாது. எந்த நீதி மன்றத்திலும் அவர்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. அவர்களுக்கு ஷரீஅத்திற்குப் புறம்பாக, கவர்னர் தன்னுடைய அதிகார பலத்தை பயன்படுத்தி அத்தனைபேர்களுடைய கைகளையும் வெட்டிவீசிவிட்டார். 'அரசவை'யிலிருந்து அவருக்கு எந்தவிதமான தண்டனையும் வரவில்லை

- இதைவிடக் கொடுமையான செயல்களை புசுர் பின் அபி அர்தஆ என்பவன் செய்தான். ஹஸரத் அலி (ரழி) அவர்களின் ஆளுகையின் கீழ் இருந்த ஹிஜாஸ், யமன் போன்ற பகுதிகளை கைப்பற்ற இவனை ஹஸ்ரத் முஆவியா (ரழி) அனுப்பினார். அதன் பின்பு ஹமதான்- பகுதிநோக்கியும் அனுப்பினார்.

இந்த மனிதன் யமனில் ஹஸ்ரத் அலி (ரழி) அவர்களின் கவர்னராக உபைதுல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி) உடைய இரண்டு பச்சிளம் குழந்தைகளை படுகொலை செய்தான். அதைப்பார்க்கச் சகியாத அக்குழந்தைகளின் தாய் பைத்தியமாகிவிட்டாள். இதைக் கண்டு பொறுக்காத பனு கினானா-வைச் சேர்ந்த ஒரு பெண் கதறினாள்: "ஆண்களையெல்லாம் நீங்கள் கொலை செய்து விட்டீர்கள்! இப்போது சின்னஞ்சிறு குழந்தைகளைக் கூட விட்டுவைக்காமல் கொல்கிறீர்களே! அறியாமைக் காலத்தில் கூட குழந்தைகளை கொல்ல மாட்டார்களே! இப்னு அபீ அர்தஆவே! குழந்தைகளையும், முதியோர்களையும் கொலைசெய்யாமல் ஆட்சிக்கு வரமுடியாத ஒரு அரசை விட கொடூரமான அரசு வேறு இல்லை!"

அதன் பின்பு இந்த அநியாயக்காரனை ஹமதானைக் கைப்பற்றி வருமாறு ஹஸ்ரத் முஆவியா (ரழி) அனுப்பினார். அது அப்போது ஹஸ்ரத் அலி (ரழி) யின் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. அங்கு சென்ற அவன் வேறு பல அநியாயங்களைச் செய்ததோடு

நில்லாமல் போரில் பிடிக்கப்பட்ட முஸ்லிம் பெண்களையெல்லாம் அடிமைகளாக ஆக்கினான்.

இப்னு அப்தில்பர் கூறுவதாவது: "முஸ்லிம்களுக்கிடையிலேயே ஏற்பட்ட மோதல்களில் முஸ்லிம் பெண்களை அடிமைகளாக் கப்பட்டது இதுவே முதன்முறையாகும்."

ஷரீஅத்திலா?.... அதற்கு அணுவளவுகூட அனுமதி கிடையாது!

இந்த எல்லா காரியங்களும், 'ஆளுநர்களும், அதிகாரிகளும், தளபதிகளும்சட்டத்திற்கு கட்டுப்பட்டவர்கள் அல்லர். அரசியல் விவகாரங்களில் எல்லாம் சட்டம் தலையிடவே முடியாது' என்பதை தண்டோரா போட்டு பகிரங்கமாக அறிவித்தன.

- தலையைவெட்டி ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு தூக்கிச்செல்வது, பழிவாங்கும் வெறியில் இறந்துபோன பிணத்தைச் சிதைப்பது போன்ற ஜாஹிலிய்யா காலத்தில் நிலவிவந்த - இஸ்லாம் முழுவதுமான ஒழித்துவிட்ட - காட்டு மிராண்டித்தனமாக செயல்கள் எல்லாம் மீண்டும் தலைதூக்கின!

முதன்முதலாக கொடூரமான முறையில் வெட்டி எடுக்கப்பட்ட தலை ஹஸ்ரத் அம்மார் இப்னு யாஸிர் (ரழி) அவர்களுடையது ஆகும்! இமாம் அஹ்மது பின் ஹன்பல் (ரஹ்) தன்னுடைய முஸ்னதில் இதை ஆதாரபூர்வமான செய்தியாக பதிவு செய்துள்ளார். இப்னு சஅத்-ம், தபக்காதில் பதிவு செய்துள்ளார்.

சி.்.ப்.்.பீன் போரின்போது ஹஸ்ரத் அம்மார் (ரழி) யின் தலை வெட்டப்பட்டு ஹஸ்ரத் முஆவியா (ரழி) விடம் கொண்டுவரப் பட்டது. "நான் தான் வெட்டினேன்: நான்தான் வெட்டினேன்!" என்று இரண்டுபேர் சண்டையிட்டுக் கொண்டுவேறு வந்தனர்.

அடுத்ததாக வெட்டப்பட்ட தலை அமர் பின் அல்ஹமிக் என்பவருடையது ஆகும். இவர் அண்ணல் நபித்தோழர்களில் ஒருவராக இருந்தார். ஆனால், உஸ்மான் (ரழி) கொலையில் இவருக்கும் பங்கிருந்தது. இராக்-கின் கவர்னராக ஸியாத்

இருந்தபோது இவரை தேடிப்பிடிக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். இவர் அங்கிருந்து ஓடி ஒரு குகையில் நுழைந்து கொண்டார். அங்கேயே ஒரு பாம்பு கடித்து உயிரை விட்டார்.

துரத்தி வந்தவர்கள் இவருடைய இறந்த உடலைக் கைப்பற்றி அதன் தலையைமட்டும் தனியாக வெட்டி எடுத்து ஸியாதிடம் கொண்டு சென்றனர். அவர் அதனை ஹஸ்ரத் முஆவியாவிடம் டமாஸ்கஸுக்கு அனுப்பினார். அங்கு அத்தலை ஊரெல்லாம் சுற்றிக் காண்பிக்கப்பட்டு கடைசியாக அவருடைய மனைவியின் மடியில் கொண்டுபோய் வீசி எறியப்பட்டது!

- எகிப்தில் ஹஸ்ரத் அலி(ரழி)யுடைய கவர்னராகயிருந்த முஹம்மது பின் அபீபக்ருவோடும் இதேபோன்று நடந்து கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் முஆவியா (ரழி) எகிப்தை வென்றவுடன் அவர் கைது செய்யப்பட்டு, படுகொலை செய்யப்பட்டார். பின்பு அவருடைய உடல் ஒரு செத்துப்போன கழுதையின் தோலில் சுற்றி எரிக்கப்பட்டது!

கர்பலா படுகொலைத்தளத்தில் ஹஸ்ரத் ஹுஸைன் (ரழி) அவர்களுடைய தலை வெட்டப்பட்டு கர்பலாவிலிருந்து கூ.்.பாவிற்கும், கூ.்.பாவிலிருந்து டமாஸ்கஸிற்கும் சுற்றி உலாவரப்பட்டது! அவருடைய இறந்த உடல் (முண்டத்தின்) மீது குதிரைகள் ஓட்டப்பட்டு சின்னாபின்னப் படுத்தப்பட்டது!

ஹஸரத் நு.்.மான் பின் பஷீர், யஜீதுடைய காலம் வரைக்கும் உமைய்யாக்களின் ஆதரவாளராக இருந்தவர் மர்வானுடைய காலத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரழி) அவர்களோடு துணை நின்றார். எனவே, அவர் கொலை செய்யப்பட்டார். அவருடைய தலை வெட்டப்பட்டு அவருடைய மனைவியின் மடியில் வீசி எறியப்பட்டது.

ஹஸ்ரத் முஸ்அப் பின் ஜுமைர் உடைய தலை வெட்டப்பட்டு கூ.்.பா, எகிப்து எல்லாம் சுற்றிவரப்பட்டது. பின்பு டமாஸ்கஸ் நகரில் பொதுவிடத்தில் தொங்கவிடப்பட்டது. பின்பு சிரியா நாட்டு நகரங்களில் சுற்றிவர ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, அப்துல் மாலிக் பின்

மர்வானுடைய மனைவியும், யஜீத் பின் முஆவியாவின் மகளுமான ஆதிக்கா கடுமையாக ஆட்சேபனை தெரிவித்தார் "இதுவரை நீங்கள் செய்ததே உங்கள் மனங்களுக்கு திருப்தி அளிக்கவில்லையா? இன்னு ஏன் அதை கண்காட்சிப் பொருளாக ஆக்குகின்றீர்கள்?" என்று அவர் கேட்டார். அதன்பின்பு, அந்தத் தலை இறக்கப்பட்டு, குளிப்பாட்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரழி) அவருடைய தோழர்கள் அப்துல்லாஹ் பின் ஸ.ஃப்வான், உமாரா பின் ஹஸ்ம் போன்றவர்களோடு இதைவிட கொடூரமான முறையில் காட்டு மிராண்டித்தனமாக நடந்து கொள்ளப்பட்டது. அவர்களுடைய தலைகள் வெட்டப்பட்டு மக்காவிலிருந்து மதீனா, மதீனாவிலிருந்து டமாஸ்கஸ் கொண்டு செல்லப்பட்டன. ஒவ்வொரு இடத்திலும் காட்சிப் பொருளாக தொங்கவிடப்பட்டன. மக்காவில் பல நாட்கள் அவர்களுடைய உடல்கள் தூக்கு மேடையிலேயே தொங்கிக் கொண்டிருந்தன. அழுகிப்போய் நாற்றமெடுக்க ஆரம்பிக்கும் வரைக்கும்!

இறந்துபோன உடல்களோடு கூட இவ்வாறு நடந்து கொண்டவர்கள், எத்தகைய 'தரத்தை' சார்ந்தவர்கள் என்று யோசிப்பது ஒருபுறமிருக்க,

கா.ஃபிர்களோடு கூட இவ்வாறு நடந்துகொள்ள இஸ்லாம் அனுமதிக்கின்றதா, என்ன?

யஜீதுடைய காலத்தில்

அரசியல் ஆதாயங்களை முன்னிலைப்படுத்தி, மார்ககத்தை பின்னுக்குத் தள்ளுகின்ற கலாசாரம் ஹஸ்ரத் முஆவியா (ரழி)யின் காலத்தில் துவங்கியது. தமக்குப்பிறகு அவரால் கொண்டுவரப்பட்ட யஜீதுடையகாலத்தில் இது மேலும் வளர்ச்சிடைந்து, மோசமான சீரழிவைச் சென்றடைந்தது. அவருடைய காலத்தில் நடைபெற்ற மூன்று விஷயங்கள் முழு இஸ்லாமிய உலகையும் உலுக்கி எடுத்தன!

♦ முதலாவது சம்பவம், சய்யிதினா ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு ஷஹீதாக்கப்பட்டது ஆகும்! இராக் வாசிகளின்

அழைப்பிற்கிணங்க அவர் யஜீதுடைய ஆட்சியைக் கவிழ்க்கவே புறப்பட்டார்: யஜீதுடைய அரசு அவரை சதிகாரராகவே கருதியது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஹஸரத் ஹுஸைன் (ரழி) புரட்சி செய்ய புறப்பட்டு சென்றது இஸ்லாமிய அடிப்படையில் ஆகுமானதா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்கட்டும் (அவருடைய வாழ்க்கைக் காலத்திலும், அதற்குப் பிறகும் கூட எந்தவொரு ஸஹாபியோ, தாபிஈனோ, அவருடைய புறப்பாடு தவறு: அவர் ஒரு ஹரமான காரியத்திற்காக புறப்பட்டார்: என்று கூறியதாக எதுவித ஆதாரமும் நமக்குக் கிடைக்கவில்லை! அவர் புறப்படும்போது அவரைத் தடுக்க முயற்சித்த சஹாபாக்களும், இப்போது இம்மாதிரியான காரியத்தில் இறங்குவது விவேகம் அல்ல! என்ற எண்ணத்தில் தான் தடுத்துள்ளார்களே தவிர, அவரது நடத்தை தவறு என்று தடுக்கவில்லை)

இப்பிரச்சினையைப் பொருத்தவரைக்கும், யஜீதுடைய அரசின் நிலைப்பாடுதான் முழுக்க, முழுக்கச் சரி என்று ஒரு வாதத்திற்கு சரி என்று ஒப்புக்கொண்டாலும் அங்கு நடந்தவைகளுக்கு எப்படி நியாயங்கற்பிக்க முடியும்?

இவற்றைக் கொஞ்சம் கவனியுங்கள்

♦ அவர் ஒன்றும் ஒரு படையோடு புறப்படவில்லை!

♦ அவரோடு அவருடைய மனைவி, மக்களே இருந்தனர். வாகனங்களில் 32 பேரும், கால்நடையாக 40 பேருமே அவருடன் வந்தனர். இதை ஒரு 'படை' என்று கூற இயலாது.

♦ அவரருக்கு எதிராக உமர் இப்னு சஅத் இப்னு அபிவக்காஸ் தலைமையிலான படையினரின் எண்ணிக்கையோ நாலாயிரம்.

♦ அவ்வளவு பெரியபடை இவ்வளவு சிறிய குழுவினரோடு போரிட்டு அவர்களைக் கொன்று குவிக்கவேண்டிய அவசியமே இல்லை. மாறாக, அக்குழுவினரை சுற்றிவளைத்து எளிதாக கைது செய்திருக்கலாம்!

தம்முடைய கடைசி நேரத்தில் ஹஸ்ரத் ஹுஸைன் மூன்று கோரிக்கைகளை அவர்கள் முன்வைதார்.

- ஒன்று, என்னைத் திரும்பிச்செல்ல அனுமதியுங்கள்!
- இல்லையேல், நாட்டின் எல்லைப் புறத்திற்கு என்னை செல்லவிடுங்கள்!

- அல்லது, யஜீதிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்!

ஆனால், அவற்றில் ஒன்று கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக, (கூஃபாவின் கவர்னரான) உபைதுல்லாஹ் இப்னு ஸியாதிடம் வருமாறு திரும்ப, திரும்ப வலியுறுத்தப்பட்டது.

தன்னைத் தாமே இப்னு ஸியாதிடம் ஒப்படைக்க ஹஸ்ரத் ஹுஸைன் விரும்பவில்லை!

ஏனென்றால், இதற்கு முன்னால் முஸ்லிம் பின் அக்கீலோடு அவன் எவ்வாறு நடந்து கொண்டான் என்பதை அவர் நன்றாகவே அறிந்திருந்தார்.

இறுதியில், அவரோடு போர் செய்யப்பட்டது

அவருடைய தோழர்கள், கூடவந்தோர் எல்லாம் ஷஹீதாக்கப்பட்டு அவர் மட்டும் மைதானத்தில் தனித்து நின்றபோதும், அவரோடு போரிடுவது கட்டாயம் என்றே கருதப்பட்டது.

அவர் படுகாயமுற்று கீழே வீழ்ந்தபின்பு அவருடைய தலை வெட்டப்பட்டு (துப்ஹ்) செய்யப்பட்டது.

அவருடைய உடலில் இருந்தவை அனைத்தும் அபகரிக்கப்பட்டன. அவருடைய ஆடைகளைக் கூட விட்டுவைக்காமல் சுருட்டிக் கொண்டார்கள்.

அவருடைய உடலில் மீது குதிரைகளை வேகமாக ஓட்டி உடலை சின்னாபின்னப் படுத்தினார்கள்.

அவரும், அவருடைய குழுவினரும் தங்கியிருந்த கூடாரங்கள் சூறையாடப்பட்டன.

அவரோடு வந்த பெண்களின் 'பர்தா' கிழிக்கப்பட்டன. அந்தப் பெண்களோடு, ஷுஹதாக்களின் தலைகள் கொய்யப்பட்டு கூஃபா கொண்டு செல்லப்பட்டன.

பகிரங்கமாக, பொதுவிடத்தில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டன. ஜாமிஆ பள்ளிவாசல் மிம்பர் மேடையின் மீது நின்றுகொண்டு அறிவிப்பு செய்யப்பட்டது.

(சத்தியத்திற்கும், சத்தியத்தின் சொந்தக்காரர்களுக்கும் வெற்றியைத் தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்! அமீருல் முஃமினீன் யஜீதிற்கும், அவருடைய படையினருக்கும் அவனே உதவி புரிந்தான்: பொய்யன் அலியுடைய மகனான பொய்யன் ஹுஸைனையும், அவனுடைய கூட்டத்தையும் அவனே கொன்றொழித்தான்)

பிறகு, இந்த எல்லா தலைகளும் யஜீதிடம் டமாஸ்கஸ் அனுப்பிவைக்கப்பட்டன. அவர் நிரம்பி வழிந்த அரசவையில் அவற்றை காட்சிப் பொருளாக வைத்தார்.

யஜீதுடைய கண்ணோட்டத்தின்படி, ஹஸ்ரத் ஹுஸைன் (ரழி) ஒரு சதிகாரர். நாமும் அதை அப்படியே ஏற்றுக்கொள்வோம்.

அரசாங்கத்திற்கு எதிராக சதி செய்பவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

அவர்களை எவ்வாறு தண்டிக்க வேண்டும்? என்று இஸ்லாத்தில் ஏதும் சட்டங்களே இல்லையா?

ஃபிக்ஹுடைய எல்லா நூற்களிலும் இதைப்பற்றிய தெளிவான சட்டங்கள் காணக் கிடைக்கின்றன. உதாரணத்திற்கு ஹிதாயா, அதன் விளக்க நூலான ஃபத்ஹுல் கதீர் உடைய 'அல்புகாத்' பிரிவை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

அந்த அடிப்படையில் பார்க்கப் போனால், கர்பலா மைதானத்தில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும், அதற்குப் பிறகு கூஃபாவில், டமாஸ்கஸ் தர்பாரில் யஜீத் நடந்துகொண்ட முறைகளும், முழுக்க முழுக்க ஹராமானவை: அநீதியானவை: அநியாயம் மிக்கவை.

டமாஸ்கஸ் அரசவையில் என்ன நடந்தது என்பதைப் பற்றிய பல்வேறு அறிவிப்புகள் காணப்படுகின்றன.

அவையனைத்தும் புறந்தள்ளிவிட்டு கீழ்வருவனவற்றை மட்டுமே ஏற்றுக்கொள்வோம். இவற்றையும் கொஞ்சம் கவனமாக அவதானியுங்கள்.

ஹஸ்ரத் ஹுஸைன் மற்றும் அவருடைய தோழர்களின் தலைகளைக் கண்டவுடன் யஜீதுடைய கண்களில் நீர் மல்கியது அவர் கூறினார்: "நான் ஹுஸைனை கொல்லாமலேயே நீங்கள் என்னைப் பின்பற்றுவீர்கள் என்றுதான் நம்பிக்கொண்டிருந்தேன். இப்னு ஸியாதின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் அங்கு இருந்திருந்தால் ஹுஸைனை மன்னித்திருப்பேன்!"

மேலும் கூறினார். "அல்லாஹ்வின் மீது சத்தியமாக, ஹுஸைன் அவர்களே! நான் ஒருவேளை அங்கு இருந்திருந்தால் உங்களைக் கொன்றிருக்க மாட்டேன்"

இந்த அறிவிப்புகளையே ஏற்றுக் கொண்ட பிறகும் ஒரு கேள்வி இன்று வரை எஞ்சி நிற்கின்றது.

'இத்தகைய கொடுமையான அநீதியைச் செய்தவர்களுக்கு அவர் என்ன தண்டனை வழங்கினார்?'

ஹாபிழ் இப்னு கசீர் கூறுகிறார்:

'அவர் இப்னு ஸியாதிற்கு எந்த விதமான தண்டனையும் அளிக்கவில்லை. அவனை பதவியிலிருந்தும் நீக்கவில்லை.

அவனை கண்டித்து ஒரு கடிதம் கூட எழுதவில்லை! மாறாக அவனுடைய அனைத்து செய்கைகளுக்கும் மௌனம் காத்து அனுமதி வழங்கினார்.

இஸ்லாத்தை விடுங்கள்! அது உன்னதமான, உயரிய மார்க்கம், யஜீதுடைய உள்ளத்தில் மனித நேயத்தின் ஒரே ஒரு துளி எஞ்சி இருந்திருந்தால், மக்கா வெற்றியை அவர் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும்.

யஜீதுடைய பாட்டனார் அபூசுப்யான், அவரது மனைவி ஹிந்தா இவர்தான் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் பெருமானாருக்கு மிக மிக பக்கத் துணையாக இருந்த ஹஸரத் ஹம்ஸா (ரழி) அவரது ஈரலை மென்று துப்பியவர். இது தவிர அபூ சுப்யான் இறுதிவரை இஸ்லாத்திற்கும்; முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் எதிராக செயற்பட்டு, அவரது எல்லா செய்கைகளிலும் தோல்வியுற்று இறுதியில் நிர்ப்பந்தமாக தப்புவதற்கு வேறுவழியின்றி பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள் பெருமனதுடன் மன்னித்த பிறகு இஸ்லாத்தைத் தழுவியவர்.

மக்கா வெற்றியின்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் யஜீதுடைய குடும்பதினருக்கு எவ்வளவு பெருந்தன்மையுடைன் மன்னிப்பு வழங்கினார்கள்! அதே குடும்பத்தினரின் ஆட்சி வந்தவுடன் அந்த மாபெரும் மனிதப் புனிதரின் பேரனோடு எப்படியெல்லாம் அவர்கள் நடந்து கொண்டார்கள்?

♦ இதற்குப்பிறகு ஏற்பட்ட இரண்டாவது துன்பகரமான நிகழ்ச்சி 'ஹர்ரா போர்' ஆகும். இது யஜீதுடைய கடைசிக் காலத்தில் ஹி 63-ல் நடைபெற்றது ஆகும். இந்நிகழ்ச்சியின் சுருக்கமாவது:

மதீனாவாசிகள் யஜீத் ஒரு பாவி, கொடுங்கோலன், அநியாயக்காரன் என்றெல்லாம் கூறி அவனை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார்கள். அவனால் நியமிக்கப்பட்ட ஆளுநரையும் வெளியேற்றிவிட்டு. அப்துல்லாஹ் பின் ஹன்ழலா-வை தம்முடைய ஆளுநராக ஆக்கிக் கொண்டார்கள். இந்தத் தகவல் யஜீதுடைய காதுகளுக்கு எட்டியவுடன் அவன் முஸ்லிம் பின் உக்பா அல்முர்ஸி

(முன்னோர் சிலர் அவனை முஸ்ரி.்.ப் பின் உக்பா என்றும் கூறுகிறார்கள்) என்பவன் தலைமையில் 12,000 படையினரை மதீனா நோக்கி அனுப்பினான்.

தலைவருக்கு கட்டுப்பட்டு கீழ்படிந்து நடக்குமாறு மூன்று நாட்கள் மக்களை அழைக்கவேண்டும். மூன்று நாட்களுக்குப் பிறகும் அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தால் அவர்களோடு போர்புரிய வேண்டும். போரில் வெற்றி பெற்ற பிறகு இராணுவத்துக்கு, மதீனாவை மூன்று நாட்கள் ஹலாலாக்கி விட வேண்டும்.

இவை அப்படைத்தளபதிக்கு அளிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள்.

இதே போன்று எல்லாம் நடந்தன. மதீனா வெற்றிகொள்ளப் பட்டது. யஜீதுடைய கட்டளையின் பிரகாரம் மூன்று நாட்களில் மதீனா, இராணுவத்தினருக்கு ஹலாலாக்கப்பட்டது. அவர்கள் என்னவேண்டுமா னாலும் செய்து கொள்ளலாம் என்று அனுமதியளிக்கப்பட்டது. இம்மூன்று நாட்கள் மதீனா சூறையாடப்பட்டது! கொள்ளையடிக்கப்பட்டது! கண்ணில் பட்டவர்கள் எல்லாம் வெறித்தனமாக கொன்று குவிக்கப் பட்டனர்!

இமாம் ஜுஹ்ரி உடைய அறிவிப்பின்படி,

எழுநூறு சான்றோர் பெருமக்கள் (ஸஹாபாக்கள்), ஏறக்குறைய பத்தாயிரம் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டனர்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், இந்த வெறிநாய்கள் வீடுகளில் புகுந்து அப்பாவிப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததுதான்.

ஹாபிழ் இப்னு கசீர் கூறுகிறார்கள்.

(அந்நாட்களில் சுமார் ஆயிரம் பெண்கள் தங்கள் கணவன்மார்கள் அல்லாத வேறு நபர்களால் கர்ப்பவதிகளாக்கப்பட்டார்கள்)

ஒருக்கால் மதீனாவாசிகள் சதிகாரர்கள் என்றே வைத்துக் கொள்வோம். முஸ்லிம் சதிகாரர்களோடு, அட, முஸ்லிம்களை விடுங்கள் முஸ்லிம் அல்லாத மக்களோடு, சதிகார கா.்.பிர்களோடு இவ்வாறு நடந்து கொள்வதை இஸ்லாம் அனுமதிக்கின்றதா? என்ன? அதுவும், இங்கே பிரச்சனை வேறு ஏதோ நகரத்தோடு அல்ல. மதீனத்துர் ரசூல்! அண்ணலாரின் நகரம். இந்நகரை சிறப்பித்து அண்ணலார் ரஸுல் (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ்கள் பல புஹாரி, முஸ்லிம், நஸாயி, முஸ்னது அஹ்மது என்று பல நூற்களில் பல சஹாபாக்கள் வழியாக பதிவாகியுள்ளன.

(மதினா மக்களுக்கு யாரேனும் தீங்கு நினைத்தால் அல்லாஹ் அவனை நரகில் செம்பைப் போன்று உருக்குவான்)

(யார் மதீனாவாசிகளை கொடுங்கோன்மையுடன் பீதிக்குள்ளாக்குவாரோ, அவனை அல்லாஹ் பீதிக்குள்ளாக்குவான்: அவன்மீது, அல்லாஹ்வுடைய, வானவர்களுடைய, ஒட்டுமொத்த மக்களுடைய சாபம் உண்டாகும்: நாளை கியாமத் நாளில் அவனுடைய பாவத்திற்கு பரிகாரமாக எந்தப் பொருளையும் அல்லாஹ் ஒப்புக்கொள்ள மாட்டான்)

ஹாபிழ் இப்னு கசீர் கூறுவதாவது: இவ்வதீஸ்களை முன்வைத்துத்தான் உலமாக்களின் ஒரு பிரிவினர் யஜீதின் மீது ல.்.னத் (சாபம்) கூறிவதை ஆகுமாக்கி (ஜாயிஸ்) உள்ளார்கள். இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் அவர்களும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.

இது இப்படியே தொடர்ந்து, அவனுடைய தந்தை, பிறகு மற்ற சஹாபாக்களையும் திட்ட வழி வகுத்துவிடுமே என்றஞ்சி உலமாக்களில் ஒரு சாரார் இவ்வாறு ல.்.னத் கூறுவதை தடைசெய்துள்ளனர்.

பனு உமய்யாக்களுக்கு எதிராக ஏதும் எதிர்ப்புக்குரல் எழுப்புவதில்லை: புரட்சிப் போராளிக் குழுக்கள் எதிலும் பங்கேற்பதில்லை என்ற குற்றச்சாட்டு ஒருமுறை ஹஸ்ரத் ஹஸன் பசரிக்கு எதிராக எழுப்பப்பட்டது.

"நீங்கள் சிரியாவாசிகளோடு (பனூஉமய்யாக்கள்) திருப்தியோடு உள்ளீர்களா?" என்று அவரிடம் வினவப்பட்டது.

"நான் எப்படி அவர்களை ஏற்றுக்கொள்வேன்? அல்லாஹ் அவர்களை நாசமாக்கட்டும்! நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனிதப்படுத்தியிருந்த நகரத்தை இவர்கள் தாமே தமக்கு ஹலாலாக்கிக் கொண்டார்கள். மூன்று நாட்கள் அந்நகர மக்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தார்கள். தம்முடைய நப்தீ, கிப்தீ வீரர்களிடமெல்லாம் நீங்கள் நினைப்பதையெல்லாம் செய்துகொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஈமானை நெஞ்சில் சுமந்து பெண்களையெல்லாம் கூட தாக்கினார்கள். மானபங்கப் படுத்தினார்கள். பின்பு பைத்துல்லாஹ் மீது படையெடுத்துச் சென்றார்கள். அதன்மீது கல்மாரி பொழிந்தார்கள். தீ வைத்து கொளுத்தினார்கள். அவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும். அவர்களின் முடிவு நாசமாகப்போகட்டும்!" என்று அவர் பதில் கூறினார்.

- மூன்றாவது நிகழ்ச்சி, ஹசன் பசரி (ரஹ்) இறுதியாகக் குறிப்பிட்டுள்ளது ஆகும். மதீனாவை நிர்மூலமாக்கிய பின், நபிகளாரின் நகரத்தை சீர்குலைத்த அதே படையினர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைரோடு போராட மக்கா சென்றனர். 'மின்ஜனைக்கீன்' (கற்களை சரமாரியாக வீசித்தாக்கும் அக்கால இயந்திரம்) மூலம் க.்.பத்துல்லாஹ் மீது கல்மாரி பொழிந்தனர். அதன் காரணமாக க.்.பத்துல்லாஹ்வின் ஒரு பக்கச்சுவர் இடிந்து விழுந்தது.

அவர்கள் க.்.பத்துல்லாஹ்வை எரித்ததாகவும் வரலாற்றில் காணப்படுகின்றது. இருப்பினும், எரித்ததற்கு வேறுசில காரணங்களும் கூறப்படுகின்றன. ஆனால், கற்களை கொண்டு தாக்கியது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

இவர்கள் அனைவரும் தங்கள் பதவியை, ஆட்சியையே முக்கியமானதாக, முதன்மையானதாக கருதினார்கள். அதனைக் காப்பாற்றிக்கொள்ள பஞ்சமாப் பாதகத்தையும் செய்ய தயங்கவில்லை என்பது இச்சம்பவங்கள் மூலம் தெரியவருகின்றது.

பனூமர்வான் ஆட்சிக்காலத்தில்

அதன் பின்பு மர்வான் மற்றும் அவனுடைய வாரிசுகளின் ஆட்சிக் காலத்தில் அரசியல் விவகாரங்களில் 'தீன்' தலையிட இயலவில்லை என்பதோடு, அரசியலுக்காக தீனுடைய எவ்வளவோ கட்டளைகள், ஆணைகள் சர்வசாதாரணமாக பலியிடப்பட்டன.

அப்துல் மாலிக் பின் மர்வான் உண்மையில் ஒரு சிறந்த மார்க்க சட்ட நிபுணராக (.்.பகீஹ்) இருந்தார். அரசுக்கட்டிலில் அமரும் முன்பு மதீனாவின் சஈத் பின் முஸய்யிப், உர்வா பின் ஜுபைர், கபீசா பின் துவைப் போன்ற அறிஞர்களுக்கு இணையானவராகக் கருதப்பட்டார். யஜீதுடைய காலத்தில் க.்.பத்துல்லாஹ் மீது கல் வீசிதாக்கியதை கடுமையாக எதிர்த்தார். இதெல்லாம் பதவிக்கு வரும் முன்பு.

பதவிக்கு வந்தவுடன் அதே அப்துல் மாலிக், அப்துல்லாஹ் பின் ஜுபைரை அடக்க ஹஜ்ஜாஜ் பின் யூசு.்.ப்பை மக்காவுக்கு அனுப்பினார். இந்த கொடுங்கோலன் சரியாக ஹஜ்ஜுடைய காலத்தில் மக்காவின் மீது படையெடுத்தான். ஜாஹிலிய்யா அறியாமைக் காலத்தில் முஷ்ரிக்கீன்கள் கூட ஹஜ்ஜுடைய மாதங்களில் போரை நிறுத்திவிடுவார்கள். இவனோ 'மின்ஜனைக்கைன்' இயந்திரங்களை குபைஸ் முனையில் நிறுத்தி க.்.பத்துல்லாஹ் மீது கற்களை பொழிந்தான்.

ஹஸரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) கடுமையாக எதிர்த்ததால் கல்வீசி தாக்குவது சிறிது காலம் - வெளியூரிலிருந்து வந்துள்ள ஹாஜிகள் தவா.்.ப் செய்து வெளியேறும் வரை - ஒத்தி வைக்கப்பட்டது. ஆனால் அவ்வாண்டு மக்காவாசிகள் யாரும் மினா, அர.்.பா செல்ல அனுமதிக்கப்படவில்லை. ஹஜ்ஜாஜ் உடைய படையினர்கூட தவா.்.ப் செய்ய இயலவில்லை. வெளியூர்களிலிருந்து வந்துள்ளவர்கள் தவா.்.ப் செய்து முடித்தவுடன் அவர்கள் அனைவரையும் வெளியேறுமாறு ஹஜ்ஜாஜ் ஆணையிட்டான். மீண்டும் கற்களைக் கொண்டு தாக்கவும் சொன்னான். பிறகு வெற்றி கிட்டியவுடன் ஹஸரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரழி), அப்துல்லாஹ்

பின் ச.ஃப்வான், உபாதா பின் ஹஜம் போன்றோரின் தலைகளை சீவி எவ்வாறு நடந்துக்கொண்டார்கள் என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுவிட்டது.

அப்துல் மாலிக் மற்றும் அவர் மகன் வலீதுடைய ஆட்சியில் ஏற்பட்ட மிகப்பெரிய கொடுமை ஹஜ்ஜாஜ் பின் யூசுஃப் கவர்னராக இருந்ததுதான். இருபது ஆண்டுகள் அவன் அப்பதவியில் நீடித்தான். உலகில் எந்த மனிதனும் தீமைகளின் ஒட்டுமொத்த உருவமாக இருப்பது இல்லை. ஹஜ்ஜாஜிடமும் சில நல்ல குணங்கள் இருந்தன. குர்ஆனுடை எழுத்துக்களுக்கு 'இஃராப்' (ஒலிக்குறியீடுகள்) இட்டது உலகம் உள்ளவரை நிலைத்து நிற்கும் அவனுடைய ஒரு நல்ல செயல் ஆகும்! அது போன்றே சிந்துவின் மீதான படையெடுப்பு! இன்று இப்பூமியில் இறைவனை வணங்கும் அடியார்கள் பரவிக்காணப்படுவதற்கு அவ்வெற்றியே அச்சாரமாக அமைந்தது.

ஆனால், ஒரு மனிதன் எத்தனையோ நன்மைகள் செய்திருந்தாலும், ஒரு முஸ்லிமை அநியாயமாக கொலை செய்ததற்கு ஈடாக அவை ஆகமுடியாது. இவனோ, தன் இருபதாண்டு ஆட்சியில் எண்ணவே முடியாத அநியாயங்களை புரிந்துள்ளான்.

'அல்லாஹ் தடுத்துள்ள காரியங்களில் ஒன்றைக் கூட ஹஜ்ஜாஜ் விட்டு வைத்தது கிடையாது!'

என்று புகழ்பெற்ற 'இமாமுல் கிராஅத்' ஆசிப் பின் அபிந்நஜ்வத் கூறுகிறார்.

"தீமைகளின் ஒரு போட்டி உலகில் நடந்து உலகில் மற்ற இனங்கள் எல்லாம் தத்தமது கொடுங்கோலர்களை கொண்டுவந்து நிறுத்தினால் நம் புறத்திலிருந்து ஹஜ்ஜாஜ் ஒருவனே அவர்கள் அனைவரையும் சமாளிக்கப் போதுமானவன் ஆவான்!"

இது ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (ரஹ்) உடைய கருத்து.

ஹஸரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களை, அவன் 'முனாபிக்கீன்களின் தலைவர்' (சய்யிதுல் முனாஃபிக்கீன்)

என்று வர்ணித்தான். 'இப்னு மஸ்ஊத் என் கையில் சிக்கினால் அவருடைய இரத்தத்தைக் கொண்டு பூமியின் தாகம் தணிப்பேன்' என்று அவன் கூறுவான். இப்னு மஸ்ஊத் குர்ஆன் ஓதும் முறைப்படி யாரும் குர்ஆன் ஓதினால் அவன் தலையை சீவிவிடுவேன் என்று அவன் கட்டளையிட்டான். 'குர்ஆனிலிருந்து அவருடைய கிராஅத் முறையை பன்றியின் எழும்புகளைக் கொண்டு அகற்ற நேர்ந்தாலும் அதற்கு நான் தயங்கமாட்டேன்' என்று அடிக்கடி கூறுவான்.

ஹஸரத் அனஸ் பின் மாலிக் (ரழி) ஹஸ்ரத் சஹ்ல் பின் சஅத்சாஇதி போன்ற சான்றோர்களை திட்டுவது அவன் வழக்கமாக இருந்தது.

ஹஸரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) அவர்களை கொன்றுவிடுவதாக மிரட்டினான்.

"நான் பள்ளிவாசலின் ஒருவாசல் வழியாக வெளியேறவேண்டும் என்று மக்களுக்கு கட்டளையிட்டு அவர்கள் வேறு வாசல் வழியாக வெளியேறினால் அவர்கள் அனைவரையும் கொலை செய்வது எனக்கு ஹலால் ஆகும்!" பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட அவனுடைய கொள்கை அறிவிப்பு இது!

அவன் ஆட்சியின் கைது செய்யப்பட்டு, எவ்வித நீதிமன்ற விசாரணையும் இல்லாமல் கொலை செய்யப்பட்டோரின் எண்ணிக்கை, ஒரு இலட்சத்து, இருபது ஆயிரம் பேர்!

அவன் இறந்தபோது சிறைச்சாலைகளில் எவ்வித வழக்கு, விசாரணையின்றி வாடியோரின் எண்ணிக்கை 80 ஆயிரம் ஆகும்.

இந்த அநியாயக்கார கவர்னரைப் பற்றி அப்துல் மாலிக் தனது மகனுக்கு செய்த இறுதி உபதேசம் கேளுங்கள். "ஹஜ்ஜாஜ் பின் யூசுஃப் விஷயத்தில் நன்றியோடு நடந்துகொள். நாம் பதவியில் இருப்பதற்கு அவன்தான் காரணம். அவன்தான் நமது எதிரிகளை வீழ்த்தினான். நமக்கெதிரான எல்லா எதிர்ப்புகளையும் அவன்தான் சமாளித்தான்."

இவர்கள் எந்த இலட்சணத்தில் ஆட்சி செய்திருப்பார்கள் என்பதற்கு இந்த இறுதி உபதேசமே சான்று. அவர்களுடைய ஒரே நோக்கம் ஆட்சியதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதே!

ஆட்சி எவ்வழியில் வந்தாலும் சரி, அதுவே அவர்களிடத்தில் சரியான வழி. ஷரிஅத்தினுடைய எல்லா நியதிகளையும் அதற்காக உடைத்து தூள்தூளாக்கினாலும் சரியே!

இந்த அநீதி எந்த அளவு வியாபித்துப் பரந்திருந்தது என்பதை வலீதுப்னு அப்துல் மலிக் உடைய காலத்தில் ஒருமுறை உமரிப்னு அப்துல் அஜீஸ் இறைவனிடத்தில் கதறிக்கேட்ட மன்றாடல் மூலம் அறியலாம். "இராக்கில் ஹஜ்ஜாஜ்: எகிப்தில் குர்ரா பின் ஷரீக்: மதீனாவில் உஸ்மான் பின் ஹய்யான்: மக்காவிலோ காலித் பின் அப்துல்லாஹ் அல்கஸ்ரீ. இறைவா! உனது பூமி அநியாயக்காரர்களால் நிரம்பி வழிகின்றது. இப்போதாவது மக்களுக்கு இளைப்பாறுதல் தரமாட்டாயோ?"

அரசியல் விவகாரங்கள் அல்லாமல் அன்றாட மார்க்க விஷயங்களிலும் இவர்கள் எல்லைமீறி நடந்து கொண்டார்கள். தொழுகைகளுக்கு வெகுநேரஞ்சென்று வருவதை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

ஜும்ஆவினுடைய முதல் குத்பாவை உட்கார்ந்து கொடுக்க ஆரம்பித்தார்கள்.

பெருநாள் தொழுகைகளில், குத்பாவுக்குப் பின்பு தொழும் புதுமையை மர்வான் புகுத்தினான். அதை அவனுடைய பரம்பரையினர் ஒரு 'சுன்னத்'தாகவே ஆக்கினர். இதனை அறியாத மக்கள் இன்றுவரை அதனைப் பின்பற்றி வருகின்றனர்.

உமர் இப்னு அப்துல் அஜீஸ் உடைய பொற்காலம்

பனூஉமைய்யாக்களின் 92 ஆண்டுகால ஆட்சியில் ஹஸ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஸ் உடைய இரண்டரை ஆண்டுகால ஆட்சியே பொற்காலமாகத் திகழ்ந்தது எனலாம் ஹி93-ல் நடைபெற்ற ஒரு சம்பவம் அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அப்போது அவர் மதீனாவின் கவர்னராக இருந்தார். வலீத் இப்னு அப்துல் மலிக்-

கின் கட்டளைக்கிணங்க ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜுபைர் (ரழி) உடைய மகனார் குபைப் கைது செய்யப்பட்டு 50 கசையடிகள் கொடுக்கப்பட்டது. கடுங்குளிர் காலத்தில் அவர்தலை மீது குளிர்ந்தநீர் கொட்டப்பட்டது. பின்பு நாள் முழுக்க மஸ்ஜிதுந் நபவியில் நின்று கொண்டிருக்கும்படி கூறப்பட்டது. இதன் காரணமாக இறுதியில் அவர் இறந்தே போனார்.

சட்ட விரோதமான,முழுக்க முழுக்க அநியாயமான ஒரு தண்டனையாகும் இது. ஆளுநர் என்ற நிலையில் இதை உமரிப்னு அப்துல் அஜீஸே செய்ய நேரிட்டது. ஆனால், அதன் பின்பு அவர் கவர்னர் பதவியை ராஜினாமா செய்துவிட்டார். இதைப்பற்றி ஆழ்ந்த வருத்தமும், இறைவனைப் பற்றிய பயமும் அவர் மனதில் குடிகொண்டு விட்டன!

ஹி.99-ல் சுலைமான் இப்னு அப்துல்மலிக் உடைய இரகசிய வசிய்யத்தின் பிரகாரம் அவர் கலீ.்.பா ஆக்கப்பட்டார். உலகத்தின் கண்களுக்கு முன்னால் கிலாபத் என்றால் என்ன? மன்னராட்சிக்கும், அதற்கும் உள்ள வேறுபாடு என்ன? என்பதை மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்துக் காட்டினார். பைஅத்துடைய முதல் சொற்பொழிவின் போது அவர் கூறினார்.

"அரசாங்க சோதனையில் நான் சிக்கிக் கொண்டுள்ளேன், நான் இப்பதவியைத் தேடி அலையவில்லை, இது விஷயத்தில் என்னிடம் கருத்தும் கேட்கப்படவில்லை, முஸ்லிம்களின் ஆலோசனை அடிப்படையிலும் நான் பதவிக்கு வரவில்லை. எனவே, மக்கள் கழுத்தில் பூட்டப்பட்டுள்ள என்னுடைய பதவி எனும் நுகத்தடியை நான் அகற்றி விடுகிறேன்! இப்போது நீங்கள் யாரை விரும்புகிறீர்களோ, அவரை உங்கள் பொறுப்பாளராக ஆக்கிக் கொள்ளுங்கள்!"

"உங்களையே நாங்கள் விரும்புகிறோம் உங்களுடைய அரசுதான் எங்களுக்குத் தேவை!" என்று மக்கள் கூட்டம் ஒரே குரலில் முழங்கியது. அதன் பின்பே அவர் கிலா.்.பத் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். தொடர்கிறது அவர் உரை.

"இந்த உம்மத்தில் இறைவனைப்பற்றியோ, இறைத்தூதரைப்

பற்றியோ, அவர் கொணர்ந்த இறைவேதத்தைப் பற்றியோ எந்தவித கருத்து வேறுபாடும் இல்லை. கருத்து மோதல்கள் எதைப்பற்றி? என்றால், அவை தீனார்கள், திர்ஹம்களைப்பற்றித் தான்! அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நான் தவறான முறையில் யாருக்கும் ஒரு நயாபைசாவைக் கூட கொடுக்கமாட்டேன். ஒருவருக்கு நியாயமான முறையில் கிடைக்கவேண்டிய ஒரு ரூபாயைக் கூட தடுத்து நிறுத்த மாட்டேன். அல்லாஹ்வுக்கு யார் கட்டுப்பட்டு நடக்கின்றாரோ, அவர் வார்த்தைக்கு கீழ்படிவது கடமையாகும்! இறைவனுக்கு கீழ்படிந்து நான் நடக்கும் வரை எனக்கு கட்டுப்படுங்கள், நான் இறைவனுக்கு நன்றி மறந்தவனாக ஆகிவிட்டால், எனக்கு கட்டுப்படுவது உங்களுக்கு ஒருபோதும் கிடையாது!"

அதன்பின்பு அவர் தன்னுடைய மூதாதையர் கடைபிடித்துவந்த எல்லாவகையான ராஜவம்ச வழக்கங்களையெல்லாம் விட்டொழித்தார். குல.'.பாயே ராஷிதீன்களுடைய எளிமையான நடைமுறைகளை மேற்கொண்டார். தவறான முறையில் வாரிசுரிமைச் சொத்துகளாக தனக்குக் கிடைத்த எல்லாச் சொத்துக்களையும், நிலங்களையும் திரும்ப ஒப்படைத்தார். தன்னுடைய மனைவியின் அணிகலன்களையும், நகைகளையும் கூட பைத்துல் மால்-பொதுநிதியில் சேர்த்தார். 40,000 தீனார்கள் வருட வருமானம் வந்துகொண்டிருந்த தன்னுடைய சொத்துக்களில் ஹலாலான வருமானம் வரக்கூடிய 400 தீனார் (வருட வருமான அளவு) சொத்தினை மட்டும் தக்கவைத்துக் கொண்டு எஞ்சியவற்றை திருப்பியளித்து விட்டார்.

இவ்வாறு தன்னுடைய சொந்தக் கணக்கை இறைவனுக்கு முன்னாலும், உம்மத்துக்கு முன்னாலும் நேராக்கிய பிறகு அரச பரம்பரையைச் சேர்ந்த பிரபுக்களின் பக்கம் கவனத்தை திருப்பினார். அப்பிரபுக்களில் யார் மீதாவது, 'இவர் என்னிடமிருந்து அநியாயமான முறையில் ஓர் அடி நிலத்தை பிடுங்கிக் கொண்டார்'. என்று எவராவது முறையிட்டால் அந்நிலம் அவருக்கு தரப்படும் என்று பகிரங்கமாக அறிவிப்பு செய்தார்.

இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல் மர்வானுடைய பரம்பரையினர் (உமையாக்கள்) பொங்கி எழுந்தனர்.

உமரிடம் பேசி இவற்றை தடுத்து நிறுத்த அவர்கள் மர்வானுடைய மகளும், உமருடைய அத்தையுமாகிய .'.பாத்திமாவை அனுப்பி வைத்தனர். அவர்மீது உமர் இப்னு அப்துல் அஜீஸ் மிகுந்த கண்ணியமும், மரியாதையும் வைத்திருந்தார். ஆனாலும், அவர்கள் தமது அத்தையிடம், 'ஆட்சியாளனுடைய உற்றார், உறவினர்களே அநியாயம் செய்கின்றபோது அவற்றை தடுத்து நிறுத்த அவனால் இயலவில்லையென்றால், அவன் மற்றவர்களுடைய அநியாயத்தை எவ்வாறு தடுத்து நிறுத்துவான்?' என்று வினவினார்.

"நீங்கள் உங்களுடைய செயல்களை நிறுத்திக் கொள்ளா விட்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று உங்கள் குடும்பத்தினர் எச்சரிக்கின்றார்கள்" என்று அத்தை கூறியபோது, "கியாமத் நாளின் வேதனையை விட வேறொரு வேதனைக்கு நான் பயப்படுபவனாக இருந்தால், அதைவிட்டும் காப்பாற்று என்று ஒருபோதும் துஆ செய்யமாட்டேன்!" என்று பதில் கூறினார். இறுதியில் தோல்வியோடு திரும்பிய .'.பத்திமா அத்தை, தன் குடும்பத்தாரிடம் கூறினார்.

"எல்லாம் உங்கள் செயல்களால் வந்தது தான்! நீங்கள் உமரிப்னு கத்தாபுடைய குடும்பத்திலிருந்து பெண் எடுத்தீர்கள். இப்போது இந்தப் பையன் தன்னுடைய தாத்தாவின் வழியிலேயே செல்கிறான்!"

(உமரிப்னு அப்துல் அஜீஸ் உடைய தாயார் ஹஸ்ரத் உமரிப்னு கத்தாப் (ரழி) உடைய (மகன்வழி) பேத்தி என்பது ஞாபகம் இருக்கட்டும்)

அவருடைய பொறுப்புணர்வு எந்த அளவு இருந்தது என்றல், சுலைமான் இப்னு அப்துல்மலிக்-கை அடக்கம் செய்துவிட்டு திரும்பியபோது துக்ககரமாகவும், சோகநிலையிலும்' அவர் காணப்பட்டார். 'பதவிக்கு வந்தவுடன் சந்தோஷமாக திகழாமல் இதென்ன சோகத்துடன் உள்ளீர்கள்?' என்று கேட்கப்பட்டபோது, அவர் கூறினார்.

"கிழக்கிலிருந்து மேற்கு வரை அவன் கேட்காமல் நாமே அவனுடைய உரிமையை வழங்கும் நிலையில் உம்மத்தே முஹம்மதிய்யாவின் ஒரு நபர் கூட இல்லை!"

அவருடைய துணைவியார் அறிவிக்கின்றார்கள்: 'நான் அவருடைய அறைக்குச் சென்றேன். அவர் தொழுது விட்டமர்ந்தவாறு கண்ணீர் வடிய அழுது கொண்டிருந்தார். உங்களுக்கு என்ன நேர்ந்தது? என்று நான் கேட்டேன். அவர் கூறினார்: "உம்மத்தே முஹம்மதுவின் பொறுப்புகளை நான் என் தலையின் மீது சுமந்துள்ளேன். இச்சமூகத்தில் பட்டினி கிடக்கும் ஏழை எளியவர்கள் உள்ளனர்: பரிதாபத்திற்குரிய நோயாளிகள் உள்ளனர்: அநீதி இழைக்கப்பட்ட அப்பாவிகள் உள்ளனர்: நிரபராதியான கைதிகள் உள்ளனர்: ஆதரவற்ற பலவீனமான முதியோர்கள் உள்ளனர்: ஏதுமற்ற எளியோர் உள்ளனர்: நாடுமுழுக்க உள்ள இத்தகைய இவர்களைப் பற்றியே நான் சிந்தித்துக் கொண்டுள்ளேன், கியாமத் நாளில் இவர்களைப் பற்றித்தான் என்னிறைவன் என்னிடம் கேள்வி கேட்பான் என்பது எனக்கு நன்றாகவே தெரிகிறது. அந்நாளில் முஹம்மது (ஸல்) அவர்களும் என்னைவிட்டு விலகி நிற்பார்கள். எனக்கு எதிராக தீர்ப்பு வந்துவிடுமோ என்று பயப்படுகின்றேன் . எனவேதான், என்பரிதாப நிலையை எண்ணி கண்ணீர் வடிக்கின்றேன்!"

அவர் அநியாயக்கார எல்லா ஆளுநர்களையும், அதிகாரி களையும் அகற்றி நல்ல, நேர்மையானவர்களை பொறுப்புகளில் அமர்த்தினார். பனூஉமைய்யாக்கள் காலத்தில் வசூலிக்கப்பட்டு வந்த அநியாயமான எல்லா வரிகளையும் தள்ளுபடி செய்தார். முஸ்லிம்களாக மாறியபின்பும் வசூலிக்கப்பட்டு வந்த ஜிஸ்யாவரியை தடைசெய்தார். 'எந்த வொரு முஸ்லிமுக்கோ, திம்மிக்கோ தன்னைக் கேட்காமல் கசையடி கொடுக்கக் கூடாது: தன்னைக் கேட்காமல் யாருக்கும் மரணதண்டனையோ, கைகளை துண்டிக்கும் தண்டனையையோ தரக்கூடாது' என்று எல்லா அதிகாரிகளுக்கு கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார்!

அவருடைய கடைசிக்காலத்தில் காரிஜியாக்களின் ஒரு கூட்டம் அவருக்கெதிராக குரல் எழுப்பியது. 'இரத்தத்தை வீணாக

சிந்துவானேன்? வாருங்கள்! உட்கார்ந்து விவாதிப்போம். நீங்கள் சரியான பாதையில் இருந்தால் தான் ஒப்புக் கொள்கிறேன். நான் சத்தியத்தின் மீதிருந்தால் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள்!'-என்று ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜிஸ் அவர்களின் தலைவருக்கு தகவல் அனுப்பினார்.

அதை ஏற்றுக் கொண்ட காரிஜியாக்களின் தலைவர் அவரோடு உரையாட இரண்டு பேர்களை அனுப்பிவைத்தார்.

காரிஜியாக்கள்: 'தங்களுக்கு முன்னால் சென்றவர்களின் நடைமுறையை விட தங்களுடைய நடைமுறை மாறு பட்டுள்ளது செயல்கள் யாவும் அநியாயமானவை என்று தாங்கள் கருதுகின்றீர்கள். அவர்கள் அநீதியிழைத்தார்கள் என்று ஒப்புக் கொள்ளும் தாங்கள் அவர்கள் மீது லஃனத் (சாபம்) அனுப்ப ஏன் மறுக்கின்றீர்கள்?

உமரிப்னு அப்துல் அஜீஸ்: "அவர்களுடைய செயல்கள் அநீதியானவை என்று கூறுவது ஒன்றே அவர்களை அவமானப் படுத்த போதுமானது ஆகாதா? லஃனத் வேறு அனுப்ப வேண்டுமா?"

நிங்கள் இதுவரைக்கும் ஃபிர்அவ்ன் மீது எத்தனை முறை லஃனத் செய்துள்ளீர்கள்?

இவ்வாறு அவர்களுடைய எல்லாக் குற்றச்சாட்டுகளுக்கும் நேர்த்தியான பதிலை அளித்தார். இறுதியாக.

காரிஜியாக்கள்: "ஒரு நேர்மையான மனிதன் தனக்கும் பிரதி நிதியாக ஒரு அநியாயக்காரன் வருவதை ஒப்புக்கொள்வானா?"

உரிப்னு அப்துல் அஜீஸ்: "கண்டிப்பாக மாட்டான்!"

காரிஜியாக்கள்: "நீங்கள் தங்களுக்குப் பிறகு கிலாஃபத் பொறுப்பை யஜீத் பின் அப்துல் மலிக் வசம் ஒப்படைத்து விட்டுச் செல்வீர்களா? அவர் சத்தியத்தை நிலை நாட்டமாட்டார் என்பது தங்களுக்கு நன்றாகவே தெரியும்!"

உமரிப்னு அப்துல் அஜீஸ்: "இது விஷயத்தில் எனக்கு முன்

சென்றவர் (சுலைமான் இப்னு அப்துல் மலிக்) முன்பே, எனக்குப்பின்பு யஜீத் தான் என்று பைஅத் பெற்றுள்ளாரே! நான் என்ன செய்ய முடியும்?"

காரிஜியாக்கள்: "தங்களுக்குப்பிறது யஜீத் தான் என்று நியமித்துச் சென்றாரே, அவருக்கு அவ்வாறு நியமிக்கும் உரிமை உள்ளது என்று கருதுகின்றீர்களா? அவருடைய தீர்ப்பு சரியானதுதான் என்று நினைக்கின்றீர்களா?"

இதற்கு உமரிப்னு அப்துல் அஜீஸ் அவர்களால் எந்தவித பதிலையும் அளிக்க இயலவில்லை. அவர் அமைதியாகி விட்டார் அமர்வு முடிந்து போனபின்பு 'யஜீதுடைய பிரச்சினை என்னை வசமாக மாட்டவைத்துவிட்டது. இதற்கு என்னிடம் எவ்வித பதிலுமே இல்லை. என்னை இறைவன் மன்னிக்கட்டும்!' என்று கூறிப் புலம்பியவாறே இருந்தார்

இந்த சம்பவத்திற்குப் பிறகு பனூ உமையாக்களுடைய பீதி மேலும் அதிகமாகிவிட்டது. பரம்பரை வம்ச ஆட்சி முறையையும் இவர் ஒழித்துக் கட்டிவிடுவார், ஷுறா அடிப்படையிலான கிலா..பத்தை கொண்டுவந்து விடுவார் என்று அவர்கள் பயந்தார்கள்.

இது நடைபெற்ற சிறிது காலத்திற்குள் அவர் விஷம் தரப்பட்டு கொல்லப்பட்டார். அதன் பிறகு முன்பு நடைபெற்றுவந்த பழைய நடைமுறைகள் எல்லாம் மீண்டும் துவங்கின.

அப்பாசியாக்கள் காலம்

சிந்து முதல் ஸ்பெயின் வரை உலகின் ஒரு பெரும் பகுதியில் உமையாக்களின் ஆட்சி பரவியிருந்தது. இம்மாபெரும் சாம்ராஜ்யத்தை யாரவது அசைக்க முடியுமா? என்ற கேள்வி அதன் பிரம்மாண்டத்தை பார்த்தால் கண்டிப்பாக எழும். ஆனால், அது செயல்பட்ட விதத்தின் காரணமாக வெறும் தலைகள் மட்டுமே அதன் முன்பு குனிந்திருந்தன. உள்ளங்களில் அது வேரூண்டவில்லை. எனவே, ஒரு நூற்றாண்டு கழியுமுன்னே அப்பாசியாக்கள் வெகு எளிதாக அதன் அஸ்திவாரத்தையே கவிழ்த்துவிட்டனர். அது வேரோடு சாய்ந்தபோது அதற்காக ஒரு சொட்டு கண்ணீர் விடக்கூட ஆளில்லை!

அப்பாசியாக்களின் வாக்குறுதிகள்

"நாங்கள் இறைத்தூதரின் குடும்பத்திலிருந்து வந்தவர்கள்!" "குர்ஆன்-சுன்னா வழியில் தான் எங்கள் செயற்பாடுகள் அமையும்!" என்ற வாக்குறுதிகளை வழங்கியதால்தான் புதிய அரசு, கிலாபத் பொறுப்புக்கு வருவதில் எளிதாக வெற்றிபெற்றது.

ஹி. 132 ரபீவுஸ்ஸானி மாதம் கூ..பாநகரில் ச..ப்..பாஹ் உடைய கரத்தில் பைஅத் செய்யப்பட்டவுடன், அவர் தன்னுடைய முதல் உரையில் உமைய்யாக்கள் செய்த கொடுமைகளையெல்லாம் பட்டியலிட்டபிறகு கூறினார்.

"எந்தக் குடும்பத்திலிருந்து உங்களுக்கு அமைதி கிடைத்ததோ, அங்கிருந்து அழிவும், அநியாயமும் கிடைக்காது: எங்கிருந்து நீங்கள் நன்மையை பெற்றுக் கொண்டீர்களோ அங்கிருந்து சோதனையும், வேதனையும் வரவேவராது என்று நான் உறுதியாய் நம்புகிறேன்!"

அதற்குப்பிறகு ச..ப்.பாஹ்வுடைய சிறியதந்தை தாவுது பின் அலி எழுந்து நின்று நம்பிக்கை யூட்டினார்.

"சொத்து சுகங்களை சேகரிக்கவேண்டும்: மாட, மாளிகைகள் கட்டவேண்டும்: அவற்றில் நீரோடைகளை ஓடச்செய்யவேண்டும் என்பதற்காக நாங்கள் புறப்பட்டு வரவில்லை. எங்களுடைய தாதாதி மக்கள் (அபூதாலிப் வம்சாவழியினர்) கொடுமைப் படுத்தப்பட்டனர். உமையாக்கள் உங்களுக்கு மத்தியில் கேடுகெட்ட விதமாய் நடந்து கொண்டனர். உங்களை அவமானப்படுத்தினர். இழிவு படுத்தினர். உங்களுடைய பொதுநிதியை தாங்கள் விரும்பியவாறெல்லாம் செலவு செய்தனர். இப்போது எங்கள் மீது அல்லாஹ்வுக்காக, அவன் தூதர் (ஸல்) அவர்களுக்காக, அப்பாஸ் (ரழி) அவர்களுக்காக உங்களுடைய உரிமைகள் உள்ளன. உங்களுக்கு மத்தியில் நாங்கள் அல்லாஹ்வுடைய வேதம், இறைத்தூதரின் வாழ்வு முறையின் பிரகாரம் நடந்துகொள்வோம்."

ஆனால், பதவிக்கு வந்த கொஞ்ச நாட்களுக்குள்

அவர்களுடைய சாயம் வெளுத்துவிட்டது. இவையெல்லாம் இவ்வாக்குறுதிகள் எல்லாம் வெற்றுமாயை என்பது புலனாகியது.

செயற்பாடுகள்

- உமைய்யாக்களின் தலைநகரான டமாஸ்கஸ் வெற்றி கொள்ளப்பட்ட பிறகு அங்கு அப்பாசிய இராணுவம் கொலை வெறி ஆட்டம் ஆடியது. அதில் 50,000 பேர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

- உமைய்யாக்களின் அரண்மனை, 70 நாட்கள் அப்பாசிகளின் குதிரை லாயமாக விளங்கியது.
- ஹஸ்ரத் முஆவியா (ரழி) உட்பட எல்லா உமைய்யாக்களின் (மண்ணறைகளும்) கபுறுகளும் தோண்டியெடுக்கப்பட்டன.

- ஹிஷாம் பின் அப்துல் மாலிக் உடைய சடலம் சிதையாத நிலையில் கிடைத்தது. அச்சடலத்திற்கு கசையடிகள் தரப்பட்டன. பொதுமக்கள் பார்வையில் பல நாட்கள் தொங்கவிடப்பட்டது. பின்பு அதனை எரித்து அதன் சாம்பல் தூவி எறியப்பட்டது.
- உமைய்யாக்களின் குழந்தைகளைக் கூட விட்டுவிடாமல் கொலை செய்து, துடிக்கும் அவற்றின் உடல்கள் மீது உணவு விரிப்பு விரிக்கப்பட்டு உணவு சாப்பிடப்பட்டது.

- பசராவில் உமைய்யாக்கள் கொல்லப்பட்ட பிறகு பிணங்களின் கால்களை பிடித்து தரத்தரவென்று வீதிகளெங்கும் இழுத்துச் செல்லப்பட்டன. பின்பு வீதிகளில் அப்படியே போட்டு விடப்பட்டன. நாய்கள் அவற்றைக் கடித்துக் குதறிப் போட்டன.

- இதே போன்றுதான் மக்கா, மதீனாவிலும் நடந்தது.

மௌசல்நகரில் ச.ப்.பாஹ்வுக்கு எதிராக குரல்கள் கிளர்ந்தன. அதனை அடக்கி ஒடுக்குவதற்காக அவன் தன் தம்பி யஹ்யாவை அனுப்பினான்.

"யார், யாரெல்லாம் ஜாமிஆ பள்ளிக்குள் நுழைந்து விடுவார்களோ அவர்களுக்கெல்லாம் அபயம்!" என்று யஹ்யா அறிவிப்பு செய்தான். ஆயிரக்கணக்கான மக்கள் பள்ளியில் கூடினர். பள்ளிவாசல் கதவுகள் மூடப்பட்டு பாதுகாவலர்கள் நிறுத்தப்பட்டனர். 'அபயம் பெற்ற இந்த அப்பாவிகள்' அனைவரையும் கொன்றுவிடும்படி உத்தரவு பிறந்தது. 11,000 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இரவு நேரத்தில் இறந்துபோனவர்களின் மனைவிகள் ஓலமிட்டு அழும் சப்தம் யஹ்யா காதில் விழுந்தது 'நாளை இவர்களின் முறை!' என்று அவன் கொக்கரித்தான்.

இவ்வாறு மூன்று நாட்கள் அங்கே கோரமான தாக்குதல் நடைபெற்றதில் பெண்கள், ஆண்கள், குழந்தைகள், வயதானவர்கள் என்று யாருமே மிஞ்சவில்லை.

யஹ்யாவின் படையில் 4000 நீக்ரோக்கள் இருந்தனர். அவர்கள் மௌசல் நகரப் பெண்கள் மீது வேட்டை நாய்களைப் போல் பாய்ந்து குதறினர். பட்டப்பகலில் பலபேர் முன்பு பெண்கள் பலாத்காரப் படுத்தப்பட்டனர்

யஹ்யாவுடைய குதிரையின் கால்களைப் பிடித்துக் கொண்டு ஒரு பெண் கதறினாள். "நீங்கள் பனூஹாஷிம் குலத்தைச் சார்ந்தவர் இல்லையா? நபிகள் நாயகத்தின் வம்சத்தைச் சார்ந்தவர் இல்லையா? அரபு முஸ்லிம் பெண்களையெல்லாம் இந்த நீக்ரோ வீரர்கள் கற்பழிக்கின்றார்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லையா?"

யஹ்யாவுடைய இனவெறி தலை தூக்கியது. அன்பளிப்புகளும், சன்மானங்களும் வழங்க உள்ளதாக ஆசை காட்டப்பட்டு அவ்வீரர்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்க்கப் பட்டனர். அனைவரையும் கொன்று குவித்தான் யஹ்யா.

யஜீத் பின் உமர் பின் ஹுபைரா என்பவருக்கு ச.ப்.பாஹ் தன் கையால் அபய ஓலை எழுதிக் கொடுத்தான். பின்பு எல்லாவகையான ஒழுக்கங்களையும் புறந்தள்ளி அவரைக் கொன்றுவிட்டான்.

குராசான் உடைய புகழ்பெற்ற சட்ட வல்லுநர் இப்றாகீம் இப்னு மைமூன் அஸ்சாயிஃ, அப்பாசிகள் குர்ஆன்-சுன்னாவை நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர்கள் வெற்றிபெற்ற பின்னர் எல்லாவகையான உதவிகளையும செய்தார். வெற்றிக்குப் பிறகு குர்ஆன்-சுன்னா வழியில் நடக்குமாறு அபூமுஸ்லிம் குராசானியை அவர் தூண்டினார். அதற்கு மாறாக நடந்தபோது தட்டிக்கேட்டார். அபூமுஸ்லிம் அவருக்கு மரணதண்டனையை பரிசாக வழங்கினான்.

அபூதாலிபுடைய குடும்பத்தினரைப் பாதுகாப்போம்: அவர்களை கொடுமைப்படுத்திய உமையாக்களைப் பழிவாங்குவோம் என்ற அப்பாசியாக்களின் உறுதிமொழியும் மன்சூர் உடைய காலத்தில் பொய்த்துப்போனது.

முஹம்மது பின் அப்துல்லாஹ் நஃப்ஸ் ஜக்கியாவும், அவருடைய சகோதரர் இப்றாஹீமும், மன்சூருடைய காலத்தில் தலைமறைவாகிவிட்டனர். எனவே, மன்சூர், அவர்களுடைய உற்றார், உறவினர்கள் அனைவரையும் அவர்கள் தங்கியுள்ள இடத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை என்ற குற்றத்திற்காக கைது செய்தார்.

அவர்களுடைய அனைத்து சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்கள் அனைவரின் கைகள், கால்களில், கழுத்தில் விலங்குகளை மாட்டி மதீனாவிலிருந்து இராக் கொண்டு செல்லப்பட்டனர்.

சிறைச்சாலையில் அவர்கள் மீது சொல்லலொணா கொடுமைகள் அவிழ்த்து விடப்பட்டன. முஹம்மது பின் இப்றாஹீம் பின் அல்ஹசனை உயிரோடு நிற்கவைத்து சுவர் எழுப்பினர். இப்றாஹீம் பின் அப்துல்லாஹ்வுடைய மாமனாரை நிர்வாணமாக நிற்கவைத்து இருநூற்று ஐம்பது கசையடிகள் கொடுத்தனர். பிறகு அவரைக் கொலை செய்து அவருடைய தலையை வெட்டி குராசான் நகர் முழுவதும் வலம் வந்தனர் கூடவே ஒரு சில மனிதர்கள் ‘இது கஃப்ஸ் ஜகிய்யாவின்தலை’ எனக் கூறியவாறே வந்தனர்.

சிலகாலம் சென்று நஃப்ஸ் ஜகிய்யா மதீனாவில் ஷஹீதானார்.

(கி.பி. 762) அவருடைய தலை வெட்டபட்டு ஊர், ஊராக வலம்கொண்டு வரப்பட்டது. அவருடைய நண்பர்களின் உடல்கள் மூன்று நாட்கள் மதீனாவில் பொதுமக்கள் பார்வைக்கு தொங்கவிடப்பட்டன. பின்பு சலஃ முனை அருகில் இருந்த யூதர்களின் கல்லறையில் வீசி எறியப்பட்டன.

உமையாக்கள் காலத்தைப் போலவே, அப்பாசியாக்கள் காலத்திலும் ‘தீன்’ அரசியலை விட்டு விலகியே, அரசியலில் தலையிட்டுத் திருத்தும் உரிமையில்லாமல் இருந்தது. அல்லாஹ்வின் நியதிகளை, கட்டளைகளை செயற்படுத்த வேண்டும் என்ற அக்கறை அவர்களுக்கு இல்லாததுபோலவே இவர்களிடமும் ஒரு சிறிதும் காணப்படவில்லை.

அவர்களால் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக ஆட்சி செய்த நபர்கள் மாறினார்களே ஒழிய ஆட்சி முறையில் ஒரு சிறிதும் மாற்றம் ஏற்படவில்லை. உமைய்யாக்கள் காலத்தில் நிலவிய ஒரு சிறிய தீங்கைக் கூட அவர்கள் செய்யாமல் விடவில்லை. கிலாஃபத்தே ராஷிதா-விற்குப்பிறகு மன்னராட்சி ஏற்பட்டவுடன் தொடங்கிய எல்லா தீங்குகளும் இப்போதும் தொடர்ந்தன.

உமைய்யாக்கள் தொடங்கிவைத்த மன்னராட்சி முறை அப்பாசியாக்கள் காலத்தில் அப்படியே தொடர்ந்தது. வேறுபாடு ஒன்றே ஒன்றில்தான். அவர்கள் குஸ்துன்துன்யா-வின் கைசர் வழிமுறையை பின்பற்றினார்கள். அப்பாசியாக்கள் ஈரானின் கிஸ்ரா வழிமுறையை பின்பற்றினார்கள்.

‘ஷூறா’ அமைப்பு சிதைந்து ஒன்றும் இல்லாமல் போனது! அதன் காரணமாக அங்கு ஏற்பட்ட விளைவுகள் இங்கும் ஏற்பட்டன.

பைத்துல்மால்-விஷயத்திலும் அதே உமைய்யாக்கள் வழிமுறைதான் பின்பற்றப்பட்டது. பொருள் வருகின்ற வழியிலும் ஷரீஅத்தின் நியதிகள் கவனம் கொள்ளப்படவில்லை! அதனைச் செலவளிக்கின்ற போதும் ஷரீஅத்தின் எல்லைகளைப் பற்றிய கவலை இல்லை!

நீதித்துறையில் எவ்வாறு உமையயாக்கள் தலையிட்டுக் கொண்டு இருந்தார்களோ, அதே பண்பு இங்கும் காணப்பட்டது! கலீ∴பா அல்மஹ்தியுடைய காலத்தில் அவருடைய படைத்தளபதி ஒருவருக்கும், ஒரு வணிகருக்கும் இடையிலான வழக்கொன்று நீதிபதி உபைதுல்லாஹ் பின் ஹஸனிடத்தில் வந்தது. தன்னுடைய தளபதிக்கு சாதகமாக தீர்ப்பளிக்குமாறு நீதிபதிக்கு கடிதம் அனுப்பினார் கலீ∴பா, அதை ஏற்றுக் கொள்ள மறுத்ததால் நீதிபதி பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

ஹாரூன் ரஷீதுடைய காலத்தில் ஒருவழக்கில் கலீ∴பாவின் மனைவி ஜுபைதாவின் ஆதரவாளர் ஒருவருக்கு எதிராக தீர்ப்பு கூறிய காரணத்தினால் காழி ஹ∴ப்ஸ் பின் கயாஸ் பதவி விலக நேரிட்டது!

பிரிவினை வாதமும், (ஜன்திகா) நாத்திக குழுவும

உமைய்யாக்களால் தொடங்கிவைக்கப்பட்ட இன வாதம், கோத்திரவெறி, இனவெறி, தேசிய வெறி போன்றவை அப்பாசியாக்கள் காலத்தில் தீவிரமடைந்தன! அப்பாசியாக்களின் துவக்கமே ஒரு குடும்ப ஆட்சிக்கு எதிராக இன்னொரு பரம்பரையினரின் உரிமைகளை நிலைநாட்டும் நோக்கில் தான் துவங்கியது. தங்களுடைய வெற்றிக்காக அவர்கள் அரபு குழுக்களுக்கிடையிலான பகைமையையும், அரபுக்கள், அரபல்லாதோருக்கு (அஜமிகளுக்கு) இடையிலான குரோதத்தையும், தூண்டிவிட்டு குளிர்காய்ந்தார்கள்!

'அப்பாசி' இயக்கத்தின் பிதாமகர் இப்றாஹீம் பின் முஹம்மது பின் அலி பின் அப்துல்லாஹ் பின் அப்பாஸ், குராசான் மாகாண பொறுப்பாளராக அபூ முஸ்லிம் குராசானியை நியமித்த பிறகு அவருக்கு வழங்கிய அறிவுரைகளில் ஒன்று. "அரபுக்களில் யமானி மற்றும் முழரி குலத்தாரிடையே நிலவிவரும் குலச்சண்டையை தொடர்ந்து வளர்த்து அதன் மூலம் பலனடைய வேண்டும்" என்பதாகும்!

இன்னொரு முக்கியமான அறிவுரை, "அரபு மொழிபேசும்

எவனையும் விட்டு வைக்காதே!" என்பதாகும் . ஐந்து சாணுக்கு மேல் வளர்ந்துள்ள அரபுச்சிறுவன் எவனைப்பற்றியாவது உனக்கு சந்தேகம் ஏற்பட்டால் அவனைத் தீர்த்துக்கட்டிவிடு!"

இந்த மாதிரியான செயற் முறையினால் ஏற்பட்ட விளைவு என்னவென்றால் உமைய்யாக்கள் காலத்தில் அவர்களுடைய அரபு இனவெறியின் காரணமாக அரபு அல்லாதவர்கள் (அஜமிக்கள்) மனங்களில் நீறுபூத்த நெருப்பாக இருந்துவந்த இனப்பற்று அப்பாசியாக்கள் காலத்தில் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அது அரபு இனவாதத்திற்கு எதிராக மட்டும் கிளம்பவில்லை. மாறாக, ஒட்டுமொத்த இஸ்லாத்திற்கே எதிரான ஒன்றாக 'ஜன்திகா' இயக்கமாக உருவெடுத்தது.

அரபு அல்லாதோர் மத்தியில் இனப்பற்றும், இனப்பெருமையும் முன்பிருந்தே இருந்துவந்தன. இஸ்லாமியக் கொள்கை அரபுப் பாலைவனத்தை விட்டு தாண்டி வெளியே அடியெடுத்துவைத்து, அரபு அல்லாதவர்கள், அரபியர்களால் வெற்றிகொள்ளப்பட்டபோதே அவர்கள் ஒரு மாதிரியான தாழ்வுமனப்பான்மைக்கு ஆளானார்கள். தங்களைத் தாமே இழிவாகக் கருதினார்கள். ஆயினும், இஸ்லாத்தினுடைய நீதி நெறிக்கொள்கை, சமத்துவம், சஹாபாக்கள், தாபிஈன்கள், மற்றும் ஏனைய உலமாப்பெருமக்கள், மார்க்க அறிஞர்களுடைய நேரிய நடைமுறைகள் அவர்களுடைய காயங்களை ஆற்றியதோடு மட்டுமல்லாமல் உலகளாவிய முஸ்லிம் உம்மத்தோடு அவர்களை ஒன்றிப் பிணையவும் வைத்தது.

அதே விதமாக அதைப் போன்றே முஸ்லிம் ஆட்சியாளர்களும் இஸ்லாமிய ஆட்சிமுறையை கூடக்குறையாமல் செயற்படுத்தி இருந்தார்களென்றால் அரபு அல்லாதோருக்கு இத்தகைய இனவாதமோ தாங்கள் தனிமைப்படுத்தப்பட்டு விட்டோம் என்கிற தாழ்வு உணர்வோ ஒருபோதும் தோன்றி இருக்காது.

ஆனால் அப்படி நடைபெறவில்லை. மாறாக உமைய்யாக்கள் அரபு தேசிய வெறியை பாலூட்டி வளர்த்தார்கள். (இதைப்பற்றி ஏற்கனவே கண்டோம்) அரபு அல்லாதோரை கீழ்த்தரமாக நடத்தினார்கள்.

அதன் எதிர்விளைவாக அவர்களிடையேயும் இனப்பற்று வெறியாக உருவெடுத்தது. அப்பாசியாக்கள் தங்களது அரசியல் இலாபங்களுக்காக இதனை மேலும் பயன்படுத்தியதன் மூலம் இவ்வெறி கிளர்ந்தெழுந்து வளரத் துணை நின்றார்கள். 'நம்முடைய கட்டிலில் அமர்ந்தால், நம்முடைய பேச்சு அங்கு எடுபடும். அரபியர்களின் ஆட்சி அடியோடு ஒழிந்துபோகும்! என்ற எண்ணத்தில் தான் அரபு அல்லாதோர் அப்பாசியாக்களின் புரட்சிக்கே துணை நின்றார்கள் அவர்கள் என்ன நினைத்தார்களோ அது அப்படியே நிறைவேறியது.

அல்ஹாஜிஸ் கூறுவதாவது 'அப்பாசியாக்களின் ஆட்சி உண்மையில் ஒரு குராசானி ஆட்சியாகத்தான் விளங்கியது!'

மன்சூருடைய காலத்தில் தளபதிகள், ஆளுநர்களில் பெரும்பான்மை பொறுப்புகளில் அஜமிக்களே அரபு அல்லாதோரே நிறைந்திருந்தார்கள். அரபுக்களின் மேலாண்மை அடியோடு அழிந்து போனது!

'அல்ஜிஹஷ்யாரி' தம்முடைய 'தாரீக்குல் வுஜரா' (அமைச்சர்களின் வரலாறு) எனும் நூலில் மன்சூருடை அதிகாரிகளின் ஒரு முழு பெயர்ப்பட்டியலையே தருகிறார். அது முழுக்க, முழுக்க அஜமிகளின் பட்டியலாகும்.

அரபு அல்லாதோர் அரசியல் ஆதிக்கம் பெற்றதன் விளைவாக 'ஷஊபிய்யத்' (அரபுகளுக்கெதிரான பிரிவினைவாதம்) தலைதூக்கியது. அது வெறுமனே ஒரு இனப் பற்று என்கிற அளவில் நிற்காமல் 'ஜன்திகா', 'இல்ஹாத்' (நாத்திகவாதம்) 'இபாஹிய்யத்' (மனிதன் குற்றங்ளைச் செய்யாமல் இருக்கும், நன்மைகளையே செய்யும் ஆற்றல் பெற்றவன் அல்லன் என்று கூறும், உலக ஆசைகளில் மூழ்கிப் போவதை ஆதரிக்கும் பிரிவு) என்ற கிருமிகளையும் கூடவே கொண்டு வந்தது.

'ஷஊபி' இயக்கத்தின் ஆரம்பம் 'அரபுக்களுக்கு, அரபு அல்லாதோரை விட எவ்வித சிறப்போ, மேலாண்மையோ இல்லை' என்பதில் தொடங்கி அரபுகளுக்கெதிரான ஓர் இயக்கமாக, அரபுக்களை கேவலப்படுத்துவதில் சென்று முடிந்தது.

குறைஷிகள் உட்பட அரபுக்களின் ஒவ்வொரு குலத்தாரையும் கேவலப்படுத்தும் புத்தகங்கள் எழுதப்பட்டன. இப்னுந் நதீம் எழுதியுள்ள 'அல்..பிஹர்ஸத்' எனும் நூலில் அதை விரிவாகக் காணலாம். நடுநிலை கொண்ட (!?) ஷஊபிக்கள் இத்தோடு நின்று கொண்டார்கள். ஆனால் தீவிரவெறிபிடித்த ஷஊபிக்கள் அரபுக்களை தாண்டி இஸ்லாத்தின் மீதே தாக்குதலை தொடங்கினார்கள். அரபு அல்லாத அதகாரிகளும், அமைச்சர்களும், செயலாளர்களும், (குத்தாப்- *Secratories*), படைத்தளபதிகளும், அவர்களுக்கு தூபம் போட்டார்கள்.

அல்ஹாஜிஸ் கூறுவதாவது: 'இஸ்லாத்திற்கு எதிராக சந்தேகங்கொண்ட பலபேர் 'ஷஊபிய்யத்' தில் சென்று சேர்ந்தார்கள். அரபுக்களிடமிருந்து வந்தது என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் இஸ்லாத்தையும் வெறுத்தார்கள்!

அவர்கள் மானி, ஜராதஷ்த், முஸ்தக் போன்ற கொள்கைகளை மறுபடி உயிர்ப்பித்து, வளர்க்க துவங்கினார்கள். மானி என்பது - கி.பி 215-276 இடையிலான காலத்தில் வாழ்ந்த புகழ் பெற்ற ரோமானிய ஓவியனாவான். இவன் தன்னை நபி என்றும் தனது ஓவியத் திறமையை இறை அற்புதம் என்றும் கூறியவன்.

இவர்கள் நன்மைக்கு ஒரு கடவுள் தீமைக்கு ஒரு கடவுள் என்ற இரு கடவுள் கோட்பாட்டினர்.

அவர்கள் அரபு அல்லாதோரின் கொள்கைகள். கலை, அரசியல் பண்பாட்டின் புகழ்பாடத் தொடங்கினார்கள். கவிதைகள் என்ற போர்வையில் பாவங்களையும், ஒழுக்க சீர்கேடுகளையும் பரப்பி வந்தார்கள். தீனை, அதன் கட்டுப்பாடுகளை விமர்சிக்கவும், கேலி செய்யவும் துவங்கினர். மது, மாதுவின் பக்கம் மக்களை அழைத்தனர் உலகப் பற்றற்ற தன்மை (ஜுஹ்து) தக்வா போன்றவற்றை கிண்டல் செய்தனர். ஆ..கிரத், மறுமை, சொர்க்கம், நரகம் பற்றி பேசுவோரை அவமானப்படுத்தினர். முஸ்லிம்களின் மார்க்கம் சீர்கெட்டுப் போகவேண்டும் என்பதற்காகவே அவர்களில் பலபேர் பொய்யான ஹதீஸ்களை இட்டுக்கட்டவும் செய்தனர். இப்னு அபுல் அப்ஜா என்ற ஒரு ஜன்தீக் கைது செய்யப்பட்டபோது அவன் நான்காயிரம் ஹதீஸ்களை இட்டுக்கட்டி உள்ளதாக ஒப்புக் கொண்டான். அவ்றில்

ஹலாலை ஹராமாக்கியும், ஹராமை ஹலாலாக்கியும், இஸ்லாமியச் சட்டங்களில் குளறுபடி செய்துள்ளதாக ஒப்புக் கொண்டான். மன்சூருடைய காலத்தில் கூஃபாவின் ஆளுநராயிருந்த முஹம்மது பின் சுலைமான் பின் அலி அவனுக்கு மரணதண்டனை விதித்தார்.

யூனுஸ் பின் அலி ஃபருஹ் என்ற இன்னொரு ஆசாமி இஸ்லாம், மற்றும் அரபுக்களை திட்டியும், கேவலப்படுத்தியும் நூல் ஒன்றைப் புனைந்து ரோமானிய அரசவையில் சமர்ப்பித்து பொற்கிழி பெற்றான்.

இதே பாணியில்தான் இந்த தசாப்தத்தில் சல்மான் ருஷ்டி பெருமானாரை கிண்டல் செய்ததும், இஸ்லாத்தை நையாண்டி செய்ததும் எழுதிய சாத்தானிய வசனங்கள் இஸ்லாத்தின் எதிரிகளால் பெரிதும் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையும், அதற்கு எதிராக எந்தவொரு இஸ்லாமிய ஆட்சியாளனும் குரல் எழுப்பாமல் மௌனித்து அதற்கு கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அனுமதி அளித்தவிடயத்தையும் கொஞ்சம் நினைத்துப் பார்க்கவும்.

அல்ஹாஜிஸ் தன்னுடைய 'ரஸாயில்'- தொகுப்பில் அரபல்லாத அரசு செயலர் (காதிபுகள்)களின் நிலையை வர்ணித்துள்ளார். அவர்கள் குர்ஆனைத் தொகுத்துள்ள முறையில் குறை கண்டனர்: சந்தேகப்பட்டனர்: சஹாபாக்களின் மேன்மையை அவர்கள் என்னவோ ஒத்துக்கொண்டனர். ஆனால், காழி ஷுரைஹ், ஹசன பசரி போன்றோர் பெயர்கள் வருகையில் ஆட்சேபனை தெரிவித்தனர்: அவர்களை குறை கண்டனர். அதே சமயம் இரத்ஷேர் பாப்கான், நவ்ஷேர்வான் போன்றோரின் அரசியல் கோட்பாடுகளை வானளாவப் புகழ்ந்தனர்.

அக்காலகட்டத்தின் அரபு அல்லாதோரில். புகழ்பெற்றவர்கள் எல்லாம் 'ஜன்தீக்'குகளாகவே இருந்தனர் என்று அபுல் அலா அல்மஅர்ரி கூறுகிறார். உதாரணத்திற்கு அவர் திஃபல், பஷ்ஷார் பின் புர்தி அபு நுவாஸ், அபூமுஸ்லிம் குராசானி போன்றோரை இனங்காட்டுகிறார்.

வெறுமனே இவர்கள் கொள்கையில் மட்டும் குழப்பங்களை ஏற்படுத்தவில்லை. அத்தோடு, ஒழுக்கச் சீர்கேடுகளையும் முனைந்து நின்று பரப்பினர். ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறுவது அவர்களின்

இயல்பாக ஆகிப்போனது. இப்னு அப்து ரப்பிஹி கூறுகிறார்: 'விபச்சாரம், குடி, லஞ்சம் ஆகியவை இல்லாமல் ஒரு ஜன்திக் இருக்கவே மாட்டான் என்பது மக்கள் எல்லாம் அறிந்த ஒன்றாக இருந்தது!

இந்த ஃபித்னா மன்சூர் உடைய காலத்தில் (ஹிஜ்ரி 136-158 கி.பி. 754-775) வானோங்கி வளர்ந்து நின்றது. கொள்கைகள். ஒழுக்க வாழ்வில் குழப்பங்களை ஏற்படுத்தியதோடு நில்லாமல் அரசியல், கூட்டு வாழ்வின் அஸ்திவாரத்தையே ஆட்டங்கொள்ள வைக்கும் அளவு வலுப்பெற்றது.

மன்சூரை அடுத்து பொறுப்புக்கு வந்த அல்மஹ்தி இதன் 'வலு'வினை உணர்ந்து கலங்கி நின்றார். அடியோடும், வேரோடும் இதனை பிடுங்கி எறியும் முயற்சிகளில் அவர் ஈடுபட்டார். உலமாக்களின் ஒரு கூட்டத்தாரிடம் ஜன்திக்கா-வினரோடு விவாதம் புரிந்து உண்மையை நிலைநாட்டும்படியும், அவர்களுக்கெதிரான நூற்களை எழுதி வெளியிடும்படியும் அவர் உத்வேகப் படுத்தினார்.

அதற்கொனவென்று 'உமருல் கல்வாதீ' என்ற ஓர் அமைப்பையும் நிறுவினார். ஜன்திக்கா-களை வேரோடு இல்லாதெழிப்பதே அதன் மையப்பணியாக இருந்தது.

ஜன்திக்கா-களின் தீவிரத்தை அவர் எந்த அளவு உணர்ந்திருந்தார் என்பதை அவர் தன்னுடைய மகன் அல்ஹாதி-க்கு அளித்த உபதேசங்களிலிருந்து அறிலாம்.

'என்னுடைய மகனே! எனக்குப்பிறகு ஒருவேளை ஆட்சிப் பொறுப்புக்கு நீ வந்தால் 'மாநி-யைப் பின்பற்றுபவர்களை ஒருக்காலும் விட்டுவைக்காதே! இவர்கள் ஆரம்பத்தில் என்னவோ நல்லபண்புளைப் பற்றித்தான் மக்களிடம் பேசுவார்கள். தீமையை விட்டு விலகி இருங்கள்! உலகப் பற்று இல்லாமல் இருங்கள்! மறுமைக்காகவே உழைத்திடுங்கள்! என்றெல்லாம் கூறுவார்கள். ஆனால் நாட்கள் செல்ல செல்ல வேறு பல விஷயங்களையும் கூறுவார்கள் மாமிச உணவு ஹராம்: (புலால் உண்ணாமை) தண்ணீரை தொடக் கூடாது (அதாவது குளிக்கவே கூடாது) எந்த பிராணிக்கும் எத்தகைய தீங்கும்

செய்யக்கூடாது. (ஜீவ காருண்யம்) என்றெல்லாம் கூறுவார்கள். இப்படியாக இரு கடவுட்கொள்கையை (நன்மைக்கு ஒரு கடவுள், தீமைக்கு வேறு கடவுள்) நோக்கி மக்களை இழுத்துச் செல்வார்கள்! கடைசியில் அவர்கள் கூடப் பிறந்த அண்ணன், தங்கைக்குள்ளேயே கல்யாணம் செய்து கொள்ளலாம் என்பார்கள்: தன்னுடைய மூத்திரைத்தை சேகரித்து குளிப்பதையும் ஹலால் என்பார்கள்: தவறான வழியில் (முளாலத்) வளர்ப்பதற்காகவே குழந்தைகளை திருடுவார்கள்!"

வெளிவேஷத்தில் முஸ்லிம்களாகவும், உள்ளுக்குள் எவ்வாறு தமது கொள்கைவெறியர்களாகவும் ஜன்தீக்கா-கள் பசுத்தோல் போர்த்திய புலிகளாக இருந்தனர் என்பதை இந்த உபதேசம் தெளிவாக்குகின்றது. இந்தப் புற்றுநோய்க்கு மூலகாரணமே மன்சூர் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கிரேக்க, பார்ஸி புத்தகங்கள்தாம் என்று மஸ்வூதி கூறுகிறார். மேலும், இப்னு அபில் அவ்ஜா, ஹம்மாத் அஜ்ரத், யஹ்யா பின் ஸியாத், முதீ·.பின் இயாஸ் போன்றோரின் நூற்கள் இதை மேலும் விஷப்படுத்தின.

உம்மத்தின் எதிர் விளைவு

கிலா·.பத்திற்குப் பதிலாக மன்ராட்சி வந்ததால் ஏற்பட்ட விளைவுகள் இவை! உம்மத்தையும், அதன் கருத்துக்களை, ஆலோசனைகளைப் புறக்கணித்து விட்டு ஒரு தனி நபரோ, குடும்பமோ, குழுவோ ஆட்சிக்கு வருவதோ, வலுக்கட்டாயமாக அதனை அடைய முயற்சிப்பதோ என்ன, என்ன விளைவுகளை ஏற்படுத்தும் என்று கண்டோம்.

இத்தகைய தவறினை ஆரம்பித்தவர், தன்னுடைய இந்த செயல், இதுபோன்ற மோசமான விளைவுகளையெல்லாம் ஏற்படுத்தும் என்று உண்மையிலேயே உணராமல் இருந்த போதிலும், அவருடைய எண்ணத்தில் இதுபோன்ற விளைவுகள் வருவதற்கான அறிகுறிகள் இடம்பெறாமல் போயினும், அதன் இயற்கையான விளைவுகளாக இம்மோசமான நிகழ்ச்சிகள் அரங்கேறிவிட்டன!

ஆயினும், இத்தகைய அரசியல் மாற்றத்தினால் இஸ்லாமிய

வாழ்வியல் கொள்கையே அடியோடு செயலிழந்து போனது என்று எண்ணுவது மாபெரும் தவறாகும். 'இஸ்லாம் வெறுமனே முப்பதாண்டுகள்தான் உயிரோட்டத்துடன் திகழ்ந்தது' என்பது நுனிப்புல் மேய்பவர்களின் கருத்தாகும், உண்மையான நிலையோ அதற்கு நேர்மாற்றமானது. இத்தகைய அரசியல் புரட்சியை உம்மத் எதிர்கொண்டபோது இஸ்லாமிய சமூக அமைப்பு விழாமல் அதனுடைய சமூக உணர்வு எவ்வாறு தடுத்துக் கொண்டது? எத்தகைய மாற்று ஏற்பாடுகளை அது மேற்கொண்டது என்பதை இனிவரும் சிலவரிகளில் காண்போம்.

தலைமையின் பங்கீடு (இருவேறு தலைமை)

கிலா·.பத்தே ராஷிதா அமைப்பு நபிகளார் (ஸல்) அவர்களின் முழுமையான பிரதிநிதித்துவமாக விளங்கியது என்பதை முன்பே நாம் கண்டோம். அவர்கள் நேர்வழி நின்று கலீ·.பாக்கள் (கலீ·.பா முர்ஷித்) விளங்கினார்கள் வெறுமனே அரசை நடத்துவது, போர்களைப்புரிவது எல்லைகளைக் காப்பது மட்டுமே அவர்களுடைய பணிகளாக இருக்கவில்லை, மாறாக, அல்லாஹ்வுடைய தீனை முழுமையாக நிலைநாட்டுவதே அவர்களுடைய இலக்காக இருந்தது. அரசியலுக்கு மட்டுமே வழிகாட்டியாக இல்லாமல் கொள்கை, மார்க்கம், ஒழுக்கம், ஆன்மீகம், சட்டம், நீதிநெறி. கலாச்சாரம், பண்பாடு, பயிற்சி, நடைமுறை அழைப்புப்பணி என்று அனைத்துத்துறைகளிலும் வழிகாட்டும் ஒருங்கிணைந்த மையத் தலைமையாக அது விளங்கியது! எவ்வாறு இஸ்லாம் ஒரு முழுமையான கொள்கையாக உள்ளதோ, அதைப் போன்றே தலைமையும் முழுமையான, முன்னோடியான தலைமையாக விளங்கியது. மக்கள், தலைமையின் மீது பரிபூரண நம்பிக்கை கொண்டு தங்கள் சமூகவாழ்வில் இயல்பாக ஈடுபடலாயினர்.

இதனை அடுத்து வந்த மன்னராட்சி இத்தகைய தகுதிகள் எதனையும் பெற்றிருக்கவில்லை. ஒரே ஒரு நாள் கூட அதனை முழுமையான தலைமையாகக் கருத மக்கள் முன்வரவில்லை.

மன்னர்கள் செய்த அலங்கோலங்களின் காரணமாக மக்கள் மன்றத்தில் அவர்களுக்கு ஒழுக்க அடிப்படையில் எவ்வித மரியாதையும் இருக்கவில்லை. அவர்கள் கட்டாயப்படுத்தி தங்களுக்கு முன்னால் மக்களை குனியவைத்தார்கள்: அது அவர்களால் முடிந்தது! அவர்கள் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மனிதர்களை வாள் முனையில் தங்களது விருப்பங்களை பூர்த்தி செய்வதில் ஈடுபடுத்தினார்கள். அது அவர்களால் முடிந்தது! ஆனால், அவர்களால் மக்களுடைய மனங்களை வென்றெடுக்க இயலவில்லை! அவர்களை மார்க்கத்தின் இமாம்களாக ஏற்றுக்கொள்ள மக்களும் தயாராக இல்லை!

இத்தகைய புதியதோர் சூழ்நிலையில் முஸ்லிம்களின் தலைமை இருகூறாகப் பிரிந்து போனது.

அரசியல் தலைமை

ஒன்று அரசியல் தலைமை வாளின் துணை கொண்டு மன்னர்கள் வலுக்கட்டாயமாக பறித்துக் கொண்ட அரசியல் தலைமை. வாளின் துணையோடுதான் அது ஏற்பட்டது. எனவே, வாளின் துணையின்றி அதனை அகற்றவும் இயலவில்லை. வேறு வழியின்றி மக்களும் அதன் ஒப்புக் கொண்டார்கள் வெறுத்து ஒதுக்க இது ஏதோ கா..பிர்களின் தலைமை கிடையாது: அவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள். இஸ்லாமிய சட்டங்களை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இறைவேதமும் அண்ணலாரின் சுன்னாவும் தான் இஸ்லாத்தின் அடிப்படைகள் என்பதை அவர்கள் மறுக்கவில்லை. பொதுவான நடைமுறைகள் அங்கு ஷரிஅத்தின் அடிப்படையிலேயே நடைபெற்றன. அவர்களுடைய அரசியல்மட்டும் தான் இஸ்லாத்தை விட்டு விலகியிருந்தது.

அங்கு இஸ்லாத்தை நிலைநாட்டவும் அவர்கள் தயாராகவில்லை. எனவே அரசு அளவில் மக்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களின் ஆட்சியின் கீழ் அரசாங்க நடைமுறை தொடரட்டும். நாட்டடில் ஜும்ஆ, ஹஜ் போன்றவை அவர்கள் தலைமையிலே நிறைவேறட்டும் என்று மக்கள் விட்டுவிட்டார்கள்.

நீதிமன்றங்களில் இஸ்லாமிய அடிப்படையிலான தீர்ப்புகள் வழங்கப்பட்டுவந்தன. அவர்களை முழுமையான தலைவர்கள் என்று எண்ணியோ, நேர்வழி நிற்கின்ற, நேர்வழி நடத்துகின்ற கலீ..பாக்கள் என்று எண்ணியோ, சத்திய பாதையை விட்டு விலகாது நிற்கும் சீரிய இமாம்கள் என்று எண்ணியோ, சஹாபாக்களும், தாபிஈன்களும், தபஅத் தாபிஈன்களும் அவர்களுடைய கரங்களில் பைஅத் செய்யவில்லை. உம்மத்தின் தற்போதையை அரசியல் தலைமை இவர்கள் தாம் என்ற நினைப்பில்தான் பைஅத் செய்தார்கள்.

மார்க்க தலைமை

இன்னொரு பிரிவு மார்க்க (தீனுடைய) தலைமை ஆகும். எஞ்சிய சஹாபாக்களும், தாபிஈன்களும், தபஅ தாபிஈன்களும், மார்க்க சட்டமேதைகளும், ஹதீஸ் விரிவுரையாளர்களான முஹத்தி சீன்களும், சமூக சான்றோர்களும் முன்நின்று இப்பொறுப்பினை செம்மையுடன் நிறைவேற்றினார்கள். இது ஒன்றும் அமைப்பு ரீதியில் ஒருங்கிணைத்த தலைமை அல்ல! ஏதோ ஒரு இமாமை தமக்கு தலைவராக கொண்டும் அவர்கள் செயற்படவில்லை அல்லது அவ்வப்போது கூடி, விவாதித்து மக்கள் பிரச்சினைகளில் தெளிவான தீர்ப்புகளை வழங்கும் கமிட்டியோ, பேரவையோ அமைக்கப்படவில்லை. இவர்கள் அனைவரும் ஆங்காங்கே தனிப்பட்ட முறையில் சேவையாற்றி வந்தார்கள் அவர்களிடத்தில் ஒழுக்க மாண்பு, மரியாதையைத் தவிர்த்து வேறு எந்த பலமும் இருக்கவில்லை. ஆனால், இவர்கள் அனைவரும் ஒரே மரத்தின் கீழ்-கிதாபுல்லாஹ், சுன்னத்து ரசூல்-நின்றிருந்தார்கள். தூய எண்ணத்தோடு மார்க்க வழிகாட்டுதலை வழங்கிக் கொண்டிருந்தார்கள். எனவே, சிறுசிறு கருத்து வேறுபாடுகள் அவர்களிடையே காணப்பட்டபோதும் அவர்கள் அனைவரின் இயல்பும் ஒன்றுபோலவே இருந்தது. நாட்டின் பலபாகங்களில் அவர்கள் சிதறியிருந்த போதிலும் ஒரே சிந்தனையில் வார்த்த ஒழுக்க தலைமையை அவர்களால் உம்மத்திற்கு அளிக்க முடிந்தது.

இரு தலைமைகளுக்கிடையிலான தொடர்பு

இவ்விரண்டு தலைமைகளுக்கிடையில் உதவிசெய்வது

குறைவாக அல்லது உதவுதல் என்பதே இல்லாமல் இருந்தது. மாறாக மோதல் நிலவியது. அரசியல் தலைமை தன்னுடைய உதவிகளையே அளித்தது. அவர்கள் அளித்த உதவிகளிலும் மிகக்குறைவான வற்றையே தீனுடைய தலைமை பெற்றுக் கொண்டது. ஏனென்றால் அவ்வுதவிகளுக்கு பகரமாக அரசியல் தலைமைக்கு அளிக்கவேண்டிய 'விலையை அவர்களுடைய ஈமானோ, மனச்சாட்சியோ ஒப்புக் கொள்ளவில்லை! அதுபோன்றே, தீனுடைய தலைவர்களில் யாராவது அதிகார வர்க்கத்தினரை அண்டியிருந்தாலோ, அங்கிருந்து ஏதேனும் மானியம், உதவியைப் பெற்றாலோ அவர்கள் மீதான மதிப்பு மக்களிடமிருந்து எடுபட்டுப் போகும் சூழ்நிலை நிலவியது. அரசர்களை விட்டு விலகி இருத்தல், அவர்களுடைய சித்திரவதைகள், துன்பங்களை கண்டு நிலைகுலையாமை, இவையே மார்க்கத் தலைமைக்குரிய தகுதிகளாக மக்களிடத்தில் கணிக்கப்பட்டன. இந்தத் தகுதிக்கோட்டை தாண்டி யாராவது சென்றால் மக்கள் அருகாமையில் இருந்தும் அவருடைய ஈமானில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை: அவர் எத்தகைய சமரசத்திற்கும் விலை போய்விடவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பிறகு தான் மக்கள் அவரை ஏற்றுக் கொண்டார்கள்.

மக்களை விட்டுவிடுங்கள். ஏற்கனவே தலைமைக்கு விலை போனவர்கள் கூட இத்தகையவர்களை தங்களைப் போன்றே விலைபோனவர்களை, அதிகார பலத்திற் பயந்து தமது மார்க்கத் தலைவர்களாக ஒப்புக் கொள்ளவோ, அவர்கள் வழி நடக்கவோ தயாராக இல்லை!

இவ்வாறு ஹிஜ்ரி முதல் நூற்றாண்டின் மத்தியிலேயே தீனுடைய தலைமை, அரசியல் தலைமையிலிருந்து வேறுபட்டு வேறுவழி செல்லத் துவங்கியது.

இஸ்லாத்தின் உண்மையான இலக்கு

இவ்வாறு தலைமை இரண்டாகிப் போவதால் இஸ்லாத்தின் உண்மையான இலக்கினை ஒருபோதும் அடைய இயலாது. அரசியல் தலைமையை விட்டு விலகி இஸ்லாமிய மாண்புகளை, மதிப்பீடுகளை காப்பதற்காக மார்க்கத் தலைமை செய்த முயற்சிகள் மறுக்க

முடியாதவை. இன்று உலகில் இஸ்லாத்தை விளங்கிக்கொள்ள முடிகின்றது என்றால் இதற்கொல்லாம் அவர்கள்தாம் காரணம். ஆனால், உம்மத்துக்கென்று ஒன்றுபட்ட ஒரு தலைமை இருந்தால்தான் இஸ்லாத்தின் நோக்கம் நிறைவேறும். "கிலா∴பத்தே ராஷிதா" காலத்தைப் போன்று அரசியல் தலைமையும், மார்க்கத் தலைமையும் ஒன்றாகவே இருக்கவேண்டும். தன்னுடைய எல்லா வளங்களையும், ஆதாரங்களையம் அரசியல் தலைமை தீனை நிலை நாட்டுவதற்காக செலவிடவேண்டும். மாறாக தீனை நிலை நட்டுவதே அதன் குறிக்கோளாக மாறிப்போக வேண்டும் இத்தகைய சூழ்நிலை ஒரு இருநூறு, இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கேனும் நிலவுமானால் உலகில் கு∴ப்ரு என்பதே இல்லாமல் போய்விடும். அல்லது இருந்தாலும் பல்பிடுங்கப்பட்ட பாம்புபோல இருக்கும்.

பின்னுரை

இந்தியாவில் குரங்கு வேடர்கள் குரங்குகளைப் பிடிப்பதற்கு ஒரு பெட்டியைப் பயன்படுத்துகின்றனர். குரங்குகள் தங்கள் கைகளை உள்ளே விடும் அளவிற்கு அந்தப் பெட்டியின் மேற்புறத்தில் ஒரு துவாரம இருக்கும்.

பெட்டியின் உள்ளே சில விதைகள் போடப்பட்டிருக்கும்

குரங்கு இந்த விதைகளை அள்ளி எடுக்கும்.

பிறகு அது தனது கைகளை வெளியே எடுக்க முயற்சிக்கும். ஆனால், அதனுடைய கை நிறைய விதைகள் உள்ளதால் அதனால் தனது கையை துவாரத்தில் இருந்து வெளியே எடுக்க முடியாது.

இப்போது குரங்கிற்கு இரண்டு வாய்ப்புகளே உள்ளன. விதைகளை கீழே போட்டு விட்டு தப்பிக் கொள்வது அல்லது விதைகளைப் பிடித்துக் கொண்டே வேடர்களிடம் சிக்கிக்கொள்வது.

ஆனால், ஒவ்வொரு முறையும் குரங்குகள் விதைகளை விடாமல் பிடித்துக் கொண்டு வேடர்களிடம் சிக்கிவிடுகின்றன.

எமது மனப்பாங்குகளுக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் பலியான நாம் இந்தக் குரங்குகளில் இருந்து ஒன்றும் பெரிதாக வேறு படுவதில்லை.

நாம் சிலவற்றைப் பிடித்துக் கொண்டு விடாதிருக்கிறோம். அவை நம் வாழ்வில் எமது வெற்றிக்கு பெரும் தடையாக இருக்கின்றன.

"நான் இதை ஏற்க முடியாது. ஏனென்றால்......." என்று சொல்லி எம்மை நாமே நியாயப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எவையெல்லாம் "ஏனென்றால்" என்பதற்கு பின்னால் வருகின்றனவோ அவையெல்லாம் "விதைகள்" ஆகும். அவற்றை நாம் விடாது பிடித்துக் கொண்டிருக்கிறோம்.

அவை நம்மை பின் தங்க வைத்து விடுகின்றன.
அதனால் நாம் நமது சமூகத்தையே பின் தங்க வைத்துக் கொணடிருக்கிறோம்.

ஒருவன் வெற்றி அடைவதும் அல்லது தோல்வி அடைவதும் அவனது செயல்களின் விளைவுகளிலே தங்கியிருக்கிறது.

அவனது செயல்கள் அனைத்தும் அவனது மனப்பாங்கின் வெளிப்பாடாகவே எப்பொழுதும் அமைந்திருக்கின்றன.

துரதிஷ்டவசமாக, அவனது மனப்பாங்கை தீர்மானிக்கும் காரணிகளாக அவனுடைய சூழல், அனுபவம், கல்வி ஆகியவையும் இத்துடன் மிகவும் உறுதியான காரணியாக அவனுக்கு கிடைக்கின்ற செய்திகளும் அதன் மேல் அவன் கொள்கின்ற நம்பிக்கைகளும் அமைந்து, அவனது மனப்பாங்கை, பண்பியலையும் அவன் செயல்களையும் அதன் விளைவுகளையும் தீர்மானிக்கின்றன.

நாம் எமது மனப்பாங்கை மாற்றுவதன் மூலம் எங்களது செயல்களையும் அதன் விளைவுகளையும் மாற்றியமைக்க முடியும்.

கடந்து வந்த காலங்களில் எமக்குக் கிடைத்த செய்திகளில் நாம் கொண்ட நம்பிக்கையே எமது மனப்பாங்கை தீர்மானித்து இப்பொழுது நாம் அனுபவிக்கின்ற விளைவுகளுக்கு வழியமைத்து இருப்பதை எவராலும் மறுக்க முடியாது.

ரஸூல் (ஸல்) அவர்களது குடும்பத்தினரின் நல்லவர்களைப் பற்றிய தவறான, போலியான செய்திகள் எமக்குக் கிடைக்கும் போது அதில் நாம் வைக்கின்ற தவறான நம்பிக்கைகள் எமது மனப்பாங்கில் அதன் ஆளுமையை செலுத்தி அதன் மூலம் மாற்றம்

காணும் எமது பண்பியலானது எமது செயல்களை தவறாக வழி நடாத்தி தவறான விளைவுகளை எமது வாழ்க்கையில் உருவாக்குவதே நிஜம்.

இந்நிலையில் தவறான தனி நபர்களின் கூட்டாக குடும்பமும், குடும்பங்கள் இணைந்த நிலையில் ஒரு சமூகமும் அந்த சமூகம் தனது எதிர்கால சந்ததிகளையும் மிகத்தவறாக தவறான வழியில் இட்டுச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது.

குழந்தைப் பருவத்தில் எமது தலைவர்களுக்கு கிடைத்த தவறான செய்திகளில் அவர்கள் கொண்ட நம்பிக்கைகளின் செயல் விளைவுகளாக எமது நல்ல தலைவர்கள்: முஸ்லிம்களைப் பிளவு படுத்தி, முஸ்லிம்களின் சொந்த தாயகத்தை ஆக்கிரமித்து இருக்கின்ற அமெரிக்காவின் அடிவருடியாக செயல் படுகின்ற சஊதி அரச குடும்பத்தினரின் ஆட்சியையும், அதன் தலைவர்களையும் போற்றிப் புகழ்ந்து துதிபாடியும், இறுதி நபித்துவத்தின் பாதுகாப்புக்கு மிகப்பெரும் பாதுகாப்பு அரணாக சுமார் நாற்பத்து இரண்டு வருடங்கள் வாழ்ந்து மறைந்த பெரியவர் ஹஸரத் அபூதாலிப் (ரழி) அவர்களுக்கு எதிராக மேடைகளில், ஜும்மா பிரசங்க மேடைகளில் நாக்கூசாமல் பேசி அதன் மூலம் ரஸூல் (ஸல்) அவர்களின் செயல்களுக்கும், அல்குர்ஆனிய வசனங்களுக்கும் இடையே ஒரு முரண்பாட்டை உருவாக்கி வருவதையும் இன்று நாம் கண்கூடாக காண முடியும்.

இந்த வகையில் தம்மை அறியாமல் திசை மாற்றப்பட்டிருக்கும் சமூகத்தின் மனப்பாங்கை மாற்றியமைத்து அந்த சமூகத்தை வெற்றியின் பால் கொண்டு செல்வது முஸ்லிம் தலைவர்களினதும், உண்மையான இறைபக்தியுள்ள தலைமைத்துவ உலமாக் களினதும் கடமையாகும்.

ரஸூல் (ஸல்) அவர்களின் குடும்பத்தின் நல்லவர்களின் பண்பியலை கேலிக்குள்ளாக்கியிருக்கின்ற சில போலித்தகவல் களின் பொய்மையை ஒவ்வொரு தனிநபர் மத்தியிலும் வெளி கொணர்ந்து அவர்களின் மனப்பாங்கை மாற்றியமைப்பதே எமது இந்த முயற்சியின் பிரதான நோக்கமாகும்.
மக்கள் பணத்திற்காக அதிகம் உழைப்பார்கள். நல்லதொரு தலைவருக்காக அதைவிடவும் அதிகமாக உழைப்பார்கள். தாங்கள்

சார்ந்திருக்கும் நம்பிக்கைக்காக, கொள்கைக்காக மிகமிக அதிகமாக பாடுபடுவார்கள்.

அந்த நம்பிக்கையின் பெருவெற்றிக்கு தனது இன்னுயிரையும் கொடுப்பார்கள் என்பதை நாம் அனுபவம் மூலமாக அறிகிறோம்.

நமது வாழ்க்கைக்கும், நடத்தைக்கும் எமது மனப்பாங்கு தான் பொறுப்பு என்கிற உண்மையை நாம் நம்பும்போது வாழ்க்கைப் பற்றிய நமது கண்ணோட்டம் மேம்படுகின்றது. எமது நடத்தையையும் அது வித்தியாசப் படுத்துகின்றது.

எமது செய்கைகளை மேம்படுத்துகின்ற உண்மையான நம்பிக்கைகளை முஸ்லிம் மக்கள் மத்தியில் பகிர்ந்து கொள்வதே எமது இலக்காகும்.

இந்த புத்தகத்தை வாசிக்கின்ற ஒவ்வொரு முஸ்லிமும், உலமாக்களும், முஸ்லிம் தலைவர்களும் இதில் ஆராயப்பட்ட செய்திகளின் உண்மையை தாங்களும் ஆராய்ந்து உணர்ந்து, ரஸுல் (ஸல்) அவர்களது குடும்பத்தவர்களின் பண்பியலை சிதைத்து சின்னாபின்னப் படுத்தியிருக்கின்ற போலிக் கருத்துகளுக்கு எதிராக தமது மனப்பாங்கை மாற்றியமைத்து, தமது ஆளுமையின், செல்வாக்கின் கீழ் உள்ள மக்களுக்கு இந்த உண்மைகளை தெளிவுபடுத்த முன்வருவார்களேயானால், அவர்களின் இந்தத் தூய முயற்சியானது நிஜமாகவே எமது சமூகத்தில் தனது செல்வாக்கை செலுத்தி எமது எதிர்கால இளம் சந்ததியினரின் மனப்பாங்கை மாற்றியமைத்து, ரஸுல் (ஸல்) அவர்களின் குடும்பத்தினரின் நல்லவர்களின் தூய்மையில் மதிப்பும் மரியாதையும் வைத்து, அக்குடும்பத்தவர்களை கௌரவிக்கின்ற செயல்விளைவுகளை அந்த இளம் சந்ததியினர் மத்தியில் வெளிக்கொணர்வது யதார்த்தமாகும்.

தீர்மானிக்க வேண்டிய வாய்ப்பு இப்பொழுது எமது கைகளில்

நாம் முன்னர் குறிப்பிட்ட குரங்குளைப் போல் விதைகளைப் பிடித்துக் கொண்டு மீண்டும் தவறு செய்வதா? அல்லது விதைகளை

விட்டுவிட்டு நாமும் விடுதலையாகி எமது சமூகத்தையும் விடுதலை செய்வதா?

இறுதியாக ரஸுல் (ஸல்) அவர்களின் குடும்பத்தினர்களின் எதிரிகளுக்கு எதிராக செயல்படுவதற்கு எம்மை தெரிவு செய்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்.

அல்ஹம்துலில்லாஹ்!

உசாத்துணை நூல்கள்

1. ஸஹீஹுல் புஹாரி
2. புனித அல்குர்ஆன் -மொழிபெயர்ப்பு - டொக்டர் முஹம்மது ஜான்
3. புனித அல்குர்ஆன் - மொழிபெயர்ப்பு - மௌலானா மௌதூதி (ரஹ்)
4. புனித அல்குர்ஆன் - மொழிபெயர்ப்பு - உத்தமபாளையம்
   மௌலானா மௌலவி எஸ்.எஸ். முஹம்மது அப்துல் காதர் (பாகவி)

5. வரலாற்று நிகழ்வுகளுடன் முஹம்மது (ஸல்) அவர்களது வாழ்க்கை
   - மார்டிங் லிங்ஸ்
6. முஹம்மது - ஸஃபியுர் றஹ்மான் முபாரக்பூரி
7. திருநபி சரித்திரம் - மர்ஹூம் மு.ந. ஹாஜி முஹம்மது ஸாஹிப்

ஆய்வுக்கு உதவிய இணையத்தளங்கள்

www.islam.pdi.com
www.hilalplaza.com
www.islam.org.com
www.alislam.org/alpha.phd
www.alislam.org/organization
www.ahlul-baith.org